தமிழகத்தில் மார்க்கோ போலோ இபுனு பதூதா

ஆசிரியர் :

எம். ஐ. மரைக்காயர்

தமிழகத்தில் மார்க்கோ போலோ, இபுனு பத்தூதா

ஆசிரியர் :

எம். ஐ. மரைக்காயர்

வெளியிடுவோர் :

எம். ஐ. மரைக்காயர்

85, தம்பு செட்டித் தெரு,

சென்னை-600 001.

முதற் பதிப்பு : மே 1981

விலை ரூ. 5-00

கிடைக்குமிடம் :

மில்லத் பப்ளிஷர்ஸ்,
16, அப்பு மேஸ்திரி தெரு,
சென்னை-600 001.

அச்சிட்டோர் :

பிறை பிரிண்டர்ஸ்,
151, அங்கப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-600 001.

அணிந்துரை

பேராசிரியர் உயர்திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள்
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

இந்தியாவிற்கும், குறிப்பாகத் தமிழகத்திற்கும் வந்த வெளிநாட்டுப் பயணிகளான மார்க்கோ போலோ, இபுனு பதூதா முதலியவர்கள் குறிக்கும் ''காயல்'' என்னும் ஊர் எது? என்பது பற்றிய ஆராய்ச்சியே இந்நூல் ஆகும். திரு. எம். ஐ. மரைக்காயர் அவர்கள் வாணிபத்துறையிலே நீண்ட நெடுங்காலம் ஈடுபட்டு செல்வம் ஈட்டி இருந்த போதிலும், அவர்கள் வரலாற்றிலே ஆழ்ந்த பற்று கொண்டவராக இருந்து வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். சிறப்பாக அவர் தம் ஆய்வுத்திறன் தமிழக வரலாற்றிலே இருந்து வந்த ஒரு விவாதத்தைத் தீர்த்து வைக்கும் வகையிலே பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மார்க்கோ போலோ கூறும் காயல் என்பது இராமநாதபுரத்திற்குத் தெற்கே 10 மைலில் கடலோரத்தில் உள்ள கீழக்கரை என்னும் ஊராகும். காயல் என்ற இதே பெயரை அடக்கிக் காயல்பட்டணம் என்பதொன்று தூத்துக்குடியை அடுத்து 18 மைலில் கடலோரத்தில் உள்ளது. இரண்டும் முஸ்லிம்கள் குடியேறி ஓங்கிய இடங்களாகும். இக்காலத்தில் காயல்பட்டணத்து முஸ்லிம்களில் பலர் காயல், காயல்பட்டணம் இரண்டையும் குழப்பிக் கொண்டு காயல் பட்டணமே பண்டைய ''காயல்'' எனக் கூறத்தொடங்கி விட்டனர். கீழக்கரை காயலின் பண்டைப் பெருமைகளையும் அக்காயலில் தோன்றிய சீதக்காதி போன்ற மாபெரு வள்ளல்களின் சீர்மைகளையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்ளும் ஆசையாலேயே அவர்கள் அவ்வாறு கூற முனைந்துள்ளனர்

போலும்! பண்டைக்காயலின் முஸ்லிம்கள் பலரும் வள்ளல் சீதக்காதியின் வழிவந்த மரபினர் பலரும் இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். எனவே காயல் எது? என்ற ஆராய்ச்சி எழவும், இது தனிப்பட்ட சிலருக்கு மட்டுமே உரிய ஒன்று அல்ல, தமிழக வரலாற்றுக்கே ஒரு பெருமையினைச் சேர்த்துத் தருவதாக அமைந்துள்ளது என்பதை இந் நூலாசிரியர் கருத்துச்செறிவோடு புலப்படுத்தியுள்ளார்.

மார்க்கோபோலோ, இபுன் பதூதா ஆகிய இருவரும் இவ்வூரைக் குறிப்பிடுகின்றனர். இருவரும் கோடிட்டுக் காட்டும் அடையாளங்களிலிருந்து அது (கீழக்கரை) காயலாகவே இருக்க வேண்டுமென விளக்கம் பெறுகிறது. மார்க்கோபோலோ சிலோன் தீவிலிருந்து அருகேயுள்ள மாபர் கரைக்கு வந்து இறங்கியவர் அதை வருணிக்கையில் தலைமன்னாரை யடுத்த அரிப்போவிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ள துறைமுகத்தை வந்து அடைந்ததாகக் கூறுகிறார். இது கீழக்கரையே ஆகும். இபுன் பதூதாவும் ஒரு அடையாளம் கூறுகிறார். மதுரையிலிருந்து பத்தன் 60 மைல் என்கிறார். தலைமன்னாரிலிருந்து 60 மைலிலும், மதுரையிலிருந்து 60 மைலிலும் உள்ள ஊர் கீழக்கரைக் காயல் ஒன்றே யாகும். இவ்வுண்மையை உறுதிப்படுத்தும் வகையிலே திருப்புல்லாணிக் கோவில் கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் பௌத்திரமாணிக்கப் பட்டணம் கீழக்கரையே யாகும். சீதக்காதி நொண்டி நாடகம் இவ்வரலாற்றாராய்ச்சிக்கு ஆக்கம் தந்துள்ளது. அங்குக் காயலை வகுதை, கீழக்கரை என்ற பெயர்களால் நொண்டி குறிக்கின்றான். புலவர் நாயகம் என்ற முஸ்லிம் புலவர் காயல்பட்டணத்திற்குரியவர். அவரே கீழக்கரையைத் தான் தென்காயல் எனக் குறிப்பிடுகின்றார். பட்டணம் என்பதையே இபுன் பதூதா பத்தன் எனக் குறிக்கின்றார் என்பதை மறுக்க முடியாது. மாணிக்கவாசகர் காலத்துப்

பாண்டிய தலைநகரான கொற்கையே பிற்காலத்தில் 'காயல்' ஆகியிருக்க வேண்டுமென நினைக்கத் தோன்று கிறது. கீழக்கரையைக் காயல் என வரலாற்று வல்லுநர் பலர் ஒப்புக் கொண்டுள்ளனர். கீழக்கரைக் காயலுக்குக் காயல்பட்டணம் என்ற பெயர் யாண்டும் காணப் பெற வில்லை.

கீழக்கரைக் காயல் பிறநாட்டுப் பயணிகள் குறிக்குமாறு முத்துக்குளிப்பதற்கும் மரக்கலங்கள் தங்குவதற்கும் இயற்கை அமைப்போடு கூடியதாக இருந்தது. மற்றும் இலங்கையி லிருந்து விரைவில் தமிழகத்தின் கிழக்குக் கரையை அடை வதற்குரிய அண்மையில் கீழக்கரை அமைந்திருந்தது. அதனாலேயே பிற நாட்டினர் தமிழகத்தின் கிழக்குக்கரையில் முதல் முதல் இறங்கும் இடமாதலால், இதற்குக் கீழக்கரை என்ற பெயர் ஏற்பட்டது. எனவே பலவற்றானும் கீழக் கரைக் காயலே மார்க்கோபோலோ, இபுன் பதூதா முதலோர் குறித்த பண்டைக்காயல் என்பது உறுதியாகின்றது என இந் நூலாசிரியர் முடிவு கூறுவது சிந்தித்து ஏற்றுக் கொள்ளத் தக்கதாக உள்ளது.

தக்க சான்றுகளுடனும், மேற்கோள்களுடனும் இந்நூலை யாத்துக் கொடுத்துள்ள திரு. மரைக்காயருக்கு தமிழக வரலாறு ஒரு விதத்திலே கடமைப்பட்டிருக்கிறது. இவர் போன்று ஆராய்ச்சி உணர்வுடன் உண்மையை வெளிக் கொணரும் ஆர்வமும் திட்பமும் இக்காலத்திற்கு மிகவும் தேவை. திரு. மரைக்காயர் இது போன்ற நூல்கள் பலவற்றை மேலும் படைக்க வேண்டுமெனக் கூறி அவர் தம் முயற்சியை மீண்டும் போற்றி வரவேற்கின்றேன்.

17—3—1981 —சை. வே. சிட்டிபாபு

பாராட்டுரை

பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள்,
தலைவர் தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

திரு. எம். ஐ. மரைக்காயர் அவர்கள் எழுதியுள்ள 'தமிழகத்தில் மார்க்கோ போலோ, இபுனு பதூதா' என்னும் இந்தச் சிறந்த ஆய்வு நூலைக் கூர்ந்து படித்தேன். ஆசிரியரின் ஆர்வமும் ஆற்றலும் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

"இன்றைய காயல்பட்டணம் (திருநெல்வேலி மாவட்டம்) மார்க்கோ போலோ குறிப்பிடும் 'காயில்' (KAEL) காயல் அல்ல. இன்றைய காயல்பட்டணம் பதினாறும் நூற்றாண்டில் ஏற்பட்ட ஊரே ஆகும். சோனகர் பட்டணமாகிய கீழக்கரையிலிருந்து மக்கள் இன்றைய (திருநெல்வேலி மாவட்ட) காயல் பட்டணத்திற்குக் குடியேறிய பிற்காலப் பட்டணமே அது. அன்றி, பழமையான 'காயல்' என்பது அது அல்ல. மார்க்கோப் போலோ குறிப்பிடும் 'காயல்' கீழக்கரை- இதுவே கொற்கைத் துறைமுகப்பட்டினம். இப்னு பதூதா 'பத்தன்' என்று அழைத்த பௌத்திர மாணிக்கப் பட்டினமும் இதுவே". (பக்கம் 62-3)

மேற்குறிப்பிட்ட கருத்தே இவ்வாய்வு நூலின் இலக்கு; மையம். இதை உட்கொண்டு ஆசிரியர் அரும் பாடுபட்டு அசைக்கமுடியாப் பற்பலச் சான்றுகளைக் கொண்டு இந்நூலைப் படைத்துள்ளார். இந்நூலின்

பின்னிணைப்பாக உள்ள கல்வெட்டுகளையும் பட்டயங்களையும் படிக்கும்போது அவற்றின் தமிழ் உள்ளத்தை அள்ளுகிறது.

உண்மை உருமாறிப் போகக்கூடாது என்ற ஆசிரியரின் வரலாற்று ஆய்வு உள்ளத்தை வாழ்த்தி வணங்குகின்றேன்.

ந. சஞ்சீவி
12—2—81

அணிந்துரை

அல்ஹாஜ் டாக்டர் எம். எம். உவைஸ்
பேராசிரியர்,
இஸ்லாமியத் தமிழ் இலக்கியத் துறை,
தமிழ் மொழிப் புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை-625 021.

வகுதை, கொற்கை, அனுத்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான் பட்டணம், பௌத்திர மாணிக்கப்பட்டணம், வச்சிரநாடு, செம்பிநாடு, சேவிக்கரை, கிற்கிராப்பட்டணம், கிர்க்கிரி, காயல், காயல்நகர், காயல்துறை, தென்காயல் என்னும் பெயர்களால் தொன்றுதொட்டு வழங்கப்பட்டது கீழக்கரை. பல்வேறு காலங்களில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது கீழக்கரை. இத்தனை பெயர்களைக் கொண்டு ஓர் இடம் வழங்கப்படுவது அதிசயமாக இருக்கலாம். ஆனால் இந்நூல் இதனை வலியுறுத்துகிறது. இவற்றுள் பகுதாது என்பதே வகுதை என மருவி உள்ளது. கிற்கிரா (ப்பட்டணம்), கிர்க்கிரி என்பன அறபு மொழியில் இருந்து பெறப் பட்டவை. இவை ஒவ்வொன்றும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றும் கீழக்கரையின் மறுபெயர்களே என நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு நூல்களிலிருந்தும் கல்வெட்டுக்களிலிருந்தும், கஸட்டியர்களிலிருந்தும் இவற்றுக்கான சான்றுகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. விதந்தோதப்பட்டுள்ளன. வலியுறுத்தப்பட்டுள்ளன.

பௌத்திர மாணிக்கப்பட்டணம் என்னும் நீண்ட பெயரை இபுனுபத்தூத்தா போன்ற மேலைநாட்டுப் பயணிகள் 'பத்தன்' என்று சுருக்கமாக அழைத்து இருக்கலாம் என்னும் கருத்தும் இங்கே தரப்பட்டுள்ளது. வரலாற்று அடிப்படையிலாயினும் சரியே, இலக்கிய அடிப்படையிலாயினும் சரியே, பௌத்திர, மாணிக்கப்பட்டணம் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும்.

தமிழ்நாடு பாண்டிய மன்னர்களால் பிரித்து ஆட்சி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு பகுதியின் தலைநகராகப் பௌத்திர மாணிக்கப்பட்டணம் விளங்கியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியில் விக்ரமபாண்டியன் என்னும் மன்னர் பௌத்திர மாணிக்கப்பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தார். இவருடைய காலத்திலேதான் மதீனாவிலிருந்து சுல்தான் செய்யது இபுறுகிம் வலியுல்லாஹ் அவர்கள் புறப்பட்டு வந்து விக்ரம பாண்டியனிடமிருந்து இப்பகுதியைக் கைப்பற்றி பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். விக்ரம பாண்டியனுக்கும் சுல்தான் செய்யது இபுறுகிம் வலியுல்லா அவர்களுக்கும் ஏற்பட்ட போரில் விக்ரம பாண்டியனின் இரண்டு புதல்வர்களும் சுல்தான் செய்யது இபுறுகிம் வலியுல்லா அவர்களின் புதல்வரும் மாண்டனர். இவ்விருவரும் ஆட்சி செய்த பின்னரே ஜடாவர்மன் குலசேகர மன்னர் ஆட்சிக்கு வந்தார். எனவே விக்ரம பாண்டிய மன்னருக்கும் ஜடாவர்மன் குலசேகர மன்னருக்கும் இடைப்பட்ட காலத்திலே தான் சுல்தான் செய்யது இபுறுகிம் வலியுல்லாஹ் ஆட்சி புரிந்து வந்தார். இவரும் போரில் கொல்லப் பட்டார். இவருடைய கல்லறை ஏர்வாடி என்னும்

இடத்தில் அமைந்துள்ளது. இந்த ஏர்வாடி என்னும் தலம் கீழக்கரைக்கு அணித்தாக மேற்கே அமைந்துள்ளது. இதே போன்று பெரிய பட்டணம் என்னும் இடம் கீழக்கரைக்கு கிழக்கே அமைந்துள்ளது. எனவே அன்றைய பௌத்திர மாணிக்கப்பட்டணம் ஏர்வாடியிலிருந்து பெரிய பட்டணம் வரை வியாபித்து இருந்தது எனக் கொள்ளலாம். கீழக்கரையையும் இப்பிரதேசம் உள்ளடக்கி இருந்தது எனலாம் அல்லவா ?

செய்கு அப்துல் காதிர் நெயினார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் தமது நிருபச் செய்யுட்களில், தென்காயல், வகுதை, கீழக்கரை என்பன ஒரே இடத்தைக் குறிப்பிடுவனவாகப் பாடியுள்ளார். பிற்காலத்தில் வந்த செய்கு சதக்கத்துல்லா மரைக்காயர் அவர்களுக்கும் முகம்மது காசிம் மரைக்காயர் அவர்களுக்கும் எழுதிய ஒரே நிருபத்தில் இடம் பெற்ற முதலாம் பாடலில் 'தென்காயல் ஓம்பும் திருநபி நாமக்குரிசில்' என்றும் இரண்டாம் பாடலில் 'கருணை முகில் வகுதை வேந்தன்' என்றும் மூன்ருவது பாடலில் 'சீர்வளர் கீழக்கரையின் செல்வர்' என்றும் வந்துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது.

இந்நூலாசிரியர் தமது கருத்தை வலியுறுத்த பெருமுயற்சி எடுத்துள்ளார்கள். தமது கருத்துக்களை வலியுறுத்த தம்மிடமுள்ள சான்றுகள் அனைத்தையும் இங்கு குறிப்பிட்டுள்ளார்கள். வரலாற்றினை ஆராயும் மாணவர்களுக்கு இங்கு தரப்பட்டுள்ள சான்றுகள் பெரிதும் பயனுள்ளவை எனின் அது மிகையாகாது.

கீழக்கரையின் பழமையையும் பெருமையையும் எடுத்துக் காட்ட இந்நூலாசிரியர் எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டுக்குரியவையாகும், போற்றற்

குரியவையாகும்: பின்பற்றற்குரியவையுமாகும். தமிழகத்துள்ள ஏனைய நகரங்களில் ஆர்வங் கொண்டோர் இந்நூலாசிரியரின் இப்பணியை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளுதல் வேண்டும். தத்தம் நகரங்களைப்பற்றி ஆய்வு பண்ணுதல் வேண்டும். அந்த ஆய்வுகளை நூலுருவில் கொண்டு வருதல் வேண்டும். இவற்றின் பயனாக தமிழ்நாட்டு முஸ்லிம் மக்கள் நாட்டின் கலாசாரத்தையும் பண்பாட்டையும் வளர்க்க எல்லாத் துறைகளிலும் பணிபுரிந்துள்ளனர் என்பதைப் பிறர் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு இத்துறையில் நற்பணி புரிய எம்மனைவருக்கும் எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலா நல்லருள் பாலிப்பானாக! ஆமீன்

9—2—81 எம். எம். உவைஸ்

மதிப்புரை

உயர்திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்,
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம்,
சென்னை-1

உலகப் பெரும் சமயங்களுள் இஸ்லாமும் ஒன்று. இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த பெருமக்கள் உலக நாடுகள் முழுவதும் பரவியுள்ளனர். இன்பத் தமிழ் நாட்டிலும் இஸ்லாமியப் பெருமக்கள் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். தமிழையே தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமிய அன்பர்கள் தஞ்சைத் தரணியிலும் இராமநாதபுர மாவட்டக் கீழக்கரையிலும் தண்பொருநை நாட்டுக் காயல் பட்டினத்திலும் பெரும்பாலும் நிலைபெற்றுள்ளனர்.

இராமநாதபுரத்தின் பழம்பெரும் சிறப்பினைக் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த மார்க்கோபோலோவின் பயணக் குறிப்பிலிருந்து நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

இலங்கை அரிப்போவிலிருந்து வந்த மார்க்கோ போலோ அறுபது மைல் கடந்து மாபாரிலுள்ள 'காயலை' அடைந்ததும் அங்கு முத்துக்குளித்தல் சிறப்பாக நடைபெற்றதையும் விளக்குகையில் 'மாபார்' என்றது இன்றுள்ள இராமநாதபுர மாவட்டத்தையே என்பதும் 'காயல்' என்றது இன்றுள்ள கீழக்கரையையே என்பதும் இந்நூலில் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளது.

அடுத்து வந்த இபுனு பதூதா என்ற அரபுப் பயணி கீழக்கரையைச் சார்ந்த 'பத்தன்' என்ற ஊரின்

சிறப்பைத் திறம்பட விளக்கியுள்ளதை நூலாசிரியர் விளக்கிக் காட்டிப் 'பத்தன்' என்றது இன்றுள்ள பௌத்திர மாணிக்கப்பட்டினத்தையே என்று, தெள்ளத் தெளிய அரிய கல்வெட்டுச் சான்று கொண்டு நிறுவியுள்ளார்.

இவையனைத்தும் இராமநாதபுர மாவட்டம் பல நூற்றாண்டுகளாகச் சிறப்புடன் விளங்கியதையும் தமிழக இஸ்லாமியப் பெருமக்களின் முதல் தாயக மாக இருந்து வந்ததையும் நன்கு காட்டுகின்றன. இவ்வளவு அரிய உண்மைகளைப் பல்வேறு இலக்கிய, வரலாற்று, கல்வெட்டுச் சான்றுகள் வழி நிறுவியுள்ள நூலாசிரியர் பாராட்டுக்குரியவராவர்.

முஸ்லிம் சமுதாயத்தினருக்குத் தாயகமாகக் கீழக்கரையைக் கொள்ளலாமா அல்லது காயல் பட்டினத்தைக் கொள்ளலாமா என்பதை ஆராய முற்பட்டுள்ளது, இந்நூல். இன்று நெல்லை மாவட் டத்திலுள்ள காயல்பட்டினத்தைப் பிற்காலத்தி லெழுந்த ஊரென்று இந்நூல் நிறுவ முற்பட்டுள்ளது. ஆதாரமாக டாக்டர் கால்டுவெல் முதலான பல அறிஞர்களின் நூல்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டியுள்ளது. இத்துடன் நில்லாது சங்க காலத்துக் கொற்கையே கீழக்கரைக் காயல்தான்; பாண்டிய நாட்டுக் கொற்கையன்று என்று நிறுவ முற்படுகின்றது.

பாண்டிய நாட்டில் உள்ள கொற்கையே சங்க காலத்துறைமுகம் என்பதற்குச் சங்க இலக்கியத்தி லிருந்து பிற்கால இலக்கியம் வரை பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. இத்துடன் அண்மைக் காலத் தில் தமிழ் நாட்டுத் தொல் பொருள் துறையினர் இன்று கொற்கை என வழங்கப் பெறும் சிற்றூரில் நடத்திய அகழ்வாராய்ச்சியில் 2000 ஆண்டுகட்கு

முற்பட்ட கட்டிடங்களையும் கிணறுகளையும் கண்டு பிடித்துள்ளனர். இலக்கிய, வரலாற்று, அகழ்வாய்வுச் சான்றுகள் இவ்வாறிருக்கப் போன நூற்றாண்டில் பல உண்மைகள் வெளிப்படாதிருந்த நிலையில் தமக்குக் கிடைத்த ஒரு சில சான்றுகளைக் கொண்டு டாக்டர் கால்டுவெல் போன்ற மேனாட்டறிஞர்கள் எழுதிய நூல் களைக் கொண்டு கொற்கையென்பது கீழக்கரைக் காயல்தான் என்று நிறுவமுற்படுவது சற்றுக் கடின மான செயல். எனவே மேலும் இத்துறையில் புதிய சான்றுகளைத் தேடிக் கண்டு பிடித்து இந்நூலில் கூறப் பட்டுள்ள செய்திகளை நிறுவ முயற்சி மேற்கொள்ளப் பெற இந்நூல் தூண்டுகோலாய் அமையும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இந்நூலின் ஆசிரியரான திரு. எம். ஐ. மரைக் காயர் அவர்கள் பல்வேறு நூலகங்கட்குச் சென்று பல அரிய நூல்களைத் தேடிப் படித்துத் தம் ஆய்வை மிகச் செம்மையாகச் செய்துள்ளனர். ஆராய்ச்சி என்பதே புதிய செய்திகளைத் தக்க சான்றுகளுடன் நிறுவ முயலுவதுதான். இந்நூல் அவ்வகையில் பல உண்மை களை நிறுவ முயலுகின்றது. இவற்றை மேலும் புதிய சான்றுகளை, அண்மைக்கால முடிவுகளைக் கொண்டு நிலைபெறச் செய்தல் வேண்டும். தாம் எடுத்துச் சொல்ல முற்பட்ட உண்மைகளை வெறும் உணர்வின் அடிப்படையில் அல்லாது ஆராய்ச்சி உண்மைகளின் வாயிலாக நிலைநாட்டப் பெரு முயற்சியெடுத்துள்ள நூலாசிரியரைப் பெரிதும் பாராட்டுகிறேன். வாழ்க அவர்தம் பணி. வெல்க அவர்தம் முயற்சி.

—இரா. முத்துக்குமாரசாமி

அணிந்துரை

கேப்டன் என். ஏ. அமீர் அலி அவர்கள்
முதல்வர், டாக்டர் ஜாகிர் ஹுஸைன் கல்லூரி
இளையாங்குடி.

ஒரு கருத்தினை நிலைநாட்டுவதற்குப் பயன்படும் புறச்சான்றுகள் பல திறத்தன. கல்வெட்டுகள், பட்டயங்கள், காசுகள், இலக்கியங்கள், பயணநூல்கள், வரலாற்று நூல்கள், ஆகிய அனைத்து சான்றுகளையும் துணைக்கழைத்து, காயல் என்றும், மாபர் என்றும், கொற்கை என்றும், கோல்ஹோய் என்றும், பெருந்துறை என்றும், பௌத்திர மாணிக்கப்பட்டினமென்றும், தென்காயல் என்றும், காயல்நகர் என்றும், காயல்துறை என்றும், வகுதை என்றும், செம்பிநாடு என்றும், அனுத்துகை மங்கலம் என்றும், நினைத்தது முடித்தான் பட்டினம் என்றும், கேலிக்கரை என்றும், கிற்கிரு என்றும் குறிக்கப்பெறுவது கீழக்கரையே என்பதை, அறிவியல் முறையில், ஜனாப் எம். ஐ. மரைக்காயர் அவர்கள் எடுத்தியம்பி இருப்பது சாலச்சிறந்தது ஆகும். யாரும் மறுக்க இயலாத வகையில் தம் கருத்துக்கு ஆக்கம் தேடியிருப்பது குறிக்கத் தகுந்தது. இதுபோன்று தமிழக ஊர்களைப் பற்றிய வரலாற்று நூல்கள் பல எழுதப் பெறுதல் வேண்டும்.

பெரும் புகழ் பயணிகள் மார்கோபோலோ, இபுனு பதூதா புதிய ஒளி பெறுகிறார்கள். பல ஆண்டுகளாகச் சேகரித்த குறிப்புக்களை அழகுத் தமிழில் கோர்வை செய்து வழங்கியிருக்கும் ஜனாப்

எம். ஐ. மரைக்காயர் அவர்கள் ஒரு வணிகர் என்று அறியும் போது மகிழ்ச்சி மேலிடுகிறது. இது போலப் பல்வேறு துறைகளிலும் இருப்பவர்கள் நூல்கள் எழுதும் போதுதான் ஒரு மொழி வளம் பெறுகிறது. எழுதுவதையே வாழ்க்கையாகக் கொண்டவர்களின்றி மற்றவர்கள் எழுதும் போது தங்கள் உள்ளங்களில் ஊறிக்கிடக்கும் உண்மைகளை உலகோருக்குப் புலப்படுத்த வேண்டும் என்ற எண்ணமே தலையிடம் பெறும். விளைவு பலரும் பாராட்ட தகுந்ததாகவே இருக்கும். அவ்வகையைச் சேர்ந்த இந்நூல், தமிழக வரலாற்று அறிஞரால் வரவேற்கப்படத் தக்கது என்பதில் ஐயமில்லை.

சென்னை, | அன்பன்
1-12-80

Captain அமீர் அலி,
Principal (on leave)
Dr. Zakir Hussain College,
ILAYANGUDI.

பாராட்டுரை

உயர்திரு எஸ். செல்வின் குமார்
துணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-21

இடைக்கால இந்திய வரலாற்றில் மக்கள் வாழ்வில் இஸ்லாம் முதற்கண் சமூக மற்றும் பொருளாதார ரீதியான தனது தாக்கத்தை தென்னிந்தியாவில் ஏற்படுத்தியது என்பது வரலாறு கூறும் உண்மை. வட இந்தியாவில் முகம்மது பின் காசிமின் படையெடுப்பின் பின்னரும், தென்னிந்தியாவில் அலாவுதீன் கில்ஜியின் தளபதியான மாலிக் காபூர் படையெடுப்பின் பின்னருமே இஸ்லாம் அரசியல் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்தியது. இதற்கு முன்னரே அரேபியாவில் உமையாக்கள் (Umayyads) ஆண்ட காலத்திலிருந்தே முஸ்லிம்கள் தூரகிழக்கு நாடுகளுக்குக் கடல் யாத்திரை செய்கையில் இந்தியாவில் தங்கிச் சென்ற கடற்கரை பட்டினங்கள் கொஞ்சமல்ல. கொல்லம் முதல் நெல்லூர் வரையிலான மாபர் பகுதிகளில் இளைப்பாறிச் சென்றமையையும், தங்கி தென்னிந்திய நாடுகளோடு வாணிபம் செய்தமையையும் வரலாறு கூறும்.

உண்மை வரலாற்றைப் படைக்க இந்நாளைய அறிஞர்கள் முற்படுகையில் மேல்நாட்டு யாத்ரீகர்கள் எந்தெந்த இடத்தில் என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்தனவென்று கூறியிருப்பதை வைத்தே யூகித்தல் வேண்டும். மட்டுமின்றி அவர்கள் சில அடிப்படை

யான நில இருப்பிட இயல்புகள், ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குரிய தூரம் மற்றும் இன்னோ ரன்ன பல கருத்துக்களைக் கூறியிருப்பதால் அவற்றை ஆராய்ச்சி செய்து முடிவெடுக்க வேண்டிய நிலையே உள்ளது.

இவ்வடிப்படையில் புகழ் பெற்ற கீழக்கரை நகர் இன்று வரை மேனாட்டு யாத்ரீகர்கள் கூறிய எந்தப் பட்டினம் என வரையறுத்துக் குறிப்பிடாதிருந்தது தமிழக இஸ்லாமிய வரலாற்றுக்கு ஒரு பெரும் குறை பாடாகும். இதனை நிவர்த்தி செய்யவே பல சான்று களுடன் ஆசிரியர் M.I. மரைக்காயரால் இப்புத்தகம் ஆக்கப்பட்டிருப்பது ஆய்வாளர்களுக்கு பெருந்துணை யாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழகம் நபிபெருமானார் காலத்திற்கு முன் பிருந்தே அரேபியா மற்றும் தென்மேற்கு ஆசிய நாடு களோடு வியாபாரத் தொடர்பு கொண்டிருந்தது என ஆசிரியர் விளக்குவது தமிழகத்துறைமுகங்களின் சிறப்பே ஆகும். அம்மட்டிலன்றி இடைக்கால வரலாற் றில் போர்கள் பிற காலங்களைவிட அதிகமாக நடை பெற்றதால் குதிரையை அரபியர்கள் விற்றதையும் மாற்றாக தென்னிந்திய அரசர்கள் முத்துக்கள் விற்ற தையும் இப்புத்தகம் நன்கு விளக்குகிறது. அத்தோடு மாணிக்கவாசகர் கூற்றால் கீழக்கரை அக்காலத்தி லிருந்தே புகழ்பெற்ற நகரம் என ஆசிரியர் கொண் டுள்ள முடிவு சிறப்பிற்குரியது.

பதினான்காம் நூற்றாண்டில் தமிழகம் வந்த இபுனு பதூதா என்ற அறபியாத்ரீகர் இந்நகரை 'பத்தன்' எனக் குறிப்பிடுவதும் கீழக்கரை என்ற சொல் கொற்கையின் திரிபு என ஆசிரியர் விளக்க முயல் வதும் நன்றாம். இபுனுபதூதா கீழக்கரையினை

பௌத்திர மாணிக்கப்பட்டணம் என சொல்வதற்கு சுருக்கமாக "பத்தன்" எனக் கூறியிருக்கலாம், விஞ்ஞான ரீதியில் வரலாற்றை உற்று நோக்குங்கால் புதுப்புது சான்றுகள் கிடைக்கப் பெறும்போது கருத்துக்கள் மாற்றம் ஏற்படுகின்றது. அவ்வடிப்படையில் திரு M. I. மரைக்காயர் அவர்கள் குறிப்பிடும் கல்வெட்டு (திருப்புல்லாணிக்கல்வெட்டு) கீழக்கரையே பௌத்திரமாணிக்கப்பட்டணம் என்பதை உறுதி செய்வது இப்புத்தகத்தின் குறிப்பிடத்தக்க நல் அம்சமாகும்.

காயற்பட்டண புலவர் நாயகம் அவர்கள் கீழக்கரையினையே தென்காயலென அவரது நிருபச் செய்யுட்களில் குறிப்பிடுவதால் கீழக்கரைதான் தென் காயல் என்பது வெள்ளிடைமலை.

மார்க்கோபோலோ இலங்கை அரிப்போவிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள காயல் என்று குறிப்பிடுவதும், இபுனு பதூதா பத்தனிலிருந்து மாண்புயர் தலைநகரமாம் மதுரை அறுபது மைல் எனக் குறிப்பிடுவதும் ஆதார பூர்வமான திட்டவட்டமான வகையில் கீழக்கரையை குறிப்பிடுவது ஆகும்.

இபுனுபதூதா மதுரையிலும் 'பத்தன்' எனும் கீழக்கரையிலும் பல மாதங்கள் தங்கியிருந்தும் ஆசிரியர் குறிப்பிடுவதுபோல, அக்காலத்தில் காயல் பட்டணம் இருந்திருந்தால் இபுனு பதூதா குறிப்பிட தவறியிருக்க மாட்டார்.

காயல்பட்டணத்திற்கு 1000 ஆண்டுகளுக்கு முன் பாளையத்தார்களால் கொடுக்கப்பட்ட பட்டயம் எனக் குறிப்பிடுவது பொருத்த மற்றது. காரணம் அக்காலத்தில் பட்டயம் குறிப்பிடும் பாளையக்காரர்

கள் தென்னகத்தில் ஆட்சி புரிந்ததாக வரலாற்றில் எந்த சான்றுகளும் இல்லை.

இவ்விதமான விவாதங்களில் ஆசிரியர் சான்றுகள் மூலமாகக் கூறும் கருத்துக்களை குன்றிலிட்ட விளக்காக்குகின்ருர்.

வள்ளல் சீதக்காதியின் தம்பியின் சமாதிக்கல்லின் குறிப்புக்களை இந்நூல் மூலம் அறிவதால், வள்ளல் சீதக்காதியும் அவர் முன்ஞேரும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து மறைந்தனர் என்பதில் ஐயமில்லை.

ஆக, கிடைக்கப் பெற்ற ஆதாரங்களின் அடிப் படையில் அமைவது வரலாறு, அதற்கிணங்க கீழக் கரையின் பெருமையை ஆசிரியர் விளக்கும் போதும் இஸ்லாமிய தொடர்புடைய சான்றுகளை கையாண்டு வருவதோடு பிற சான்றுகளையும் ஆராய்ந்துள்ளார். மொத்தத்தில், இதுவரை வரலாறு தெளிவுற அமை யாத ஓர் எழில்மிகு பட்டினத்திற்கு வரலாறு அமைக் கும் ஆசிரியர் M.I. மரைக்காயர் அவர்களைப் பாராட்ட வேண்டும். உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளை அறிவதற்கு ஒரு தூண்டுகோலாக இந்நூல் அமைய வேண்டும் என்பதே எனது வேணவா.

S. செல்வின்குமார்

மதுரை
18-12-1980

—❋—

முன்னுரை

இந்நூலை எழுதுவதற்கு என்னைத் தூண்டியதும் உற்சாகம் ஊட்டியதும் ஜவாதுப்புலவரின் பேரனின் சீடரும் எனது இளமை நண்பருமான கீழக்கரை மர்ஹூம் அப்துல் ஹன்னன் புலவராவர். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் புலவர் என்னை அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்று, கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர் பாடிய சின்னச் சீருவைக் காட்டி, ''இந்நூலிற்கு கொடை வள்ளலாக இருந்தவர் உங்களின் முப்பாட்டனர் கொடைவள்ளல் லெப்பை நெயினு மரைக்காயர் ஆவர். இவர் வள்ளல் சீதக்காதியின் தம்பி மாமுநெயினு என்ற பட்டத்து முகம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் மகன், முகம்மது அபூபக்கர் மரைக்காயரின் மூத்த மகன் வகுதை லெப்பை நெயினு எனக் குறிப்பிடப்பட்டிருந்ததனைக் காட்டினுர். வள்ளல் சீதக்காதிக்கு ஆண் சந்ததி இல்லாததால் அவரின் தம்பியின் சந்ததியினரே வள்ளலின் ஆண் சந்ததியும் சேதுபதியின் அரசு நிர்வாக பதவிக்கும் பட்டத்திற்கும் உரிமை உடையவர்களுமாவர் எனக் கூறினுர். எங்கள் வீட்டில் உள்ள பழைய சாசனங்களைப் பார்த்ததில் எனது பாட்டனுருக்குரிய சாசனத்தில் ''ரவிகுல ரகுநாத முத்து விஜய'' என்னும் விருது விபரங்களும் இருப்பதைப் பார்த்து சீதக்காதியின் வம்சவழி வந்தவர்கள் நாங்கள் என்பதனை உணர்ந்தேன். இந்த விருது சேதுபதியால் சீதக்காதிக்கு கொடுக்கப்பட்டதாகும். அன்று முதல் வள்ளல் சீதக்காதி

யின் முன்னோர் யார்? எங்கு பிறந்தவர் என்பதற்கான சான்றுகளைத் தேடலானேன்.

வள்ளல் சீதக்காதி ''தென்காயலில் பிறந்தவர்'' என நொண்டி நாடகமும், சீதக்காதி திருமணவாழ்த்தும் பிற இலக்கியங்களும் சான்று பகர்கின்றன. ஆய்வாளர்களுக்கு மத்தியில் ''காயல்'' ''தென்காயல்'' ''வகுதை'' என்பன எந்த ஊரைக் குறிக்கும் என்பதில் கருத்து வேறுபாடும், உறுதி படுத்திக்கூற முடியாமையும் இருந்தது. காயல்பட்டணம் புலவர் நாயகம் செய்கப்துல் காதிர்நெயினார் லெப்பை ஆலிம் அவர்கள் பாடிய பலபாடற்றிரட்டு நூலை, காயல் பட்டணம் கண்ணகுமதுமகுதூம் புலவர் பரிசீலித்து, அச்சிட்ட பிரதியில் நிருபச் செய்யுட்களில், கீழக்கரை வள்ளல் ஹபீபு அரசர் என்னும் ஹபீபு மரைக்காயரின் மகன் ஷெய்கு சதக்கத்துல்லா மரைக்காயருக்கும், ஹபீபு மரைக்காயரின் தம்பி காதிர் சாகிபு மரைக்காயரின் மகன் முகம்மது காசிம் மரைக்காயருக்கும் புலவர் நாயகம் எழுதிய நிருபச்செய்யுட்களில் ''வகுதை'' ''தென் காயல்'' என கீழக்கரையை சந்தேகமற குறிப்பிட்டிருப்பதால் வள்ளல் கீழக்கரையில் பிறந்தார் என உறுதி கொண்டேன். வள்ளல் சீதக்காதியின் இளைய தம்பி ஷெய்கு இபுருஹீம் அவர்கள் வேதாளையில் அடங்கியுள்ளார்கள். இந்த சமாதியில் உள்ள அடையாளக் கல்லில் காணப்படும் (மீசான்) கல்வெட்டில் இவர்களது ஐந்து தலைமுறையைச் சேர்ந்த மூதாதையர்களின் குறிப்புகளும் கிடைத்துள்ளன. கீழக்கரை பழைய குத்பா பள்ளியில் வள்ளலின் தாய், தந்தை, தாயைப் பெற்ற பாட்டன், தாய்மாமன் இவர்களின் சமாதிகள் யாவும் இன்றும் இருப்பதால் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி வள்ளல் சீதக்காதி கீழக்கரையிலேயே அரச பரம்பரையில் பிறந்து வாழ்ந்து சமாதியாகி இருப்பதில் ஐயமற உறுதி கொண்டேன்.

அறபு நாட்டிலிருந்து தமிழகத்தில் குடியேறி, நாட்டு வரலாற்றிலே ஈடிணையில்லாத சிறப்புக்களைப் பெற்று பெயர்

பொறித்துள்ள மலிக்குல் ஆஜம், மர்ஜபானே ஹிந்த் தகீயுத்தீன் அப்துர் ரஹ்மான் பின் முஹம்மது அவர்களின் புனிதம் செறிந்த வீரபரம்பரையில் தான் சீதக்காதி வள்ளல் பிறந்தார் என்பது சிந்தைக்கு இனிய செய்தியாகும். இதற்கு ஆதாரமாக அமைந்துள்ளது, எட்டையபுரத்து உமறு கத்தாப் புலவரால் பாடப்பட்ட ''செய்தக் காதிறு திருமண வாழ்த்து'' எனும் நூலாகும். மலிக்குல் ஆஜம் தகீயுத்தீன் செய்த செயற்கரிய செயல்களை எல்லாம் வரிசையாகக் காட்டி, அத்தகைய ஒரு பெருமகனின், வச்ர நன்னுடனின்,

''பேருக வந்த பெரிய தம்பிதன் புகழை
மாருமலே வளர்க்க வந்த

செய்தக்காதி மன்னன்'' என்னும் குறிப்பு பல உண்மைகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது. பாண்டி நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து ஐந்து சகோதரர்களாகிய பஞ்ச பாண்டியர்கள் ஆண்டு வந்தார்களென்பதும், அவர்களுடன் ஆருமவராக தகீயுத்தீன் ஒரு பகுதியை ஆண்டுவந்தாரென்றும் வரலாறு கூறுகின்ற செய்தியைத் திருமணவாழ்த்து எடுத்துக் காட்டுகின்றது.

''மைவருக்கஞ்சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்
ஐவருக்கு மாருக ஆரும் பேர் கொண்ட பிரான்''

இவ்வாறு பாண்டியர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டது மட்டு மின்ற பாண்டி நாட்டு அரச குடும்பத்திலிருந்தே ஒரு பெண்ணை மணம் செய்தாரென்பதையும் இந்நூல் கூறுகின்றது.

''நிலமகளும் செயமகளும் நிற்ப வழுதி செல்வக்
குலமகளைக் கைப்பிடித்துக் கொண்ட மணவாளன்''

இத்தகைய திருமணத்திற்காக தான் வீற்றிருந்த இடமாகிய பௌத்திரமாணிக்கப் பட்டினம் என்னும் கீழக்கரையிலிருந்து, மணமகள் இல்லம் அமைந்துள்ள மதுரை வரையில் ஐங்காத தூரமும் (60 மைல்கள்) கரும்பினுல் தோரணங்கள் கட்டி அலங்கரித்த செய்தியை கீழ்வரும் பாடல் எடுத்துரைக்கின்றது.

''விருப்பினுலேங்காதம் மீனவன் பெண் வீடுமட்டுங்
கருப்பினுல் பந்தலிட்டு கல்யாணம் செய்த பிரான்''

கி. பி. 1286 காலகட்டத்தில் தகீயுத்தீன் பாண்டிய மன்னரின் அமைச்சராகவும் தளபதியாகவும், ''கறுப்பாறு காவலன்'' (பாடல் 20) எனும் கடலாதிக்க அதிபராகவும் இருந்தபோது ஈழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று வந்ததனை ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் தமது ''புராதன தக்காணம்'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். திருமண வாழ்த்தும்,

''வாரி தனிலேறியந்த வங்கம் விட்டிலங்கை பிடித்
தாரியனை மிக்கா யரியாசனத்தில் வைத்தோன்''

எனக் குறிப்பிடுகிறது.

இவை மட்டுமின்றி தகியுத்தீனின் வீரச்செயல்களும் ஆற்றல் மிகுந்த அரும்பணிகளும் வரிசையாகக் கூறப்பட்டுள்ளன. தகீயுத்தீனுக்குப் பாண்டிய வேந்தன் விருந்தளித்து விட்டு, அவ்விடத்தைச் சாணமிட்டு மெழுகியதை மனத்தில் வைத்திருந்து, தானும் பாண்டிய மன்னனுக்கு முத்துப் பந்தலிலே பெருவிருந்தளித்து அப்பந்தலையே நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டு,

''ஏதென்றீர் சாணகமிட்டாற் போமெங்களெச்சில்
சூதொன்று முங்களெச்சில் சுட்டாற்போம்''

என்று சொன்னதாக கூறப்பட்டுள்ளது. இங்ஙனமாகப் பல சிறப்புக்கள் மொழியப்பட்டுள்ளன. இச்சிறப்புக்கள் அனைத்திற்கும் உரியவர் மலிக்குல் ஆஜம் தகீயுத்தீனே என்பதும் அவர் மரபில் வந்தவரே வள்ளல் சீதக்காதி என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

பிரயாண நூல்களில் மார்க்கோபோலோ இலங்கைக் கரையில் மன்னுருக்கு பக்கத்திலுள்ள அரிப்போவிலிருந்து மேற்கு முகமாக 60 மைல் தொலைவில் வந்த குறிப்பில் மாபரின் (இந்தியக் கரையோரம்) காயல் (காயில்) எனும்

கீழக்கரை பழந்துறைமுகத்தினையே தெளிவாகக் காட்டுகிறது என்பதனை ஐயமற அறிந்தேன். முத்துக்குளிப்பு அதிகமாக நடைபெறும் இடமாக கீழக்கரையின் பக்கத்திலுள்ள ''பத்தளா'' (வேதாளை) வினைக்குறிப்பிடுகிருர். இது கீழக்கரை எனும் காயலுக்கே அவர் வந்தார் எனத் தெளிவு ஏற்படுத்துகிறது. இவரை அடுத்து வந்த இபுனுபதூதாவின் பயண நூல் பலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவற்றில் பேராசிரியர் H. A. R. கிப் அவர்களின் மொழிபெயர்ப்பு குறிப்பிடத்தக்கது. அதில் இபுனுபதூதா இலங்கையிலிருந்து மாபர் வருகையில் கடல் கரைக்கு ஆறு மைல் தூரத்தில் தான் வந்த கப்பல் பாறையில் மோதி உடைந்து ஒரு தோணியில் ''ஹர்காட்டு'' எனும் ஆத்துக்காடு (இவ்வூர் கீழக்கரையிலிருந்து கிழக்கே 4 மைல் தொலைவில் உள்ளது) வந்து இறங்கி அங்கிருந்து பத்தனில் சேர்ந்து சில நாட்கள் அங்கு தங்கி விட்டு 60 மைல் தொலைவில் உள்ள மதுரா (மதுரை) போனதாகக் குறிப்பிடுகிருர். ''பத்தன்'' என்பது எந்த பத்தனை குறிப்பிடுகிருர் என பல வருடங்களாக உறுதி கூற முடியாமல் இருந்தது. அண்மையில் நண்பர் ஒருவர் மூலம் பௌத்திரமாணிக்கப்பட்டினமாகிய கீழக்கரைக்கு 4 மைல் தூரத்தில் உள்ள திருப்புல்லாணிக் கோவிலில் உள்ள கல்வெட்டுச் சான்றினைப் பெற்றேன். (முழுக் கல்வெட்டும் பின்னிணைப்பில் பார்க்க) அது 12-ஆம் நூற்ருண்டு பாண்டிய அரசன் மாறவர்மன் காலத்தில் பௌத்திரமாணிக்கப் பட்டினத்து சோனகச்சாமந்தப்பள்ளிக்கு வரிவிலக்காக— மானியமாக கொடுத்த குறிப்புக்களைப் பெற்று விளங்குகிறது. இக்கல்வெட்டுக் கூறும் சோனகச் சாமந்தப்பள்ளியினையே இபுனு பதூதா பத்தனில் பார்த்ததாகக் குறிப்பிடுகிருர் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. கீழக்கரையிலிருந்து மதுரை 60 மைல் தூரத்தில் உள்ளது. இபுனு பதூதாவின் பத்தன் துறைமுக வருணனையும் இயற்கைத் துறைமுகமாக இன்றும் விளங்கும் கீழக்கரையே ஆகும். மேலும் இபுனு

பத்தூதா குறிப்பிடும் பத்தன் எனும் கீழக்கரைத் துறைமுகத்தில் மேனாட்டு கப்பல்களும் கீழ்நாட்டு சீனதேச கப்பல்களும் வந்து போவதாகவும் ஏமன் தேசத்திற்கு போகும் எட்டு கப்பல்களில் ஒரு கப்பலில் தான் கொல்லம் போனதாகவும் குறிப்பிடுகிருர். அக்காலத்தில் காயல்பட்டணம் என்னும் பட்டணமிருந்து அங்கு முஸ்லிம்களும் சிறப்புடனிருந்திருப்பின் மதுரையில் பல காலம் தங்கியிருந்த இபுனு பதூதா 120 மைல் தூரத்தில் உள்ள காயல்பட்டணத்திற்கு போக தவறி இருக்க மாட்டார் அல்லவா? பாண்டி நாட்டில் இபுனு பதூதா ஹர்காட்டு (ஆத்துக்காடு), பத்தன் எனும் பௌத்திர மாணிக்கப்பட்டின கீழக்கரை, மதுரை ஆகிய இம்மூன்று ஊரைத் தவிர வேறெங்கும் தாம் போனதாகக் குறிப்பிடவில்லை. எனவே நான் கல்வெட்டுக்கள், கெஜட்டியர்கள் இலக்கியங்கள், போன்ற பல்வேறு சான்றுகளால் தெளிவு படுத்தி காயல் எது? பத்தன் எது? என நூலினுள் விவரித்துள்ளேன்.

தொன்று தொட்டு கீழக்கரையில் பல புகழ்பெற்ற இறை நேசச் செல்வர்களும், சூபிகளும், புலவர்களும் புரவலர்களும் இருந்து வந்திருப்பதனை சான்றுகளால் அறியலாம். இந் நூற்றுண்டில் கூட கல்வத்து நாயகம் எனும் செய்யது அப்துல் காதிர் (ஒலி) அவர்களும், பல்லாக்கு (ஒலி) எனும் ஹபீபு முஹம்மது சதக்கத்துல்லா (ஒலி) அவர்களும், ஷைகு நாயகம் என்ற அஹமது அப்துல் காதர் (ஒலி) அவர்களும், மஹானந்த பாபா என்ற முகம்மது அப்துல் காதர் (ஒலி) அவர்களும் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள்.

'இவ்வூரில் வாழ்ந்த புலவர்களான ஆயிரமசலா பாடிய செய்யிது இசுஹாக் புலவர், சீருப்புராணம் பாடிய உமறுப் புலவர், நபியவதார அம்மானை பாடிய கவிக்களஞ்சியப்புலவர், சின்னச்சீரு பாடிய பனீ அகுமது மரைக்காயர் புலவர், நூறு நாமா பாடிய செய்யது அகுமது மரைக்காயர் புலவர், ஆசாரக்கோவை பாடிய அப்துல் மஜீது புலவர், மதுரைத்

தமிழ்ச்சங்க வித்துவான் செய்யிது முஹம்மது ஆலிம் புலவர் ஆகியோரும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்தவர்களாவர்.

ஆயிரமசலா பாடுவதற்கு கொடைநாயகராக இருந்தவர் வள்ளல் சீதக்காதியின் பாட்டனூர் கறுப்பாறு காவலர் மகுமூது நைனூ மரைக்காயரும், சீறுப்புராண கொடை நாயகரான அபுல்காசிம் மரைக்காயரும் சின்னச்சீறு கொடை நாயகரான லெப்பை நெயினு மரைக்காயரும், இராஜநாயக கொடைநாயகரான அப்துல் காதிர் மரைக்காயரும், சீறுப் புராணத்தினை முதலில் கி. பி. 1842-இல் புலவர் நாயகம் அச்சிடுவதற்கும், திருமணிமாலை பாடுதற்கும் புரவலராக இருந்த வள்ளல் ஹபீபு அரசர் எனும் ஹபீபு முகம்மது மரைக்காயர் என்பவர்களும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்த வர்கள் என்பது சான்றுகளால் அறியப்படுகின்றன.

இந்நூலில் காணும் குறிப்புகளில் மாறுன கருத்துக்கள் இருப்பின், அன்பர்கள் ஆதார பூர்வமான சான்றுகளுடன் கருத்துக்களை அறிவித்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள் கிறேன்.

பல நண்பர்களின் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு உதவி களால் எழுந்த நூல் இது எனின் மிகையன்று.

பல பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், நண்பர்களுடன் கலந்துரையாடி இன்று நூலாக்கம் பெற்றுள்ளது இந்நூல்.

மறைமலையடிகள் நூலகம், சென்னை பல்கலைக்கழக நூலகம், எழும்பூர் ஆவணக்காப்பகம், கன்னிமாரா நூலகம், அருங்காட்சியகம் போன்றவைகள் இந்நூல் எழுத துணை நின்றன.

உண்மைக்கு மாறுன செய்திகளை வரலாறு என எழுதி மேலும் எதிர்காலத் தலைமுறையினரைத் தவறுன கருத்துக் களுக்கு அழைத்துச் சொல்லக் கூடாது எனக் கொண்டு, வரலாற்று உண்மைகளைத் தெளிவுறுத்த வேண்டும் என்னும் நோக்கில் எழுந்ததுவே இந்நூலாகும்.

இந்நூலை, ஆழ்ந்து படித்துப் பார்த்து அணிந்துரைகள் வழங்கியுள்ள, பேராசிரியர் உயர்திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் (துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள், (தமிழ்த்துறைத் தலைவர், சென்னை பல்கலைக்கழகம்) அல்ஹாஜ் டாக்டர் எம். எம். உவைஸ் அவர்கள் (பேராசிரியர், இஸ்லாமிய இலக்கியத் துறை, மதுரை, காமராசர் பல்கலைக்கழகம்), உயர்திரு இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (நூலகர், மறை மலையடிகள் நூல் நிலையம், சென்னை), கேப்டன் என். ஏ அமீர் அலி அவர்கள், (முதல்வர், ஜாக்கிர் ஹூசைன் கல்லூரி, இளையாங்குடி,) உயர்திரு எஸ். செல்வின்குமார் அவர்கள் (துணைப் பேராசிரியர், இடைக்கால வரலாற்றுத்துறை மதுரை காமராசர் பல்கலைக் கழகம்), ஆகிய அறிஞர் பெரு மக்களுக்கு என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாக விளங்கிய என் நண்பர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகும்.

சென்னை.
10-5-81

—எம். ஐ. மரைக்காயர்.

சமர்ப்பணம்!

கீழக்கரையில் பிறந்து வாழ்ந்த எங்கள் மூதாதையரான இறைநேசச் செல்வர்கள், மார்க்க மேதைகள், கொடை வள்ளல்கள், புலவர் பெருமக்கள், புரவலர்கள் ஆகியோருக்கு எனது இந்த நூலை சமர்ப்பிக்கின்றேன்.

— எம். ஐ. மரைக்காயர்

தமிழகத்தில் மார்க்கோ போலோ, இபுனு பதூதா

(1)

அகிலத்தில் அற்புத பிரயாணிகள் என அழைக்கப் படும் (Herodotus, Gaspar, Melchior, Balthazar and Marco Polo என்னும்) ஐவருள் ஒருவரான மார்க்கோ போலோ ஐரோப்பாவிற்கும் தூர, கிழக்கு நாடுகளுக் கும் நேரடித் தொடர்பைத் தொடங்கிய முதல் யாத்திரிகருள் ஒருவர் ஆவார்.

வெனீஸ் நாட்டில் கி.பி. 1254-இல் நிக்கோலோ போலோவிற்கு மகனுகப் பிறந்த மார்க்கோ போலோ வாணிபக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தமக்கு இருபது வயதாகு முன்பே சீனு செல்லும் வியாபாரக் கூட்டத்தில் சேர்ந்துபிரயாணமானுர். கி.பி. 1275-இன் நடுக்காலக்கட்டத்தில் அவர் சீனப் பேரரசரான குப்ளேகானின் அரசவை சென்று அடைந்தார். சுமார் இருபது ஆண்டுகள் அவ்வரசரிடம் பல்வேறு அலுவல் களில் பணிபுரிந்தார். பாரசீக மன்னனுக்குத் திரு மணம் செய்து கொடுக்க ஏற்பாடாயிருந்த சீன இளவரசியைப் பாரசீகத்திற்கு அழைத்துக் கொண்டு போய் விடுவதற்காக கி.பி. 1292-இல் சீனுவை விட் டுப் புறப்பட்டு சுமாத்ரா, மலாக்கா, வங்காளம், அந்தமான், இலங்கை, மாபர், குமரிமுனை, மாலத்தீவு கள், மலபார், குஜராத் வழியாக இரண்டு ஆண்டுகள் பிரயாணஞ் செய்து பாரசீகத்தினை சென்று அடைந் தார்.

அடுத்து ஒரிரண்டு ஆண்டு காலத்திற்குள் தம் பயணத்தினைத் தொடர்ந்து கி.பி. 1295-இல் தம்

தாய்நாடு திரும்பினார். அதன் பிறகு அண்டை நாட்டு டன் நிகழ்ந்த ஒரு போரில் அவர் எதிரிகளால் சிறை பிடிக்கப்பட்டார். கி.பி. 1296-ஆம் ஆண்டு சிறைப் பட்ட மார்க்கோ போலோ மூன்று வருடங்கள் ஜெனோவா (Genoa) சிறையில் அடைக்கப்பட்டிருந் தார். அப்போது அங்கு தமது சிறைக்கூட நண்பரான பிசா (Pisa) நகரத்து ரொஸ்தி செல்லோ (Rustigielo) என்பாரிடம் தமது பிரயாண அனுபவங்களை அரை குறை பிரெஞ்சு மொழியில் கூறினார். அது அவ்வாறே எழுதி வைக்கப்பட்டது. பின் உலக மொழிகளில் மொழி பெயர்க்க இது மூலமாயிற்று. கி.பி. 1299-இல் அவர் விடுதலை ஆனார். அதன்பின் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்து கி.பி. 1324-ல் காலமானார். மார்க்கோ போலோவின் பிரயாணங்கள் கிறிஸ்தோபர் கொலம் பஸை (Christopher Columbus) மிகவும் கவர்ந்தன. கொலம்பஸ் தமது நூல் ஒன்றில் மார்க்கோ போலோ வின் பிரயாண நூல் தந்த ஆசையினாலேயே தாம் கீழ்த்திசை நாடுகளைப் புதிய பாதையில் சென்று அடைய முயன்றதாகவும் அதன் பயனாக அமெரிக்கா எனும் புதிய கண்டத்தினைக் கண்டு பிடிக்கவும் இவர் தம் குறிப்புக்களே வழிகாட்டின என்றும் எழுதியுள் ளார்.

மூல், பெலியட் என்பவர்கள் மொழி பெயர்த்த மார்க்கோ போலோவின் பிரயாண அனுபவங்களை கி.பி. 1938-இல் ரூட்லெட்ஜ் (Routledge) பதிப்பித்தார். செலிடா (Zelada) சுவடி உள்பட்ட பதினேழு சுவடிகள் ஸ்பெயின் நூலகம் ஒன்றில் மறைந்து கிடந்தன. இந்தனை சர். பெர்ஸிவல் டேவிட் கண்டு பிடித்து வெளியிட் டார். மார்க்கோ போலோவின் வரலாற்றினை முதன் முதலில் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதியவர் ஜான்

பாப்டிஸ்ட் ரமுசியோ (John Baptist Ramusio) என்பவர் ஆவார். இவர் முதல் பதிப்பாசிரியரும் ஆவார். கி.பி. 1559-க்கு பின் பல பதிப்புக்கள் பலபேர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

பயண நூல்களில் மார்க்கோ போலோவின் நூல் தலைமையானது என மதிக்கப்படுகிறது. மார்க்கோ போலோவின் பிரயாணத் தொகுப்பு (The Travels of Marco Polo) என வெளியிடப்பட்டது.

"இடைக்காலப் பயணிகளின் இளவரசர்" என்று பாராட்டப் பெற்ற பயணவீரர் இவர். மத்திய ஆசியாக் கண்டத்தினைக் கடந்து சீனப்பேரரசின் சீர்மையையும் மாட்சிமையையும் முதன் முதலில் உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் இவர்.

நமது இந்தியத்திருநாட்டைப் பற்றி மேனாட்டார் அறிந்து உணர்வதற்கும் இவரே மூல காரணமாக இருந்தார்.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன் எழுதிய எழுத்தோவியங்கள் புத்தம் புதிய பாடமாக பலனளிக்கிறது. இவற்றில், தான் பார்த்த புதிய இடங்கள், அறிந்த புதிய செய்திகள், இயற்கை வரலாறு, கண்ட விளை பொருட்கள், உணர்ந்த வாணிப நோக்கு, அனுபவித்த நீர் வழிப் பிரயாணத்திறன், கண்டுகளித்த பட்டணங்கள், துறை முகங்கள், மக்கள் உண்ட உணவு முறைகள், கடைப்பிடித்த பழக்க வழக்கங்கள், காட்சி அளித்த செடி, கொடி, மரங்கள் போன்றவற்றின் பல்வேறு செய்திகள் விரிவாகச் சொல்லப்படுகின்றன. பதின் மூன்றும் நூற்றாண்டுத் தமிழகத்தினை சித்திரித்துக் காட்டும் சிறப்புக்களும் இதில் குறிப்பிடத் தகுந்தவையாயிருக்கின்றன. மார்க்கோ போலோ எழுதி வைத்த

குறிப்புக்களில் காணப்படும் நாடு, ஊர், அரசர் பெயர்கள் எல்லாம் இன்று திரிந்தே வழங்கப்படுகின்றனவா? அல்லது அவற்றின் தமிழ் உச்சரிப்புக்களை கூறக் கேட்டு எழுதிய முறையில் அவை அமைந்துள்ளனவா? என்பது ஆராய்ச்சிக்கு உரிய ஒன்றாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முடிவில் தென்னிந்தியாவில் ஒன்றரை ஆண்டுகள் பிரயாணஞ் செய்து தாம் நேரில் கண்டவற்றை எல்லாம் ஏட்டில் எழுத்தோவியமாக எழுதியுள்ளார். "கீழை நாடுகளின் கடற்பயணங்களைப் பற்றிய செய்திகளை நாம் அறியும் பொழுதெல்லாம் அவற்றின் வரலாற்றுத் தொன்மை உயர்ந்து கொண்டே போகிறது" "நாம் மறந்து போன செய்திகள் ஒவ்வொன்றும் மீண்டும் நம் கவனத்திற்கு வரும் பொழுதெல்லாம் அவருடைய (மார்க்கோ போலோ) செய்திகளின் உண்மையும் நியாயமும் மேலும் ஒளி விட்டுத் திகழ்கின்றன," என்று கூறும் அறிஞர் யூல் அவர்களின் (Colonel Yule-the Great Editor of Marcopolo) உரை உண்மையிலேயே அனுபவ உரையாக அமைகின்றது. ஆராய்ச்சிகள் பெருகி வரும் இந்நாட்களில் இது மெய்யுரையே எனக்கொள்ளலாம்.

இபுனுபதூதா

மார்க்கோபோலோவின் தமிழகப் பயணத்திற்குப் பின்பு வந்துள்ள புகழ்பெற்ற யாத்திகர் இபுனுபதூதா ஆவார். இபுனுபதூதா முஸ்லிம் யாத்திரிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.இவரின் பயணக் குறிக்கோளும் இலட்சியமும் இஸ்லாத்தோடு இணைந்ததாகவும் அவர் தம் அனுபவங்களாகவும் விளங்குகின்றன.

மொரோக்கோ நாட்டில் டாஞ்சீர் எனும் பட்டணத்தில் முஹம்மது என்பவரின் மகனாக கி.பி. 1304-ம் ஆண்டு பிப்ர்வரி 24-ந் தேதி இப்ராஹீம் அல்ஹவானி பிறந்தார். இதுவே இவரின் இயற்பெயர். இவர் மூர்



கீழக்கரையில் சுமார் 1000 ஆண்டுகளுக்குமுன் உள்ள பழைய பள்ளிவாசல்
(குளங்கரை பள்ளிவாசல்)

இனத்தைச் சேர்ந்தவர். இபுனு பதூதா என்பது இவரின் குடும்பப்பெயர். இன்றும் இக்குடும்பப் பெயர் மொரோக்கோவில் காணப்படுகிறது. கி. பி. 1377-இல் பெஸ்(Fez) என்னுமிடத்தில் மறைந்தார். இவரது மறைவு கி.பி. 1368 இல் என்றும் கி.பி. 1369 இல் என்றும் கூறப்படுகிறது. இவரது பிரயாண அனுபவங்களை அரபியில் "அர்ரிஹ்லத்து இப்னு பதூதா" (இப்னு பதூதாவின் ரிஹ்லா) (இப்னு பதூதாவின் பயணங்கள்) [Rihlah of Ibn Batuta] என்றும், "துஹ்ஃபத்துன் நுள்ளார் ஃபீ கராயிபில் அம்ஸார் வ அஜாயிபில் அஸ்ஃபார்" (Tuhfathun Nuzzaar fi Gharaibil Amsar waAjaibil Asfar) "வாசகர்களுக்கு நாடு, நகர விசித்திரங்கள், பிரயாண அற்புதங்கள் குறித்த அன்பளிப்பு" (A Present to the Readers re: strange things of the cities and wonders) எனும் பெயரிலும் வெளிவந்துள்ளது.

இது முதற் பதிப்பாக கி. பி. 1928-இல் கெய்ரோவில் வெளியிடப்பட்டுள்ளது. தமது பிரயாண அனுபவங்களை இவர் எழுத்தர் ஒருவருக்குக் கூற அவர் எழுதியதுவே இவரது பிரயாண நூல். ஆங்கிலத்தில் சிலர் மொழி பெயர்த்துள்ளனர். பிறமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

"இபுனுபதூதாவின் பயணக்குறிப்புகள் பலவகையில் முக்கியமானவை, பயனுள்ளவை" என மேஜர் என்பவர் அறிவிக்கிறார். தாம் சென்ற இடங்களின் வரலாற்று நிகழ்ச்சிகள், நகர்வருணனைகள், இஸ்லாமிய மதஅடிப்படையில் அமைந்த நாடும், மக்களும், வாழ்க்கையும் தாம் சந்தித்த அரசர்கள், தர்வேஷ்கள் ஷெய்குமார்கள், பார்த்த பள்ளி வாசல்கள், துறை முகங்கள் போன்றவைகள் இவரது பிரயாண நூலில் அழகாக, விவரமாக இடம் பெற்றுள்ளன

இபுனுபதூதா தமது இருபத்திரண்டாம் வயதில் டாஞ்சீரை விட்டு, மக்கமா நகரப் பயணத்தை ஆரம்பித்தார்.* பின் டெல்ஹி, மாபர்கரை, மலபார். இலங்கை, ஜாவா, சுமாத்ரா சீனு, வங்காளம், அஸ்ஸாம், கான்ஸ்டன்டி நோபிள் ஸ்பெயின் போன்ற இடங்களுக்கும் பொதுவாக முஸ்லிம்கள் ஆட்சி செய்த எல்லாப்பகுதிகளுக்கும் பயணஞ் செய்த இடைக்கால யாத்திரிகர் ஆவார். எகிப்து, பாலஸ்தீனம், அரேபியா, பாரசீக நாடு முதலியவற்றைச் சுற்றிப்பார்த்து விட்டு கி.பி. 1333-இல் டில்லி வந்து சேர்ந்தார். அப்பொழுது ஆட்சி புரிந்து கொண்டிருந்த முகம்மது பின் துக்ளக் இவரைத் தலைமை காஜியாக அமர்த்தினுர்.**


கி.பி. 1342-இல் சுல்தானுல் இவர் சீனு நாட்டிற்கு அனுப்பப்பட்டார். அதன் பின் தம் சொந்த நாடு போய்ச் சேர்ந்தார். கி.பி. 1334-லிருந்து கி.பி. 1342 வரையிலும் இந்தியாவில் பல ஊர்களுக்கு பிரயாணஞ் செய்தார். இபுனுபதூதா இந்தியாவில் சுமார் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து பிரயாணம் செய்துள்ளார். இந்த பயணத்தினுல் கிடைத்த அனுபவங்கள் இந்தியாவைப் பற்றியும் முக்கியமாக மதுரை‡ நாட்டினைப் பற்றியும் அறிய விரும்புபவர்களுக்கும், ஆராய விரும்புபவர்களுக்கும் அரிய விருந்தாக அமையும்.

---

* Luniya B. N. "Some Historians of Medieval India", Agra, 1969 P 76.

** Nilakanta Sastri K. A. Foreign Notices of South India, University of Madras, 1939 PP. 260–82.

‡ பாண்டிய நாட்டினை இக்கால வரலாற்றை ஆராய்ச்சி செய்வோர் மதுரை நாடு என்றே குறிப்பிடுவது வழக்கம்.



தமிழகத்தில்
மார்கோபோலோ
இபுனுபதூதா
பயணப் பாதைகள்
நெல்லூர்
சென்னை
மாபர்
மதுரை
கொல்லம்
தூத்துக்குடி
கன்னியாகுமரி
மன்னார்
அரிப்போ
மன்னார் வளைகுடா
இலங்கை
மார்கோபோலோ
இபுனுபதூதா

மார்க்கோ போலோ, இபுனு பதூதா ஆகியோ ரின் தமிழகப் பயணக் குறிப்புக்களோடு சேர்த்து இன் னும் தமிழகப் பயணக் குறிப்புக்களோடு சேர்த்து இன்னும் அப்பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுக் குறிப் புக்கள், மேலும் அரசு விபரச்சுவடிகள் (கெஜட்டியர் கள்) இலக்கியங்கள், பழைய ஏட்டுக்குறிப்புக்கள் ஆகி யவைகள் தரும் செய்திகளையும் கொண்டு ஓர் அபூர் வத் தமிழக வரலாற்றினைக் காணலாம்.

(2)

மார்க்கோபோலோவின் 'மாபர்', 'காயில்' வருணனை

மார்க்கோபோலோ கி.பி. 1292 இல் சீனுவிலி ருந்து புறப்பட்டு, சுமாத்ரா, மலாக்கா, அந்தமான், இலங்கையில் சிறிது காலம் தங்கிய பின், இவ்வழியாக மாபர் (Mabar) கரை வந்தடைகின்றார். இதனை மார்க் கோபோலோ வாயிலாகவே கேட்போம்:-"செய்லான் தீவை விட்டகன்று மேற்கு வழியாக அறுபது மைல் கப்பல் பிரயாணம் செய்தால், 'மாபர்' என்ற பெரு நாட்டை நீங்கள் அடைவீர்கள். இத்திரு நாடு ஒரு தீவு அன்று; பரந்து விரிந்த இந்தியாவின் ஒரு பாகமே ஆகும். இது செல்வமும் வளமும் மிக உள்ள சிறந்த நாடாகக் கருதப்பட்டு வந்தது. இந்நாட்டினை நான்கு மன்னர்கள் அரசு நடத்தி வந்தனராயினும், அவர் களில் செந்தர் பாண்டி என்றவனே முக்கியமான வனும் தலைசிறந்த அரசனுமாவான். அவன் ஆளும் நாட்டின் எல்லைக்குள், மாபருக்கும் செய்லானுக்கும் இடையே, முத்துக் குளிக்கும் இடம் ஒன்று உண்டு. அது வளைகுடா போல் தோற்றமளிக்கும். அவ்வளை குடாவிலே கடலின் ஆழம் பத்திலிருந்து பன்னிரண்டு

பாகம் (1 பாகம்-6 அடி Fathom) வரையில் இருக்கும் சிற்சில இடங்களில் இரண்டு பாகம் ஆழம் கூட இருக்காது" எனக் கூறிவிட்டு, முத்துக் குளிக்கும் தொழிலை விரித்துரைக்கிறார். இறுதியில் "சிப்பிகள் மிகப் பெருமளவில் எடுக்கப்படும் இடம் வேதாளை (Betala) என்று அழைக்கப்படும். இது பெரு நிலப்பரப்பின் (இந்தியாவின்) கடற்கரையில் உள்ளது. அவ்விடத்திலிருந்து தெற்கு முகமாக அறுபது மைல் வரையில் கடல் தொழில் நடைபெறுகிறது. (The Travels of Marco Polo Introduction by John Masefield. Chapter XX of the Province of Maabar Page 350*)

காயில் :

மார்க்கோ போலா மேலும் "காயில்" (Kael) என்ற பெருமையுடைய மிகப்பெரிய நகரத்தினை

---

* Leaving the island of Zeilan, and sailing in a westerly direction sixty miles, you reach the great province of Maabar which is not an island, but a part of the continent of the greater India, as it is termed being the noblest and richest country in the world. It is governed by four kings, of whom the principal is named Sender-bandi. Within his dominions is a fishery for pearls in the gulf of a bay that lies between Maabar and the island of Zeilan, where the water is not more than from ten to twelve fathoms in depth and in some places not more than two fathoms. The greater proportion of the pearls obtained from the fisheries in this gulf, are round, and of a good lustre. The spot where the oysters are taken in the greatest number is called Betala, on the shore of the mainland; and from thence the fishery extends sixty miles to the southward"

—The Travels of Marco Polo

Introduction by John Masefield

Chapter XX of the Province of Maabar Page 350.

மாபர் நாட்டு அரசர்களான நால்வர்களுள் ஒரு சகோதரன் ஆண்டு வந்தான். அவன் பெயர் அஸ்தியர். அவனிடத்தில் பொன்னும் மணியும் நிறைந்து இருக்கின்றன. அவனுடைய நாட்டில் பூரண அமைதி நிலவியது. இதன் காரணமாக அயல் நாட்டு வணிகர்களுக்கு இந்நகர் வசதிகளைக் கொண்ட புகலிடமாக விளங்கியது. அவ் அயல் நாட்டு வணிகர்களுக்கு அரசனால் பாதுகாப்பும் நல்ல வரவேற்பும் அளிக்கப்படுகிறது. அவர்களின் தேவைகள் உடனுக்குடனேயே நிறைவேற்றப் படுகின்றன. ஆகையால் மேலைத்திசைகளிலிருந்து ஆர்மஸ் (Ormus); சிஸ்தி (Chisti); அதன் (Aden) மற்றும் அரேபியாவின் பல பாகங்களிலிருந்து வரும் கப்பல்களில் குதிரை முதலிய வியாபாரப் பொருள்களைக் கொண்டு வந்து இறக்குமதி செய்கின்றனர்; வியாபாரத்திற்கு இத்துறைமுகம் மிகவும் ஏற்றதாகவும் அமைந்துள்ளது," என்று குறிப்பிடுகிறார்.*

மாபர் Maabar

"மாபர்", "மாபிர்" என்பது அறபுச் சொல் "கடந்து போகிற இடம்" "பாதை"; கப்பல் துறை.

---

* Kael is a considerable city, governed by Astiar, one of the four brothers, kings of the country of Maabar, who is rich in gold and jewels, and preserves his country in a state of profound peace. On this account it is a favourite place of resort for foreign merchants, who are well received and treated by the king. Accordingly all the ships coming from the west-as from Ormus, Chisti, Aden and various parts of Arabia—laden with merchandise and horses make this part which is besides well suited for commerce,

—The Travels of Marco Polo : Introduction by John Masefield Chapter XXIV Of the City of Kael Page 375.

தோணித்துறை, படகுப் பயணப்பாதை, எனப் பொருள் கூறுவர். யாக்கூத் என்பவர் (கி.பி. 1176-1229) இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைக் குறிக்க, தனது பூகோள அகராதியில் இச்சொல்லை முதன்முதலாக பயன்படுத்தினூர். மலபாரிலிருந்து கன்னனூர் வரை என அபுல்ஃபிதா (Abul Fida) குறிப்பிடுகிருர். இலங்கைத் தீவிலிருந்து பாண்டி மண்டலத்திற்கு எளிதாகச் செல்ல வாய்ப்பாகவும் சமீபமாகவும் அமைந்த பகுதியினை மாபர் பிரதேச மென அரரபியர் தொன்று தொட்டு வழங்கி வரலா யினர். நாளடைவில் கொல்லத்திலிருந்து நெல்லூர் வரையுள்ள கடற்கரையினை மாபர் என்று பிரயாணி கள் வழங்கத் தொடங்கினர்.

மார்க்கோ போலோ செய்லான் எனப்படும் இலங் கைத் தீவில் தலைமன்னூருக்கு பக்கத்திலுள்ள அரிப்போ என்னுமிடத்திலிருந்து மேற்குத் திசை வழியாக அறு பது மைல் கப்பல் பிரயாணஞ் செய்து இந்தியப் பெருங் கண்டத்தின் தென் தமிழகப் பகுதியான தென் பாண்டி நாட்டுத் துறைமுகத்தினை அடைந் தார். இப்பகுதி அப்போது பாண்டிய மன்னர் ஐவ ரால் ஆளப்பட்டது. இவர்களுள் சௌந்தர்பாண்டி எனும் சுந்தரபாண்டியன் தலைசிறந்த மன்னராகவும் இதர அரசர்கள் இவனுக்கு கட்டுப்பட்ட மன்னர் களாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆட்சி புரிந் ததை இராமநாதபுர மாவட்ட கெஜட்டியரும் வர லாற்று அறிஞர் R. C. மஜூம்தார்,* போன்றவர்களும் குறிப்பிடுகின்றனர்.

‡ Majumdar R. C. The Delhi Sultanate, Bombay 1960 Page 230-2 4

இராமநாதபுர கடற்கரை வாணிபச் சிறப்பு :-

இராமநாதபுர கடற்கரையோரங்களில் ஒன்ப தாம் நூற்றுண்டில் அறபு நாட்டுடன் ஏற்பட்ட வாணிகத்தொடர்பு பற்றியும் இங்குள்ள விலையுயர்ந்த மதிப்பு மிகு முத்துக்களைப்பற்றியும் அரபுப் பயணிகளான சுலைமான், அபூஜைது ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். ஒரு எகிப்தியப் பிரயாணியும் இராமநாதபுரத்து கடற்கரைப்பகுதிகளில் சங்கு முத்துக்குளிப்பு பற்றி குறித்துள்ளார். மார்க்கோ போலோவின் காலத்திலும் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவைகளை இராமநாதபுரத்து கெஜட்டியர் குறிப்பிடுவதையும் காணலாம். இராமநாதபுர கடற்கரையோரப் பகுதிகளில் (இன்று கீழக்கரை என அழைக்கப்படும் பகுதிகளில்) முத்துக்குளிப்பு சிறப்புற நடைபெற்ற செய்தியினை இராமநாதபுர கெஜட்டியர் சான்று பகரும்.*

---

* The pearl industry of the District attracted foreign merchants and travellers from far off European countries. These foreigners found the pearl industry in a fully developed state and wrote in praise of the high skill employed in the different processes of pearl extraction. Kilakkarai on the Ramanathapuram coast was an important emporium for pearls. A large number of colonies of fishermen who specialised themselves in pearl fishing were found near this place. The fishers dived in the deep sea as the pearls of deep sea were considered to be of great value. The fishers dived with their fishing nets in their hands with which they caught the shoal. The Sangam works like the Aganaauru, the Purananuru, Kalithogai, Silapathikaram etc., also testify to the flourishing state of this industry. The fishers after their diving operation collected the oysters on the sea bed: About the 6th Century A.D., Cosmos Indico-Pleustes [530-550 A.D.), an Egyption traveller, makes reference in his account to the chank and pearl market at Marallow, which has been identified with the chank and pearl fishery of the Ramanathapuram coast. P. 326.

—Gazetteer of India Tamilnadu State Ramanathapuram Dt: Page 326.

அன்று இராமநாதபுர, மதுரை மாவட்டங்கள் சார்ந்த நிலப்பரப்பு மதுரை நாடு (மதுரா) என அழைக்கப்பட்டு வந்தது. கி.பி. 1911-இல் தான் மதுரையிலிருந்து இராமநாதபுரம் மாவட்டம் தனி யாகப் பிரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னகத்துடன் பிற நாடுகளின் வணிகத் தொடர்பு மிகப் பழங்காலத்திலிருந்தே இந்துமாக் கடலின் வழியாக சுறுசுறுப்பாக நடைபெற்று வந்துள் ளது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே இத் தொடர்புகளைப் பற்றி குறிப்புக்கள் கிடைக்கின்றன. தமிழகம் பற்றி நமக்கு கிடைத்துள்ள வெளி நாட் டார் குறிப்புக்களுள் மிகவும் முற்பட்டவை கிரேக்க, இலத்தீன் ஆசிரியர்கள் எழுதியவை ஆகும். இவை நமக்கு கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதி வரை யில் கிடைக்கின்றன. பின்னர் சீனப்பயணிகள், சீன வரலாற்று ஆசிரியர்கள் எழுதி வைத்துள்ள ஆண்டு நிகழ்ச்சிப்பதிவேடுகள் செய்திகளைத் தருகின்றன. சீனக்குறிப்புக்களும் ஏராளம் கிடைக்கின்றன. சீனாவுக் கும் இந்தியாவுக்கும் இருந்த கடல் வழித் தொடர்பு கி.பி. ஆறும் ஏழாம் நூற்றாண்டுகளிலும் துரிதமாக அமைந்து இருந்து என்பதற்கு பல சான்றுகள் உள் ளன. எட்டாம் நூற்றாண்டு முதல் அறபு வணிகர்கள், பயணிகள், வரலாற்றாசிரியர்கள், புவியியல் ஆசிரியர் கள் ஆகியோர்களின் குறிப்புக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே இந்துமாக்கடலின் வாணிகத் தின் பெரும் பகுதி அறபு மக்களிடத்து இருந்தது என் பது அரிய சான்றாக அமையும்.

பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அறபு நாட் டில் தோன்றுவதற்கு பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே தென்னகத்திற்கும் அரபு நாடுகளுக்கும் (Middle

East க்கும்) நெருக்கமான வணிகத் தொடர்பு இருந்து வந்ததென்பதற்கு விவிலியத்தில் (Bible) காணப்படும் குறிப்புக்களும் ஆதாரமாக அமைந்துள்ளன. அரசி பல்கீஸ் (Queen of Sheba) தென்னகத்தின் விலையுயர்ந்த முத்து போன்ற பல அரிய பொருட்களை சுலைமான் நபி (அலை) (Solomon)க்கு பரிசளித்ததாகக் கூறப்படுகிறது. கி.மு. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்பிருந்தே ஆசியாவுக்கும் ஐரோப்பாவிற்கு மிடையே நிகழ்ந்த வணிகத்தின் ஆதிக்கம் அனைத்தும் பைசாந்தியரின் yzantines) கைகளிலேயே இருந்ததாகவும் கூறப்படுவதைக் காணலாம். இங்ஙனமாக வெளிநாட்டார் குறிப்புக்களிலிருந்து பன்னிரண்டாம் நூற்றுண்டுவரையுள்ள செய்திகளை அறியலாம்.*

மாணிக்கவாசகர்:

கி.பி. 632-ஆம் ஆண்டு நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் மறைவுக்கு பின்னர் அறபு நாட்டு முஸ்லிம்களைப் பற்றி திருவாசகம் தரும் குறிப்பு குறிப்பிடத்தக்கது. ஒன்பதாம் நூற்றுண்டில் மாணிக்க வாசகர், சிவபெருமான் அறபு நாட்டு வணிக வேந்தரின் தோற்றத்தில் பாண்டிய மன்னரின் முன் காட்சியளித்தார் என்பதனை திருவாசகப் பாடலில்,

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்திரு முண்டத்தர்
 பள்ளிக்குப்பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல் கொண்டுஎன்
 உள்ளம் கவர்வரால் அன்னே! (அன்னைப்பத்து 7)

[குப்பாயம்—ஜிப்பா; வெண்திருமுண்டம்—வெள்ளைத் தலைப்பாகை அணிந்ததலை; பள்ளி—மஸ்ஜித், மசூதி]

---

* தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டினர் குறிப்புக்கள் K. A. நீலகண்ட சாஸ்திரி தமிழில் மு.ரா. பெருமாள் முதலியார், பக்கம் 1—67.

எனுங் குறிப்பு அருஞ்சான்ருகும். கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டில் முஸ்லிம்கள் பாண்டி நாட்டில் மிக்க மதிப்புடன் திகழ்ந்தனர் என்பது இதிலிருந்து புலப்படு கின்றது. அறபு நாட்டிற்கும் இந்தியாவிற்கும் (பாண்டி நாட்டிற்கும்) கி.பி. ஒன்பதாம் நூற்ருண்டிற்கு முன் பிருந்து கூட வணிகத் தொடர்பு வளர்ந்தோங்கி வந் துள்ளது என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.

மதுரை மாநகரில் ஆவணி மூலத்திருவிழாவின் பொழுது, முஸ்லிம் ஒருவர் குதிரை வணிகர் வேடத் தில் குதிரை மீதேறிப் பவனி வருகின்ற வழக்கத்தை இன்றும் காணலாம். இப்பணிக்காக பரம்பரையாக மீனுட்சியம்மன் கோயிலிலிருந்து மான்யம் வழங்கப் பட்டு வருகிறதும் குறிப்பிடத்தக்கது. மாணிக்க வாசகரின் வரலாற்றில் குறிப்பிடப்படும் குதிரை வணி கர் முஸ்லிம் என்பதும் இதனுல் உறுதியாகிறது.*

மாணிக்கவாசகரின் வாழ்க்கையையும் காலத்தை யும் கூர்ந்து பார்த்தால் அநேக பல புதிய விஷயங்கள் தமிழக வரலாற்றிற்கு புதையல் பொருளாகக் கிடைக் கின்றன. "கொற்கைப் பெருந்துறை" எனும் ஊர் அன்று பெரிய துறைமுகப்பட்டணமாக விளங்கியது. இதுவே மாணிக்க வாசகர் குதிரை வாங்கிய இடம். இந்தக்கொற்கைப் பெருந்துறையே அறபு நாட்டுக் குதிரைகள் மிக அதிகமாக இறக்குமதியாகிய இடம். இது சோழநாட்டில் உள்ள ஊர் என்னும் கூற்றுப் பொருந்தாது. ஏனென்ருல் பாண்டி நாட்டு அமைச்ச ரான மாணிக்க வாசகர், பாண்டிய நாட்டுத் துறை முகத்தில் குதிரைகள் வந்து இறங்கியதாக வரலாறு

---

* Tiruvachakam Edited by : திருவாசகமணி பால சுப்பிரமணியம் With English Translation.

இருக்கும் போது பகை நாடான சோழ நாட்டிற்கு குதிரை வாங்கச் சென்றார் என்னும் கூற்று எவ்வாறு பொருந்தும்? கோயமுத்தூரிலும் பெருந்துறை எனும் ஊர் இருக்கிறது. இருந்தாலும் அது இந்த சர்ச்சையில் இடம்பெற முடியாது. காரணம் அது கடற்கரைப்பட்டினம் அல்ல. மாணிக்க வாசகர் புனிதமான (பவித்திரமான) உயர்ந்த மாணிக்கத்தினை பௌத்திரமாணிக்கப் பட்டினத்திலிருந்து பெற்றதனாலேயே அவர் மாணிக்க வாசகர் எனும் பெயர் பெற்றிருக்கலாம் என்பது ஆராய்வதற்குரியது.

இராமநாதபுர மாவட்டத்தின் கடற்கரைப்பட்டினமான பெருந்துறை என்றும் பௌத்திர மாணிக்கப்பட்டினமென்றும்* கூறப்படுவது கீழக்கரையே ஆகும். இது ஓர் இயற்கைத் துறைமுகப்பட்டினம். அறபு நாட்டு முஸ்லிம்கள் முதன் முதலில் குடியேறிய பட்டணம் இதுவென இராமநாதபுர கெஜட்டீர் (Page vii) குறிப்பிடுகிறது. * இது மதுரா (மதுரை) விற்குச் சமீபத்திலுள்ள இயற்கைத் துறைமுகப் பட்டினமாகும்.

---

* கல்வெட்டு எண் 402. A.R. No. 116 of 1903 Archaeological Survey of India. New Imperial Series, Vol. LIV. South Indian Inscription [Texts] Vol. VIII Ed. by K. V Subrahmanya Aiyer 1937 [பின்னிணைப்பு பார்க்க]

*The Muslims of the District are the descendants of the early colonists from Arabia. They first settled along the sea coast, chiefly in Kilakkarai, Devipatnam, Mantapam. Pamban and other places which enabled them to trade freely with Ceylon and gradually extended their colonies into the interior of the District. They have adopted Tamil as their language. Some great Tamil poets hail from them .

[Gazetter of India—Tamil Nadu State—Ramanathapuram Dist. Preface—Page vii]

கீழக்கரையிலிருக்கும் சொக்கநாத சுவாமி கோயிலை வரகுணபாண்டிய மன்னன் கட்டுவித்ததாக கெஜட்டியர் சான்று பகருகிறது.* இப்பாண்டிய வரகுண மன்னனிடம் மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்ததால், இவரே சொக்கநாதக் கோயிலைக் கட்டுவித்திருக்கலாம் என நம்புவதற்கு இடமுண்டு. இச்சொக்கநாத சுவாமி கோயில் இன்றும் கீழக்கரையில் இருப்பதைக் காணலாம். கீழக்கரையின் வடமேற்கில் ஆறுமைல் தொலைவிலுள்ள திருஉத்திர கோசமங்கை கோயிலில் மாணிக்க வாசகர் சில காலம் வாழ்ந்து பல பாடல்களை பாடியுமிருக்கிருர் என்பதனை வரலாறு கூறுகிறது.

கீழக்கரையில் முத்துக் குளித்தலின் பழமை:

இராமநாதபுர மாவட்டக் கடற்கரையோரக் கீழக்கரை முத்துக்களுக்கு சிறந்த இடமாக விளங்கியது. ஒன்பதாம் நூற்ருண்டில் அறபு நாட்டு சுலைமான், அபூஜைது போன்ருேரும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். 10, 11 ஆம் நூற்ருண்டில் சோழப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்திலும் இக்கடற்கரையோரம் சிறந்து விளங்கியதாக அறிகிருேம். முத்துக்குளித்தல் பற்றி சில கல்வெட்டுச் செய்திகள் கிடைத்துள்ளன. 12-ஆம், 13-ஆம் நூற்ருண்டுகளில் முத்துக்களின் சிறப்புக்களை மார்க்கோ போலோ (1254-1324)வும் குறிப்பிட்டுள்ளார். இவர் பிரயாணஞ் செய்த காலக் கட்டமும் இதுவே. பாண்டிய மன்னர்களின் சிறப்

* There is an ancient Siva temple dedicated to Sokkanatha Swamy built by Varakuna Pandiyan. Gazetteer of India Tami Nadu State Ramanathapurem Dist Page 899

பான ஆட்சிகாலத்தினையும், முத்துச் சலாபத்தினையும் மார்க்கோபோலோ இப்படியாகவே விவரிக்கின்றார். இதனையே இராமநாதபுர கெஜட்டியர் பக்கம் 326, 327-இல் பகருகின்றதனைக் காணலாம்.*

கொற்கை :

இக்கீழக்கரைத் துறைமுகத்தினையே பழம் பெரும் கொற்கை என ஆய்வாளர்கள் அறிவிப்பதும் பின்வருமாறு காணலாம்.

" [i] Dr. Wilson Bowden, Professor of Sanskrit at Oxford, had in the thirties of the last century, identified the Korkai of Tamil writers with the Kolkhoi of the Greeks and concluded that the place to which both sets of writers referred was Kilakkarai. Seaport in the present Ramnad District''.

Gazetteer of Tinnevelly, Vol. I, Page 431, 1917.

---

* About the middle of the 9th century, the Arabs came into contact with the pearl fishery of Ramanathapuram coast and had noticed the pearl and chank industries thriving well. Two of the Arab writers Sulaiman and Abu Zaid have recorded that pearls were valued as greatest treasures by the local kings. During the 10th and 11th centuries the Imperial Cholas were in possession of this coast and there are no records to give authentic information on pearl industry. Only a few of their inscriptions record the grants of pearls to the temples. During the period of the later Pandyas (12th and 13th centuries) the pearl industry in this region was a flourishing one. Marco Polo [1260-1300], who travelled in South India during this period, says in his account that the later Pandyas monopolised the pearl industry and did not allow any one to take pearls out of the kingdom. He also gives a description of the pearl fishery in the Tamil Coast.

[Gazetteer of India—Tamil Nadu State—Ramanathapuram Dist. Chap. V-Industries—Old Time Industries: Page · 326, 327].

[ii] Von Christ'an Lassen தமது Indische Alter Thomskunde Vol II, 1852 எனும் நூலில் கீழக்கரையினை கொற்கை எனக்குறிப்பிடுகிறார். அந்நூலில் தாம் வரைந்துள்ள படத்திலும் கீழக்கரையையே கொற்கை என்பதாகக் காட்டுகிறார்

[iii] கி. பி. 1886—இல் இலண்டனில் ஆங்கிலேயர்களால் அச்சியற்றி வெளியிடப் பட்டுள்ள இம்பீரியல் கெஜட்டீர் ஆப் இந்தியா (இரண்டாம் பதிப்பு) தொகுதி 8; பக்கம் 216—இல் கீழக்கரை பற்றிய குறிப்பு அமைந்துள்ளது. அட்சரேகைகளுடன் அவ்வூரின் அமைப்பைத் தெளிவாகக் காட்டி அதுவே தாலமி கூறும் "கொற்கை" என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

[iv] S. Arunachalam : the History of Pearl Fishery of the Tamil Coast எனும் நூலின் கண் பக்கம் 15-இல் Lassen னின் கருத்தினை "Kolkhoi referred to by Ptolemy is identified with Kilakkarai of the Ramanathapuram District by Lassen" எனக் குறிப்பிட்டதுள்ளதும் சான்றுகளாகக் காணலாம்.

திருநெல்வேலி கெஜட்டியர் Vol. I. பக்கம் 431-இல் கீழக்கரையினையே "கொற்கை" எனக்குறிப்பிடுவது மிக முக்கிய சான்றாக இங்கு கவனிக்கத்தக்கது.

காயல் :

ஆய்வாளர்களுக்கு மத்தியில் "காயல்" என்ற சொல் குழப்பத்தினை ஏற்படுத்தி விட்டிருப்பதை காண்கிறோம். கடலோரத்துச் சதுப்பு நிலம், கழி நிலம் ஆகியவற்றிற்கு பக்கத்திலுள்ள ஊர்களைக் காயல் என இணைத்துக் கூறுவதனைப் பரவலாகக் காணலாம். கழி,

கழிமுகம், உப்பளம் என ஆங்கில தமிழ் லெக்சிகன் பொருள் பகருகிறது.

ஆறு, கடலில் புகும் போது கடற்கரை உடைந்து காயல் எனப்படும் நீர்த்தேக்கங்கள் தோன்றுகின்றன. இதனைக் குட்டம் என்றும் கூறுவர்.

காயல் என்றதும் பிற்காலத்தில் ஏற்பட்ட காயல் பட்டணம் எனும் ஊரினை மட்டுமே ஆய்வாளர்கள் அனைவரும் கருத்துக் கொள்கின்றனர். மார்க்கோ போலோ குறிப்பிடும் (காயில் Kael) காயல் எது? எனத் தீர்மானிக்க ஆதார வாய்ப்புக்கள் நிறைய உள்ளன. அவற்றை ஆய்ந்து உண்மையைக் காண்பதுவும் இந்நூலின் குறிக்கோள்களுள் ஒன்ருகும்.

மார்க்கோபோலோவின் பயணத்திற்கு பின், எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தென் நாட்டிற்கு வந்த அறபு நாட்டு அறிஞர் **வஸ்ஸாப்** என்பவரும், கி. பி. 1498-இல் போர்த்துக்கல்லிலிருந்து வந்த **வாஸ் கோடகாமா** என்பவரும், கி. பி. 1500 ஆம் ஆண்டில் வந்த **லுடிபிகோ-தி-வர்தமா** (Ludabico—de— Varthama) என்பவரும், **பார்போசாவும்** (Barbosa) காயல் துறையில் முத்துத் தொழில் நடை பெற்றதைக் குறித்துள்ளனர்.

இராமநாதபுரத்திலிருந்து இராமேசுவரம் வரையில் நீண்டு கிடக்கும் நிலப்பரப்பின் வடகடற்கரைப் பகுதியை, குறிப்பாக தேவி பட்டணத்தினை வடகாயல் என்றும், தென் கடற்கரைப்பகுதியாகிய கீழக்கரையினை "தென்காயல்" என்றும் அப்பகுதிகளில் இன்றும் வழங்கி வருவதனை அறியலாம்.

மஜ்மூமுனுஜாத்து:

கீழக்கரையினை "காயல் கரை" "தென் காயல்" என மதுரைத் தமிழ் சங்கப் புலவராக இருந்த செய்யது முஹம்மது ஆலிம் புலவர் பாடிய "மஜ்மூமுனுஜாத்து" நூலில் பக்கம் 19—இல் குறிப்பிடுகிருர்.

நொண்டி நாடகம்

கீழக்கரை சீதக்காதி வள்ளலைப் பற்றிப்பாடும், நொண்டி நாடகத்தில்; கீழக்கரையினையே "காயல நகர்" (6), "காயல்துறை" (3); "காயல்" (65, 157, 175, 195, 221 நொண்டியின் வரலாறு) எனக் குறிப்பிடப்படுதலும் காணலாம்.

சீதக்காதி திருமண வாழ்த்து:

சீதக்காதி திருமண வாழ்த்திலும் கீழக்கரையினையே "தென்காயல்" (222) எனக் குறிப்பிடப்படுகிறது.

புலவர் நாயகம்:

காயல்பட்டணம் புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நயினர் லெப்பை ஆலிம் அவர்கள் கீழக்கரை வள்ளல் ஹபீபு முஹம்மது மரைக்காயர் அவர்களின் குமாரர் *செய்கு சதக்கத்துல்லா மரைக்காயருக்கும்

---

* வள்ளல் சீதக்காதியின் சகோதரர் மாமு நெயினு வென்ற பட்டத்து முகம்மது அப்துல் காதர் மரைக்காயரின் குமாரர் அபூபக்கர் மரைக்காயருக்கும் அவரின் மனைவி, சதக்கத்துல்லா (ஒலி)யின் மகள் சாரு உம்மாவிற்கும் பிறந்த அவ்வாக்காரு மரைக்காயர் என்ற அப்துல் காதர் மரைக்காயரின் மகள் முகம்மது இபுருஹீம் உம்மாவின் மகன் வள்ளல் ஹபீபு அரசர் என்ற ஹபீபு மரைக்காயரின் திருக்குமாரர் சேகு சதக்கத்துல்லா மரைக்காயர், ஹபீபு மரைக்காயரின் தம்பி முகம்மது அப்துல் காதர் மரைக்காயர் மகனர் முகமது காசீம் மரைக்காயர் இவர்களுக்கு காயல்பட்டணம் புலவர் நாயகம் எழுதிய கடிதம்.



கீழக்கரை கடலோரத்திலுள்ள வள்ளல் சீதக்காதியின் வசந்த மாளிகை

முகம்மது காசிம் மரைக்காயருக்கும் எழுதிய நிருபச் செய்யுட்களில்,

(1) தென்காயல் ஓம்புந் திருநபி நாமக் குரிசில்
பொன் காவல செய்யும் புகழ் முகமே—நன்காய்க்
கருணையொடு ஷெய்கப்துல் காதிறெழுதுஞ்செந்
திருமுகமே பூமுகமே சீர் —4—

(2) வையம் எல்லாந் தனி கீர்த்தி வழங்கவருங்
கருணைமுகில் வகுதை வேந்தன்
செய்யவளுங் களித்திருக்கு மணிமுன்றில் ஷெய்கு
சதக்கு உவப்ப நின்றீர்
மெய்யன் வினைத்திறன் வென்றி படைப்போனிம்
மேதினியை விளக்குமேது
பொய்யோ மற்றுரை பெயர்த்தோவிவை யாய்ந்தும்
புந்தியொடு புகலுவீரே. 3

(3) சீர்வளர் கீழக்கரையின் செல்வரிரு மாமுகமே
நீர்வளர் செங்கஞ்ச நேரொக்கும்—பேர்வளரும்
காத்தொழுகு ஷெய்கப்துல் காதிர் விடுநிருபம்
பூதொளிருங் கண்கண்ட போது 5

எனும் இப்பாடல்கள் மூலம் "தென்காயல்" என்பதும், "வகுதை" என்பதும் கீழ்க்கரையினைக் குறிப்பிடுகிறது என்பதில எவ்வித ஐயமுமில்லை என்பதனைக் காண லாம்.

காயல்பட்டணத்தைச் சேர்ந்த புலவர் நாயகம் கீழக்கரையினைத் தவிர வேறெந்த ஊரையும் "தென் காயல்" என்று அவர்களது எந்த நூலிலும் குறிப் பிட்டதாகத் தெரியவில்லை.

சின்னச் சீறு

கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர்* அவர்கள் சின்னச்சீறு பாடுவதற்கு கொடை நாயகராயிருந்த

---

* புலவர் பனீ அஹமது மரைக்காயரின் பரம் பரையினர் இன்றும் கீழக்கரை மேலத் தெருவிலும் கிழக்குத் தெருவிலும் செல்வச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

கீழக்கரை வள்ளல் லெப்பை நெயினா மரைக்காயரை‡ வாழ்த்திப் பாடும் பாடல்களில்,

ஆதிநூல் உபநிடதந்தேர் சுலையுமானிலெப்பை ஆலிம்
சேய் சொற்
போதமுறு மெய்ஞ்ஞானச் சதக்கத்துல்லா ஆலீம்
புதல்வி பாலன்
சாதிநாயகன் வகுதை லெப்பை நயினான் இதயத்
தடத்திற் பூத்த
பாத தாமரையிறசூல் புகழ்பாடக் கனகமழை
பரிவிற்பெய்தான் 11

எனும் இந்தப் பாடல் மூலம் 'வகுதை' என்பது கீழக்கரையினையே சுட்டிக் காட்டுவதை அறிகிறோம்.

காகிரி நாட்டுவளம்

சின்னச் சீறா பாடிய கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயரின் புதல்வர் செய்யிது அஹ்மது மரைக்காயர் அவர்கள், கீழக்கரை புதுப்பள்ளி முகப்பு

---

‡ கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர் அவர்கள் சின்னச் சீறா பாடியதற்கு கொடைவள்ளலாகிய லெப்பை நெயினா மரைக்காயர் அவர்கள், கீழக்கரை கொடைவள்ளல் சீதக்காதி மரைக்காயர் அவர்களின் இளைய சகோதரர் மாமு நெய்னாவென்ற பட்டத்து முகம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் மகன் அபூபக்கர் மரைக்காயருக்கும் மாதிஹுற் றசூல் சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களின் மகள் சாறா உம்மாவிற்கும் பிறந்தவர்களாவர். இவர்கள் ஐதுறூஸ் என்னும் கப்பலைக் கட்டி நூற்றுக்கு மேற்பட்ட உலமாக்கள், சூபிகள், புலவர்களை சொந்தச் செலவில் ஹஜ்ஜுக்கு அழைத்துப் போய் வந்தவர்களாவார்கள்.



கீழக்கரை புதுப்பள்ளி முகப்பு திண்ணைக் குறட்டில்
அடங்கப்பட்டிருக்கும் ஜமால் முகம்மது ஒலியின் கப்றும்
அவர்கள் மகன் மீரா லெப்பை ஒலியின் கப்றும்

திண்ணைக் குறட்டில் அடங்கப்பட்டிருக்கும்* ஜமால் மூஹம்மது (ஒலி) அவர்களைப் போற்றி, [நூறு நாமா எனுந் தலைப்பினுள் அமைந்த-பதிப்பு 1953 நூலில்] தனிப்பகுதியாக **காகிரி நாட்டு வளம்** எனுந் தலைப்பில் பாடிய பதினான்குப் பாடல்கள் காணக்கிடைக்கின்றன. [பின்னிணைப்பில் பார்க்க] இக் காகிரி நாட்டு வளத் தினில், ஜமால் முஹம்மது (ஒலி) அவர்களைக் குறித்து,

பிறந்து கீழக்கரையினில் வாழ்ந்து பேரின்பான்
பதினாலு இல்மையுந்
துறந்து அறிந்த அறிவு தன் யாவர்க்குஞ் சொல்லத்
தீனைத் தினம் வளரச் செய்தோர்
மறந்தும் பொய்மை கனவினிலே நல்வாக்கிலே
அணுகாத நல்வள்ளலாஞ்
சிறந்த பேர்கொள் ஜமாலு முஹம்மதெம் செம்மல்
வாழும் வகுதை நன்னாடே-3

பள்ளி தோறினும் நம் இறையோனைப்
பணிந்து மாந்தர் படித்தநல் வேதத்தைக்
கிள்ளை கேட்டுப் படித்திடுஞ்
சொல்லைக் கேட்டு நங்கணமே
தள்ளொணாச் சொல்லிதென்று முசீபத்துத்
தங்கிடாது அகன்றேவிரைந் தோடிடும்
வள்ளலான ஜமாலு முகம்மது
வாழுங் காயல் வகுதை நன்னாடே —6

---

* காகிரி நாட்டு வளம் பாடல்களுக்குரிய ஜமாலு முஹம்மது (ஒலி) அவர்களின் அடக்க ஸ்தலம் கீழக் கரை புதுப்பள்ளி முகப்பு திண்ணைக் குறட்டிலும், பாடிய புலவர் செய்யிதஹமது மரைக்காயரின் அடக்க ஸ்தலம் கீழக்கரை கிழக்குத் தெரு அப்பாப் பள்ளியில் அமைந்திருப்பதுவும் காணலாம்.

வள்ளலாதி ஹலறத்திலாகவு மக்கள் சீடருமற்றுள
—பேர்களும்
மெள்ளவே குளிப்பாட்டிக் கபன் செய்து வேதம்
—ஓதித் தொழுவித்து நற்புதுப்
பள்ளித்திண்ணைக் குறட்டிலடக்கவும் பாக்கியப்
—பலனும் பெருத் தோங்கவுந்
தெள்ளிதான ஜமாலு முஹம்மதாஞ் செல்வர்வாழ்
—காயலூர் எங்களூரே—11

எனும் பாடல்களில் கீழக்கரையினையே அறுதியிட்டு, உறுதியாக "காயல்", "வகுதை" எனப் பாடியிருப்பதனைக் காணலாம்.

பல்சந்த மாலை

இங்கு களவியற்காரிகை என்னும் அகப்பொருள் இலக்கண நூலின் உரை மேற்கோளில் "பல் சந்த மாலை" எனும் நூலின் எட்டுச் செய்யுட்கள் தரப்பட்டுள்ளன. (பின்னிணைப்பு காண்க) பத்தாம் நூற்றுண்டைச்சார்ந்த பழமை நூலாகக் கருதப்படும் இப் பல் சந்தமாலைப் பாடல்களில் வகுதை, வச்சிர நாடு, சோனகர் வாழும் செழும் பொழில், "யவனர்கள் அல்லா என வந்து, சந்தியும் நந்தாவகை தொழும் சீர் நல்லார் பயிலும் பழனங்கள் சூழ் தருநாடு" எனக் கீழக்கரையினைக் கூறுகிறது. இப்பல்சந்தமாலைப்பாடல்கள் மூலம் வகுதாபுரியில் முஸ்லிம் மன்னராட்சி புரிநத செய்தியும், அரேபிய வர்த்தகர்கள் இங்கு வந்து சந்தித்து, அல்லாஹ்வினைத் தொழுது வந்தனர் என்பதும் அறிய முடிகிறது. இவற்ருல் கீழக்கரை பழமைப்பட்டினம் என்பதனை உறுதிப்படுத்தப்படுகிறது.

நபி அவதார அம்மானை :-

சீருப்புராணம் பாடிய உமறுப் புலவரின் மகன் கவிக்களஞ்சியப்புலவர் தாம் பாடிய, நபி அவதார அம்மானையில் "வகுதைநகர் காலி (நீதிபதி)சேகு முதலி

யாரின் மகன் உமறுப்புலவர்' என்பதனை, "வண்டாடுஞ் சோலை வகுதை நகராதிபதி சேகு முதலிதரும் செல்வருமறுப்புலவர் வாகு பெறப் பெற்று வளர்த்தெடுக்க வந்த முகில்' எனப் பாடியிருப்பதிலும் 'வகுதை' என்பது கீழக்கரையினையே குறிக்கிறது.

கல்வத்து நாயகம்

கீழக்கரை கல்வத்து நாயகம் ஷெய்கு. செய்யிது அப்துல் காதிறுஸ் ஸவானி (ரலி) அவர்கள் எழுதிய ஷெய்கு சதக்கத்துல்லா (ரலி) சரித்திர சுருக்கத்திலும்* பக்கம்—7—இல், கீழக்கரையினை, "செம்பிநாடு. அனுத்துகை மங்கலம், நினைத்தது முடித்தான் பட்டணம், பௌத்திரமாணிக்கப்பட்டினம், கேலிக்கரை, கிற்கிறு" எனக் குறிப்பிடுகிறார்கள்.

மதுரை காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்

"கீழக்கரையானது, சென்னை இராஜதானியில் தமிழ் மொழி பரவிய சேது நாட்டின் தலைநகரான இராமநாதபுரத்திற்குத் தெற்கே சமுத்திரக்கரை' அருகில் கலங்கரை விளக்கமாக அமைந்த சீருஞ்சிறப்பும் பொருந்திய திவ்விய நகரம். இதற்குப் பௌத்திர மாணிக்க நகர், செம்பி நாடு, நினைத்தது முடித்தான் பட்டணம், காயற்கரை, தென் காயல், முதலிய பல பெயர்கள் பழைய சுவடிகளிலும் புராதன சாஸனங்களிலும் கூறப்படுகின்றன. என்றாலும் காலக்கிரமத்தில் அவைகள் யாவும் வழக்கொழிந்தனவாகி கீழக்கரை என்பது ஒன்றே தனிச்சிறப்புப் பெயராக வழங்கி

---

* பதிப்பு: (முதல் வெளியீடு 1908), 1968

வருகிறது'' என்கிறார் மதுரை ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்.*

கீழக்கரை சொக்கநாத சுவாமிக் கோயில் கல்வெட்டு

கிழக்கரையினை 'நினைத்தது முடித்தான் பட்டணம்'' என கல்வத்துமாலை பாடல் 44-ம் பருகிறது. கீழக்கரையில் இருக்கும் ''நினைத்தது முடித்தான் பிள்ளையார் கோயிலின் திருப்பணிக்கு கீழக்கரையில் விற்கும் 100 முத்துச்சிப்பிகளின் விற்பனையில் ½ பணம் வீதம் கொடுக்க வேண்டும் என்பது கீழக்கரை சொக்கநாத சுவாமிக் கோயில் கல்வெட்டு தரும் செய்தியாகும். (கல்வெட்டு எண் 396 of 1907 Reg. S. 1453)$

இங்ஙனமாக கீழக்கரையினைக் குறிப்பிடும் மறு பெயர்கள் பற்றிய பட்டியல் விபரச்சான்றுகளுடன் பின்னிணைப்பில் காண்க. அவைகள் கீழக்கரையின் பழமைக்கும் பெருமைக்கும் அரியதுணை நிற்பனவாகும் எனில் மிகையன்று.

---

* 'ஆலிம் புலவர் ஆன்ற ஒழுக்கம்'—மதுரை ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர் பக்கம் 2. 1960, நூறுல் ஹக் பிரஸ், இஸ்மாயில்புரம், மதுரை.

$ "On the door-post of the Mantapa in front of the Sokkanathaswamin temple: Registers in S. 1453 expired Vikrita, an agreement by which half a panam was to be given on every 100 pearls sold in Kilakkarai and the proceeds to be utilised for worship and repairs to the temple of Ninaittadumuditta Pillaiyar".

—396 of 1907. Reg. S. 1453. A topographical list of the Inscriptions of the Madras Presidency collected till 1915 by V. Rangacharya, Vol. II 1919.

காயல்பட்டணம்-பிற்காலப் பட்டணமே

டாக்டர் முஹம்மது ஹுஸைன் நயினார், B.A.,MA., LL.B [Aligarh], Ph. D. (London) அவர்கள் 'தென்காயல்' என்பதும் கீழக்கரையின் மற்றொரு பெயர். இந்த நகருக்கு பௌத்திரமாணிக்கப்பட்டினம், அனுத்தொகை மங்கலம், செம்பிநாடு, நினைத்தது முடித்தான் பட்டணம், வகுதை, வச்சிரநாடு முதலிய சில பெயர்களும் வழங்கியதாகத் தெரிகிறது. சாலிவாகன சகாப்தம் கி.பி. 1790 ஆம் ஆண்டு வரை எழுதப்பட்டு வந்த தஸ்தாவேஜுகளில் அனுத்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான் பட்டணம், செம்பிநாடு என்ற மூன்று பெயர்கள் கீழக்கரையைக் குறித்து வழங்கி வந்திருக்கின்றன என சீதக்காதி வரலாறு பக்கம் 21-இல் ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் டாக்டர் நயினார், "காயற்பட்டணம் என்ற பெயருள்ள துறைமுகம் ஒன்று அப்போது இருந்ததாக மார்க்கோ போலோ முதலிய கிறிஸ்தவப் பிரயாணிகளாவது, இப்னுபதூதா வரையுள்ள அறபு ஆசிரியர்களாவது வேறு பிரயாணிகளாவது தாம் எழுதிய புத்தகங்களில் எங்கும் குறிப்பிடவில்லை. போர்த்துக்கேயர் இந்தியாவுக்கு வந்து மேற்குக் கரையிலும் கிழக்குக் கரையிலும் தம்முடைய ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் நிலை நாட்டுவதற்கு எண்ணிலாத கஷ்டநஷ்டங்களுக்கிடையே முயற்சி செய்து வந்தார்கள். அப்பொழுது தென்னாட்டிலுள்ள அரசுகளோடு முக்கியமாக கள்ளிக்கோட்டை மன்னர் சாமுத்திரியோடும் விஜய நகர அரசோடும் பிஜாப்பூர் சுல்தான்களோடும் பல போர்கள் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றிய வரலாறுகள் சரித்திரங்களில் அதிகமாகக் காணக்கிடக்கின்றன. இருப்பினும் காயற்பட்டணத்தைப்பற்றிய குறிப்புக்களை நாம் காணவில்லை. 'புன்னைக்காயல்' பற்றிய

சில விபரங்கள் கிடைக்கின்றன. காயற்பட்டணம் என்ற பெயரிலாவது குறிப்பு அகப்படுமா என்று தேடினல், அதுவும் கிடைக்கவில்லை. இக்காரணங்களால் டாக்டர் கால்டுவெல் சொல்வது போலக் காயற்பட்டணம் சமீப காலத்தில் தான் தோன்றிய தென்று கூறவேண்டியிருக்கிறது.'' இவ்வாறு தெளிவாக டாக்டர் ஹுஸைன் நயினர் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

காயல்பட்டணம் ஹாபிஸ் எம். கே. செய்யிது அஹ்மது தமது ''வான்புகழ் காயல்பட்டணம சரித்திரத்தில்'' (பக்கம் 18), ''தற்பொழுதுள்ள காயல் பட்டணம் கி.பி. 13 ஆவது நூற்றுண்டில் காயலில் குடியேறிய அரபு முஸ்லிம்கள் தங்களது சௌகரியத்தின் பொருட்டு திரும்பக் குடி ஏறிய ஸ்தலமே தவிர ஆதிக் குடி ஏற்ற ஸ்தலமன்று'' எனக் கூறுதலும் டாக்டர் நயினரின் கருத்தினை உறுதி செய்கிறது. மேலும் இந் நூலின் முகவுரையில் நூலாசிரியர் M. K. செய்யிது அஹ்மது அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவதனை பார்ப்போம்: ''சென்னை சர்வகலாசாலை அரபி, பாரசீக, உர்து இலாக்கா தலைவர் ஜனுப் டாக்டர் S. முஹம்மது ஹுஸைன் நயினர் சமீபத்தில் எழுதிய ''தென்னுட்டைப்பற்றிய அரபி பூகோள சாஸ்திரிகளின் அறிவு'' எனும் நூலில் தமிழ் நாட்டில் பலநகர்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஆனுல் காயல்பட்டணத்தின் பெயர் கூட அதில் இடம் பெறவில்லை. இது விஷயமாக டாக்டர் நயினர் அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, 14-வது நூற்றுண்டு வரை அரபி சரித்திராசிரியர்களின் சரித்திர குறிப்புகளில் காயல்பட்டணத்தைப் பற்றிய விபரம் காணப்படாததாலேயே விடுபட்டது என்று கூறியுள்ளார்.'' இக்கூற்றும் மேலும் காயல்பட்டணம் பிற்காலத்தில் எழுந்த பட்டணம்

எனும் கருத்தினை உறுதி செய்கிறது. இத்தோடு மார்க்கோ போலோ குறிப்பிடும் (காயில்) காயல் இன்றைய காயல்பட்டணமா? (இல்லை) என்பதற்கு கால்டுவெல்லின் ஆராய்ந்த ஆய்வுரையும்,* திருநெல்வேலி கெஜட்டியரும்† சிறந்த பதில் தருவதை இங்கே காணலாம். புன்னைக்காயலையும் கால்டுவெல் இன்றைய காயல்பட்டணம் போன்றுதான் அண்மைக்காலத்தில் எழுந்த ஊர். இது போர்த்துகீசியர்கள் வந்த பின்பே காயலிலிருந்து இங்கு குடியேறினர் என்கிறார். அதோடு, திருநெல்வேலி கெஜட்டியர் இன்றைய காயல்பட்டணத்தினர் அவர்களது சொந்த கூற்றின் படி சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர் அறபு நாட்டி

---

* "I have already mentioned that care must be taken not to identify Marcopolo's Kayal with Kayalpattanam—another town on the coast a modern place, but now very large, containing about 7000 Muhammadans. There is another small port in the same neighbourhood, a little to the north of Kayalpatnam called "Pinnaccael' in the map, properly Punnai-K-Kayal, but this also is a place of comparatively recent origin, and many of the inhabitants of Kayalpattanam state that their ancestors came originally from Kayel, subsequently to the arrival of the Portugese."

Page 41. Political and General History of the District of Tinnevelly in the Presidency of Madras.
Rev. R. Caldwell : 1881.

†KAYALPATTANAM: "The place is inhabited almost exclusively by Muhammadans, whose own account of themselves and the place is that they came from Arabia several hundreds of years—perhaps a thousand years—ago and, by the favour of Pandya King, obtained a tract of country four miles long and one and half miles broad and there founded their settlement".


Page 499. Madras District Gazetteers Tinnevelly Vol. 1 1917 by H. R. Pate, K S

லிருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்கின்றனர் எனக் கூறப்பட்டிருக்கும் சான்றும் இன்றைய காயல்பட்டணம் பழமையான காயல் அல்ல, சமீப காலத்தில் ஏற்பட்ட பட்டணமாகத் தெரிகிறது என்பதற்கு அதிக அளவு சான்றுகளாக உள்ளன. டாக்டர் ஹுஸைன் நயினாரும் இதனைச் சீதக்காதி வரலாறு நூலிலும் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் அவருக்கு இன்று கிடைத்துள்ள சில கல்வெட்டுக்கள் போன்ற சான்றுகள் கிடைத்திருப்பின் மேலும் தெளிவாக்கி உறுதிப்படுத்தியிருப்பார். மார்க்கோபோலோ குறிப்பிடும் பழமையான "காயல்", இபுனு பதூதா குறிப்பிடும் "பத்தன்"—பௌத்திர மாணிக்கப்பட்டினம்"-இயற்கைத் துறைமுகப்பட்டனமாகிய கீழக்கரையே என்பது முன் சான்றுகளாலும் பார்த்தோம். இனியும் தொடர்ந்து காண்போம்.

பத்தன்-பௌத்திர மாணிக்கப்பட்டினம்

"பத்தன்", "பௌத்திரமாணிக்கப்பட்டினம்" எனும் இந்த இரண்டு பெயர்களும் கீழக்கரையின் பழமையான பெயர்களாகும். 'பௌத்திரமாணிக்கப் பட்டினம்' எனக் கல்வெட்டு (எண் No: 403 A.R. No: 117 of 1903 முழுக் கல்வெட்டும் பின்னிணைப்பில் பார்க்க) கூறும் தொன்று தொட்ட புகழுடைய ஊராகும். அறபுப் பயணியான இபுனு பதூதா "பௌத்திரமாணிக்கப்பட்டினம்" என்பதனைக் கூறக் கேட்டு சுருக்கமாக 'பத்தன்' என உச்சரித்தார் என்று நம்ப வேண்டியது இருக்கிறது.

இபுனு பதூதாவின் அறபி பிரயாணக் குறிப்புக் களிலிருந்து, பத்தனிலிருந்து பாண்டியத் தலைநகரான



கீழக்கரை (பத்தன்)யில் இபுனு பதூதா பார்த்த பள்ளிவாசல்

மதுரா (மதுரை)விற்கு அறுபது மைல் (20 பர்சங்) தூரம் என்று இபுனுபதூதா தம் அறபி நூலான ''துஹ்ஃபத்துன் நுள்ளார் ஃபீ கராயிபில் அம்ஸார் வ அஜாயிபில் அஸ்ஃபார்'' பக்கம் 142இல் குறிப்பிட்டுள்ளதிலிருந்து சந்தேகமின்றி அவர் குறிப்பிடும் 'பத்தன்' பௌத்திர மாணிக்கப்பட்டினமாகிய கீழக்கரை என்பது சந்தேகமில்லாமல் தெளிவாகிறது. இன்றும் கீழக்கரையிலிருந்து, பழைய மங்கம்மா சாலை வழியாக மதுரை அறுபது மைல் தொலைவில் இருப்பதையும் அறியலாம். இதற்கு சான்று பகருவான் போல சீதக்காதி திருமண வாழ்த்தில்,

''விருப்பினு லைங்காதம் மீனவன்பெண்
வீடுமட்டுங்
கருப்பினுல் பந்தலிட்டுக் கல்யாணம்
செய்தபிரான் 51

என்பதில், சீதக்காதியும் அவரின் மூதாதையர்களும் வாழ்ந்த கீழக்கரையிலிருந்து மதுரை ஐங்காத தூரம் (60 மைல்) எனக் குறிப்பிடுவதிலிருந்தும் உறுதியாகிறது

இபுனுபதூதா தமிழகத்திற்கு வந்த பொழுது, மதுரையில் சுல்தான் கியாஸுத்தீன் ஆட்சி செய்து கொண்டிருந்தார். இபுனு பதூதா பின்வருமாறு, ''பத்தனை'' விவரிக்கிறார்.

''பத்தன் முஸ்லிம்கள் அதிகமாக இருக்கும் பட்டணம் ஆகும். இங்கு கருங்கல்லால் கட்டிய அழகான பள்ளிவாசல் இருந்தது.* நிஷாப்பூரிலிருந்து வந்த ஒரு

---

*இதுவே கல்வெட்டு No: 402. A R No 116 of 1903 கூறும் பௌத்திரமாணிக்கப்பட்டின சோனக சாமந்தப்பள்ளி.

தர்வேஷ் (ஷைகு முஹம்மது மஜ்தூபி) முப்பது பக்கீர் களுடன் இந்தப்பள்ளியில் தங்கியிருந்தார். அவர் ஒரு சிங்கத்தை வளர்த்து வந்தார். அது மிக சாதுவாக இருந்தது. மற்ருெரு பக்கீர் ஒரு மானை வளர்த்து வந் தார். அவை இரண்டும் அன்போடு பழகி வந்தன. இங்கு கிடைத்த திராட்சையும் மாதுளம் பழமும் நல்ல ருசியுடன் இருந்தது. முஸ்லிம்கள் நல்ல மார்க்க பக்தியுடையவர்களாகஇருந்தார்கள். இந்த ஊர் துறை முகம் இயற்கையான அமைப்புடன் இருந்தது. இத் துறைமுகத்தில் உறுதியான உத்திரங்களின் மீது கட் டப் பட்ட பெரிய விதான மண்டபம் ஒன்றிருக்கிறது. இது மரத்தால் செய்யப்பட்டதே. அதனை அடை வதற்கு மூடுவழி ஒன்றிருக்கிறது. பகைவர்கள் கடல் வழியாக அந்த நகரத்தை தாக்க வந்தால், துறை முகத்திலுள்ள கப்பல்களெல்லாம். மண்டபத்தோடு, பிணைக்கப்படுகின்றன. அவற்றி லுள்ள போர்வீரர்கள் அனைவரும் விதான மண்டபத் திற்குள் சென்று விடுகின்றனர். அதனுல் பகைவர்கள் அவர்களைத் தாக்குவதற்கு வழியில்லாமல் போகிறது,'' ''இத்துறைமுகத்திலிருந்து சைனுவிற்கும் பல தூர தேசங்களுக்கும் கப்பல் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தப்பட்டணத்தில் இபுனு பதூதா இரண்டுவாரம் தங்கியிருந்து விட்டு, அறுபது மைல் தொலைவில் உள்ள மதுரா (மதுரை) போனதாக வும் அவர் குறிப்பிடுகிருர். இங்கு தங்கி இருக்கும் பொழுது இவ்விடம் வந்த சுல்தான் கியாஸுத்தீனை தாம் சந்தித்ததாகவும் தெரியப்படுத்துகிருர். மதுரை யில் சிலகாலம் தங்கிவிட்டு முஹல்லத்தீவு (மாலத்தீவு) போவதற்காக திரும்பவும் பத்தன் துறைமுகம் வந்து

எமன் (Yemen) போகும் 8 கப்பல்களில் ஒரு கப்பலில் தாம் கொல்லம் போனதாகக் கூறுகிறார்.*

இதற்கிடையில் பத்தனிலிருந்து கொல்லம் போகும் வழியில் வேறு எந்த முஸ்லிம்கள் குடியிருப்பு ஊர்களுக்கும் போனதாக அவர் குறிப்பிடவில்லை. போகும் பயணப்பாதைகளில் முஸ்லிம்கள் குடியிருக்கும் ஊர்கள் இருந்திருந்தால் தவறாது சென்றிருப்பார் அல்லவா? முஹல்லத்தீவுக்கு முஸ்லிம்களைப் பார்க்கச் சென்றிருக்கிறார். இந்தச் சுற்று வட்டாரங்களில் (அக்கம் பக்கங்களில்) முஸ்லிம்களின் ஊர்கள், குடியிருப்புக்கள் இருந்திருந்தால் பார்க்கத்தவறியிருக்கமாட்டார். தனது குறிப்புக்களில் எழுதி இருப்பார் அல்லவா?

"மாபர்" எனும் தமிழகக் கடற்கரையோர துறை முகப்பட்டினம் 'பத்தன்' (பௌத்திரமாணிக்கப்பட்டினம்). இங்கு கப்பல்கள் போக்குவரத்தினை, "பத்தன் மதுரையின் துறைமுகப்பட்டினம்; இங்கு கப்பல் பயணிகள் இறங்கவும் ஏறவும் செய்தனர், என்பதனை

"Fathan was the Port of Madura from which people embarked on their voyages elsewhere and in which normally they would disembark for getting into the country." என S. Krishna Swamy Iyengar தனது South India and Her Muhammadan Invaders —நூலில் பக்கம் 192-இல் எழுதுவதனைக் காணலாம்.

---

* Ibn Battuta—Travels In Asia And Africa (1325—354)Ed : 1957.

Tr and Sel by H. A. R. Gibb Pages 262 to 265.

இபுனுபதூதாவின் பயண நூலை மொழி பெயர்த்த அரபி, ஆங்கிலப் பேராசிரியர் H. A. R. Gibb 'பத்தனை' இராமநாதபுரத்திற்குத் தெற்கே, பத்து மைல் தொலைவிலுள்ள கைலுகரியாகத்தான் (Kaylukari) இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.* இங்கு இவர் கைலுக்ரி—காயல்கரை என உச்சரித்து குறிப்பிடுவது கீழக்கரையே ஆகும் என்பதில் ஐயமில்லை.

திமிஷ்கி என்பவர் கி. பி. 1340-இல் எழுதிய நூலில், மாபர் கரையிலிருந்த "பாத்னி"; "பத்தன்" நகரைப்பற்றி குறிப்பிடுகிறார். இது இராமநாதபுரத்திற்கு அண்மையிலுள்ள ஊர் என்றும் கூறுகிறார். இது இபுனு பதூதா விரித்துரைக்கும் பத்தனை படிக்கும் பொழுது, கருங்கல்லால் ஆகிய பள்ளியினைப் பெற்ற ஊர் கீழக்கரையினை உறுதி செய்கிறது. அறிஞர் யூல் (Yule) அவர்களின் கருத்தும் இராமநாதபுரத்தின் அண்மையான இடத்தினைக் காட்டுகிறது. ஆனால் அவரால் அந்நகரினைச் சுட்டிக்காட்ட இயலாது போகிறது என Arab Geographers' Knowledge of South India—நூலில் பக்கம் 36-இல் Dr முஹமது ஹுஸைன் நயினார் எழுதியுள்ளார் ‡

---

*Ibnu Battuta called at the port of Kaylukari 10 miles South of Ramnad Page 366. Ibn Battuta—Travels in Asia and Africa (1325—1354) Ed: 1957. Translated by: H.A.R Gibb.

‡"Dimishqi refers to Fatni and from the way in which he speaks, it appears that the place must be in the neighbourhood of Ramnad. This view is further strengthened when we read the account of Ibn Battuta. After reading these two accounts it is possible to some extent to say that 'Fatni' or 'Fattan' must refer to either Devipattanam or Kilakkarai. The description of Ibn Battuta of 'a fine mosque built of stone in Fattan leaves little doubt in the choice

வெனீஸ் நாட்டுப்பயணியாகிய மார்க்கோ போலோ தென்னகத்திற்கு வந்த பொழுது, மாபருக்கு வந்திறங்கியதாகக் குறிப்பிடும் இடத்தின் வர்ணனையில் இலங்கையில் உள்ள தலைமன்னாருக்கு சமீபமாக அமைந்திருக்கும் அரிப்போவிலிருந்து 60 மைல் தொலைவிலுள்ள மாபர் கரையோர துறைமுகத்திற்கு வந்ததாகக் குறிப்பிடுகிறார். அரிப்போவிலிருந்து கீழக்கரை 60 மைல் தொலைவில் இருப்பதால், இதுவே மார்க்கோ போலோ குறிப்பிடும் "Kael"; இபுனு பதூதா குறிப்பிடும் "பத்தன்" எனும் பௌத்திர மாணிக்கப்பட்டினமாகிய கீழக்கரை என்பதனை உறுதி செய்கிறது.

எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், கால்டுவெல் போன்றோர் "பத்தன்" ஊர் பற்றி தெளிவான முடிவிற்கு வராத காரணம் இன்றைக்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் போன்ற பிற செய்திகளை அறிய

---

of Kilakkarai as the place meant. The Mosque still exists there, a beautiful building of stone, very rare in the Tamil districts, Further the mention of 'crazy dervishes' whom Ibn Battuta met in Fattan, also points to Kilakarai where even today such Majdhubs are seen, Thus the description of Ibn Battuta is applicable to Kilakkarai and not to Devipattanam which is always a famous place of pilgrimage for the Hindus, Yule has successfully concluded that the place must be in the vicinity of Ramnad, but he is not able to identify it definitely with any town."

[See ".Cathay and the Way Thither", Vol. IV P. 35. f.n. 1 The Hakluyt Society"]

'Arab Geographers' Knowledge of Southern India. P. 36 S. Muhammad Husayn Nainar, M.A., LL.B., Ph.D. University of Madras 1942."

வாய்ப்பில்லாது போனமை அன்றி வேறில்லை. இக்கல் வெட்டு பற்றி அறியாதிருந்த பொழுதும். டாக்டர் எஸ். முஹமது ஹுஸைன் நயினுர், ''பௌத்திர மாணிக்கப்பட்டினம் சுருக்கமாக பத்தன் எனப்பெயர் பெற்றது. அது கீழக்கரையினைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை'' என்கிருர். ''பாத்னி'' என திமிஷ்கி குறிப்பிடுவதும் கீழக்கரை தான் என்கிருர். மேலும் பதின் மூன்ரும் நூற்ருண்டுக்கு முன்பே தென்காயல் என்ற பெயருள்ள கீழக்கரைப்பட்டினம் மாபர் கரையிலுள்ள முத்துச்சலாபத் துறைகளுள் ஒன்ருக இருந்திருக்கிறது என்பது நன்கு விளங்கும்.'' எனவும் டாக்டர் நயினுர் எழுகிருர்.*

இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்


இஸ்லாமியக் கலைக்களஞ்சிய ஆசிரியர் M. R. M அப்துற்றஹீம் B. A அவர்கள், தொகுதி இரண்டு பக்கம் 695-இல் கீழக்கரையினைப்பற்றி குறிப்பிடும் பொழுது, ''பாண்டியர்களின் பழம் பெருந்துறைமுகமான கொற்கை என்பது இவ்வூரே என்றும் இத்துறைமுகத்தின் வழியாக அரேபியா, கிரீஸ், ரோம், சீனு ஆகிய நாடுகளுக்கு முத்து, பவளம், வாசனைப் பொருள்கள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும் ஆய்வாளர் கூறுவதிலிருந்து இது தொல்பதி என்றே தெரிய வருகிறது.இவ்வூரில் பல இடங்களில் தோண்டிப் பார்க்கும் பொழுது கிடைத்த பழைய சீனப் பீங்கான்கள் மற்றும் செப்புக்காசுகள் ஆகியவை இதனை உறுதிப்படுத்துகின்றன.'' எனக் கூறுகிருர்.

ஸ்லூப் ஜேம்ஸ்

கீழக்கரை மிக வசதியான துறைமுகம் என்பதனையும் ''ஸ்லூப் ஜேம்ஸ்'' எனும் போர்க் கப்பல் பழுதி

---

*சீதக்காதி வரலாறு, டாக்டர் ஹுஸன் நயினுர். பக். 25.



வள்ளல் சீதக்காதியின் இளைய தம்பி ஷெய்கு இப்ராகீம்
மரைக்காயரின் வேதாளையிலுள்ள அடக்கஸ்தலம்

பார்ப்பதற்குப் பொருத்தமான இடம் கீழக்கரை என்று கிழக்கு இந்திய ஆங்கில கம்பெனியார் தங்கள் பதிவேடுகளில் குறித்துள்ளனர்.

கீழக்கரை

கிழக்கு கடற்கரையில் பாம்பனுக்கும் தூத்துக் குடிக்குமிடையே, மன்னார் வளைகுடாவில் அமைவுறும் பழம்பெரும் இயற்கைத்துறைமுகப் பட்டினம் கீழக் கரையே அன்றி வேறில்லை. இது இராமநாதபுரம் நக ரத்திற்கு தெற்கே பத்து மைல் தொலைவில் கீழக்கரை 9—14—20—78—50—10—என்னும் அட்சரேகையில் அமைந்துள்ளது.

இங்கு மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள வணிகர்கள் மிகப்பழங்காலத்திலிருந்தே குழுமி வாணிகம் செய்து வந்தனர். அறபு நாட்டுக் குதிரைகள் இறக்குமதி செய் யப்பட்டது பற்றியும் இராமநாதபுர கெஜட்டியரும், வஸ்ஸாப் போன்ற பிற நாட்டு பயணிகளும் குறிப்பிடு வதைக் காணலாம். கீழக்கரை புராதனத் துறை முகப்பட்டணமானதால் கப்பல் போக்குவரத்தை முன்னிட்டு வள்ளல் சீதக்காதி அமைத்துள்ள கடற் கரையோர வசந்த மாளிகையில் பொருத்தப்பட்டி ருந்த பழைய கலங்கரை விளக்கு இருந்த இடத்தி னுக்கு அருகாமையில் 'முக்கியத்துவத்தினைக் கருதி இன்று அரசு 25 இலட்சம் ரூபாய் செலவு செய்து நவீன கலங்கரை விளக்கு அமைத்துள்ளனர். வள்ளல் சீதக்காதியால் கட்டப்பெற்ற வசந்த மாளிகை இன் றும் கடலோரத்தில் இருப்பதனைக் காணலாம்.

இராமநாதபுர கெஜட்டியர் பக்கம் 458—இல், கீழக்கரையின் பழமையினை, "மத்திய கிழக்கு நாடுகளி லிருந்து வியாபாரிகள் கீழக்கரைத் துறைமுகத்திற்கு

மிகப்பழங் காலத்திலிருந்தே வந்து குழுமினர். அரேபியாவிலிருந்து இங்கு குதிரைகள் இறக்குமதியாயின. இந்நாட்டு சீதோஷ்ணநிலை குதிரைகளின் பெருக்கத்திற்கு சாதகமாக அமையவில்லை, என்பதால் வழக்கமாக (பாண்டிய அரசாட்சி காலத்திலும்) ஏராளமாக இறக்குமதியாயின. இங்கு அநேக அறபுக்குடியேற்றங்கள் அமைந்தன. கி. பி. 1311-இல் வடநாட்டிலிருந்து மாலிக்கபூர் இராமேசுவரத்தின் மீது படையெடுத்து வந்த பொழுது, இங்கு பல அறபு குடியேற்றப் பகுதிகளைக் கண்டதாகவும் கூறுகிறார். இப்பொழுதுங்கூட கீழக்கரை முஸ்லிம்கள் அதிகமாக அமைந்துள்ள பகுதியாகும். ஒரு சில மிகப்பழைய பள்ளி வாசல்களும் இங்கு உள்ளன." எனக் குறிப்பிடுகிறது.*

கீழக்கரையின் தெற்கே சின்னஞ்சிறு தீவுகள் பல, சங்கிலித் தொடர்போல் அமைந்து அலைகளைத் தடுப்பதன் காரணமாக இவ்வூர் துறைமுகம் புயலால் தாக்கப்படாமலும் நீரால் அழிவு ஏற்படாமலும் மிகவும் பாதுகாப்பான இடமாக அமைந்து வருகிறது. கி. பி. 1754—இல் டச்சுக்காரர்கள் இராமனாதபுர மன்னர் சேதுபதியின் அனுமதியுடன் கீழக்கரையில் கட்டி எழுப்பிய கோட்டையையும் பண்டகசாலையை

---

* Traders from the Middle East countries assembled in this port from very early times. Horses were imported from Arabia. Since the climate here was not conducive to the breeding of these animals, they were usually imported in large numbers even by the Pandya Kings. Many Arabs settled down here. When Malik Kafur came to Rameswaram on his raid in 1311 A.D., he found a number of Arab settlements here. Even now, Kilakkarai is predominantly Muslim in population and there are a few very old mosques here,''

Gazetteer of India—Tamil Nadu State—Ramanathapuram Dist. Page No. 458.

யும், சிதைவுற்ற நிலையில் இருப்பதை இன்றும் காண லாம். இதுவன்றி புராதன பல வர்த்தக பண்டகசாலை கள் இன்றும் இருப்பதை பார்க்கலாம். இவை கடல் வாணிகத்தின் முக்கியத்துவத்தை காட்டுவதாகும்

கிழக்குக் கடற்கரை பகுதியான கீழக்கரை முற் காலத்தில் மேலக்கரை, கீழக்கரை, கேணிக்கரை என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

ஹர்க்காட்டு-Harkatu

கீழக்கரையின் கிழக்கினில் மூன்றரை மைல் தொலைவில் அமைந்திருக்கும் ஆத்துக்காடு என்னும் சிறிய ஊரை இன்றும் காணலாம். இப்னு பதூதா, மரக்கலம் உடைந்து, கரையிறங்கிய "ஹர்காத்து" (HARKATU) என்று கூறப்படும் ஊர் இதுவே என்பதில் ஐயமில்லை.

பத்ளா-வேதாளை [Betala]

வேதாளை கடற் கரையோர ஊர். மன்னார் வளை குடாவில் மண்டபத்தின் மேற்காக அமைந்துள்ளது. கீழக்கரையிலிருந்து கிழக்கே கடல் மார்க்கமாக 15 மைல் தொலைவில் உள்ளது. முஸ்லிம்கள் அதிகமாக குடியிருக்கும் பழமை மிகு பட்டணங்களுள் ஒன்று. வள் ளல் சீதக்காதியின் இளையதம்பி ஷெய்கு இப்ராகீம் மரைக்காயர் அவர்களின் அடக்கஸ்தலம் இங்குள்ளது. இவருடைய சமாதி அடையாளக்கல்லில் (மீசான்கல் லில்) வள்ளல் சீதக்காதியின் மூதாதையர்களின் ஐந்து தலைமுறையினர்களது பெயர்களும் அவர்களின் புகழ் பற்றிய விபரங்களும் குறிக்கப் பெற்றுள்ளன. இங்கு மிகப் பழமையான கப்றுகளின் அடையாளக் கல்வெட்

டுக்களில் (மீசான்கள்) குறிப்புக்கள் அதிகமாக கிடைக்கின்றன. இதுவே மார்க்கோபோலோ குறிப்பிடும் மிக அதிகளவு முத்துச்சிப்பிகள் எடுக்கப் பெற்ற BETALA இடமாகும்.

திருப்புல்லாணிக் கோயில் கல்வெட்டு

கீழக்கரையிலிருந்து நான்கு மைல் தொலைவிலுள்ள திருப்புல்லாணிக் கோயிலின் முதற்கோபுர நுழைவு வாசலில் காணப்படுகிற கல்வெட்டுச் சான்று வரலாற்றுப்புகழ் மிக்க சான்ருக அமைகிறது. மதுரையினை அரசாட்சி செய்த இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் (1239—1251) மெய்க்கீர்த்தியான "பூமலர்த்திருவும் பொருசய மடந்தை" எனத் தொடங்கும் வாசகத்துடன் இக்கல்வெட்டு அமைந்துள்ளது.* இக்கல்வெட்டு மூலம இவனது சிறப்புப் பெயர் "கோனேரின்மை கொண்டான் திரிபுவனச்சக்கரவர்த்தி" என்று அறிய முடிகிறது. இவன் "கீழச் செம்பி நாட்டு பௌத்திர மாணிக்கப்பட்டனத்து கீழ்பால் சோனகச் சாமந்தப்பள்ளிக்கு" இறையிலிவரிவிலக்குடன் மானியம் ஆககொடுத்த நிலங்கள் பற்றிய குறிப்புக்களை தருகின்ற அரிய கல்வெட்டாக இது அமைகிறது. இப்பகுதியில் சோனகச் சாமந்தப்பள்ளி அமைந்திருந்தது. இதுவே பௌத்திர மாணிக்கப்பட்டணமாகிய கீழக்கரை ஆகும். கருங்கல்லால் கட்டப் பெற்ற பழைய குத்பா பள்ளியாகிய இச்சாமந்தப் பள்ளியினை இபுனுபதூதா பார்த்தார் என அறிந்தோம்.

---

*கல்வெட்டு எண் : 402. A..R. No. 116 of 1903—Archaeological Survey of India. New Imperial Services: Vol: LIV

—South Indian Inscriptions (Texts) Vol. viii. Ed. by: K. V. Subramanya Aiyer B.A. 1937

முழுக் கல்வெட்டும் பின்னிணைப்பில் பார்க்க.



கீழக்கரை பழைய குத்பா பள்ளி திண்ணைக் குறட்டில் உள்ள சீதக்காதியின்
தாயைப்பெற்ற பாட்டனார் வாவாலி மரைக்காயரின் கப்றும்
அக்குடும்பத்தினரின் கப்றுகளும்

இக்கல்வெட்டுக் குறிப்பாலும் சந்தேகமில்லாமல் பௌத்திரமாணிக்கப்பட்டணம் கீழக்கரைதான் என்பது தெளிவாகிறது. இக்கல்வெட்டு மூலம் சோனகர் பட்டினமுமாக விளங்கியது கீழக்கரையே என்பது சான்றுகிறது. இக்கல்வெட்டு டாக்டர் ஹுஸைன் நயினுருக்கு கிடைக்காததால் ஒரு வகையில் அவர் அறுதியிட்டு உறுதிப் படுத்த இயலாது போயிற்று என்பது இங்கு கருதத்தக்கது.

மாணிக்க வாசகர் புனிதமான (பௌத்திரமான) மாணிக்கத்தைப் பெற்ற திருப்பெருந்துறை இதுவாக இருந்து இக்காரணப் பெயராக—கீழக்கரை பௌத்திர மாணிக்கப்பட்டினம் என வழங்கி வருகிறது. இது மதுரைக்கு மிக நெருக்கமாக அமைந்துள்ள கீழக்கரை. சிறந்த இயற்கைத் துறைமுகப்பட்டினமாக அமைந்திருப்பதால் அராபியர்கள் குதிரைகளைக் கொண்டு வந்து இறக்கிய இடம் இதுவே ஆகும்.

பாண்டிய அரசாட்சியின் கீழ், கீழக்கரையைத் தவிர வேறு எந்த இயற்கைத் துறைமுகப்பட்டினமும் அக்காலத்தில் அக்கம் பக்கங்களில் இருந்ததில்லை. ஆகவே இதுவே இயற்கைத் துறைமுகமாக அமைந்ததில் வியப்பில்லை.

முதன் முதலாக முஸ்லிம்கள் தமிழகத்தில் குடியேறிய இடம் கீழக்கரையே எனக் குறிக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். (இராமநாதபுரம் கெஜட்டியர் பக்: 7) கல்வெட்டு எண் 402. A. R. No. 116 of 1903 மூலம் சோனகர் பட்டினமுமாக விளங்கியது கீழக்கரையே என்பது உறுதியாகிறது.

பட்டய ஆய்வு

திருநெல்வேலி மாவட்ட காயல் பட்டண வரலாறு பற்றிய இருவேறு வகை முரண்பட்ட பட்டயங்களின் ஆராய்ச்சி பழமையான காயல் எது? என்பதனை மேலும் தெளிவுபடுத்த உதவுமாறு அமைந்துள்ளது.

ஒன்று : "அறபு நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற் குடியேறிய அறபியர்களுக்கு அக்காலத்து அரசர் பிரானுல் கொடுக்கப்பட்ட தாமிரப்பட்டயத்திற்குரிய நகல்" எனக்கூறப்படுவதனை முழுமையாக பின்னிணைப்பில் பார்க்க.

இரண்டு:—காயல் பட்டண கண்ணகமது மகுதூம் புலவரின் பாடற்றிரட்டதனில் காணப்படும் கி. பி. 1545-இல் நாயக்க மன்னரால் கொடுத்த தாமிரப் பட்டயப் பிரதி. இதனையும் முழுமையாகப் பின்னிணைப்பில் காண்க.

பட்டயம் ஒன்று: ஜெய வீர ராஜூகாரு

இப்பட்டயங்களில் முதல் பட்டயம் கூறும் பாண்டிய மன்னன் ஜெயவீர ராஜூகாரு எனும் தெலுங்கு மன்னன் கி. பி. 847 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சி செய்தான் என்பது முரண் ஆனது. தெலுங்கில் கையொப்பம் இட்டுள்ளதும் பொருத்தம் இல்லாதது. நம்பத்தகுந்தது அல்ல. கி.பி. 847 இல் உள்ள தமிழ் நடை இதுவாக இருக்க முடியாது. டாக்டர் ஹூஸைன் நயினுர் அவர்களும் தமது சீதக்காதி வரலாறு நூலில் (பக்கம் 29-இல்) "இப்பட்டயம் பொருத்தமற்ற செய்திகளாக இருப்பதால் வியப்பிற்கும் நகைப்பிற்கும் உரியகாகிறது. எனவே மீண்டும் ஆராய வேண்டியது" என எழுதுகிருர். தமிழகத்தில் பாளையக்காரர்களின் ஆட்சி காலம் பதினுரும் நூற்ருண்டிற்குப்பின், என The Fall of the Poligars of Tamil

Nadu எனும் நூலில் டாக்டர். இராஜய்யன் M.A. M. Litt, A.M; Ph.D. (வரலாற்றுப் பேராசிரியர், மதுரைப்பல்கலைக்கழகம்) எழுதியுள்ளார். இச்செப்புப் பட்டயம் சென்னை மியூசியத்தில் இருக்கிறது என வான் புகழ் காயல்பட்டண சரித்திர நூலில் (பக்கம் 13 இல்) கூறப்படுகிறது. ஆனால் மியூசியத்தில் அண்மையில் விசாரித்த பொழுது, அவ்விதமான பட்டயம் இங்கு இல்லை என மியூசியக்காப்பாளர் கூறுகின்றதனையும் இங்கு கவனிக்கத்தக்கது.

வான்புகழ் காயல்பட்டண சரித்திர நூலில் இவ்விரு பட்டயத்தினையும் அச்சிட்டுள்ளார். ஆனால் கண்ணகமதுப் புலவரின் பாடற்றிரட்டுதனில் உள்ளச் செப்புப் பட்டயப் பிரதியின் வாசகங்களையும் வான் புகழ் காயல்பட்டண சரித்திர ஆசிரியர் அச்சிட்ட வாசகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, கண்ணகுமது புலவர் வெளியிட்ட பட்டயக் குறிப்பில், நூலாசிரியர் தனது கருத்திற்கு அனுகூலமானவைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு முழுமையும் அச்சிடாமல் விட்டு விட்டார் எனும் அருஞ்செய்தி குறிப்பிடத்தக்கது.

பட்டயம் இரண்டு :-திருமலை நாயக்கர்

இது திருமலை நாயக்கர் கி.பி. 1553-இல் கொடுத்த செப்புப்பட்டய நகல் என்று சொல்லப்படுகிறது. ஆனால் திருமலை நாயக்கர் காலம் (1623-1659) எனும் History of the Nayaks of Madurai—R. S. Aiyar கூற்றுப்படி நூறுண்டுகள் காலவித்தியாசம் காட்டுகிறது என ஏற்றுக் கொண்டு, இப்பட்டயத்தினை, திருமலை நாயக்கர் மன்னனே கொடுத்தான் என்றால் சில சந்தேகங்கள் தீர்க்கப்படுதல் காணலாம். செம்பி நாடு

எது? சோனகர் பட்டணம் எது? ஜோனகர் பட்டணம் எது? எனும் வினுக்களுக்கு விடையும் இன்றைய காயல் பட்டணத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் பற்றிய பதில்களைத் தருகிறதாக அமையும்.

செம்பி நாடு எது? என இப்பட்டயம் வரையறுத்து, "செம்பிநாடு, பவித்திர மாணிக்கப்பட்டணத்து பரிவாரணத்தரான முதலியாப்பிள்ளை மரைக்காயனை..." என முன்பே கல்வெட்டு முதலான சான்றுகளால் முடிவெடுத்த செம்பி நாடு—பவித்திரமாணிக்கப்பட்டினம் சோனகர் பட்டணமாகிய கீழக்கரை என்பதனை உறுதிப்படுத்துகிறது. எனவே இங்கிருந்து ஜோனகர் பட்டணமாகிய இன்றைய காயல்பட்டணத்திற்கு குடி பெயர்ந்து போனதாக கண்ணகுமது மகுதூம் புலவரின் பாடல் திரட்டு பட்டயம் ஐயமற உறுதிப் படுத்துகிறது. எனவே இவற்றிலிருந்து பட்டய ஆய்வும் சோனகர் பட்டணமாகிய கீழக்கரையிலிருந்து முஸ்லிம்களின் புதிய குடியேற்றமாக கி.பி. பதினும் நூற்ருண்டில் ஜோனகர் பட்டணம் எனும் காயல்பட்டணம் ஏற்பட்டது என நிறுவலாம்.

காயல்பட்டணம்

பாளையத்து லெப்பை ஆலிம் எழுதிய அறபுத்தமிழான "காயல் பட்டணம் காரண சரித்திரம்" நூலில் "பழைய காயல், கடல் கிழக்கே வெகுதூரத்தில் விலகி விட்டதால் பல வசதிக்குறைவால், அதனை விட்டும், மக்கள் கிளம்பி (தற்கால) காயல் பட்டணத்திற்கு குடியேறி வந்ததாக"க் கூறுகிருர்.

காயல் பட்டணம் ஹாபிஸ் M. K. செய்யது அஹமது அவர்கள் தனது, "வான்புகழ் காயல் பட்

டண சரித்திரத்தில்'', காயல் ஆரம்பத்திலே கடற்கரையோரமாகவே அமைந்திருந்தது. நதி கொண்டு தள்ளிய மண் பூர்வீக துறைமுகத்தை மூடிற்று. அதன் காரணமாக நகருக்கும் கடலுக்கும் மத்தியில் ஒரு பாழான மணல் நிறைந்து பரப்பு ஏற்பட்டது'' என பக்கம் 22-இல் எழுதுகிறுர். இவ் ஆசிரியரே பக்கங்களான 28, 32, 33-இல் 12,000 தீனுருக்கு இந்நகரை (காயல்பட்டணத்தை) கிரையத்திற்கு வாங்கி குடியேறிய நகர்'' என்கிறுர். இந்நூலிலே, ''இங்கு வதிந்த செம்பி, பௌந்திரமாணிக்கம் இவ்விருவர்களிடமிருந்துதான் இந்நகரை (காயல் பட்டணத்தை) கிரையத்திற்கு வாங்கப்பட்டது, என்பது கர்ண பரம்பரை'' (பக்கம் 45.) என்றும் அவரே எழுதுகிறுர். காயல் பட்டணம் பிரபு செய்யிது முஹமது நைனு எழுதிய ''ஸில்ஸிலத்துல் காஹிரத்துல் மிஸ்ஸிரிய்யா—சுல்தானுல் ஜமாலுத்தீன் வரலாறு'' எனும் அறபுத்தமிழ் நூலில், சுல்தான் ஜமாலுத்தீன் பழைய காயலிலிருந்து, 12,000 தங்கக் காசுகளுக்கு இந்நகரை (காயல்பட்டணத்தினை) விலைக்கு வாங்கியதாக கூறப்பட்டிருக்கிறது. ''பழைய காயலை விட்டும் சமுத்திரம் அகன்று போய் விட்ட படியாலும், பழைய காயல் கடற்கரை பட்டணம் வியாபாரத்திற்கு உபயோகமற்றதாக ஆகிவிட்ட படியாலும் காயல் பட்டணத்தில் குடியேறியதாகக் கூறப்படுகிறது.''

சுமார் 600 வருட காலம் பழைய காயலில் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் சீரும் சிறப்புடன் இருந்ததாகக் கூறப்படுவது உண்மை என்றுல் , அந்தக்காலக் கட்டங்களில் உள்ள பள்ளிவாசல்களோ, மீசான் கல் குறிப்புக்களோ, புராதனச் சின்னங்களோ இருந்த அடையாளங்கள் ஏதாவது இருக்கவேண்டுமல்லவா?

மன்னரிடமிருந்து பட்டயம் மூலம் இனுமாகப் பெற்ற நகருக்கு கிரையம் கொடுத்து வாங்கியதாகக் கூறுவதும் பொருத்தமாக இல்லை.

"காயல் பட்டண வரலாறு" எழுதிய இன்றைய ஆசிரியர்கள் அனைவரும் சுல்தான் ஜமாலுத்தீனை மிஸ்று தேசத்தில் இருந்து வந்ததாகவே குறிப்பிடு கின்றனர். ஆனால் சுல்தான் ஜமாலுத்தீன் பாரசீக நாட்டு கிஷ் (கைஸ்) தீவிலிருந்து வந்தவர் என்பது வர லாற்றுச்சான்றுகளுடன் அமைந்த முடிவாகும்.

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டம் தாலூகாவில் அட்சரேகை வடபால் 8^0 34^0 தென் பால் 78^0 8^0—இல் அமைந்துள்ள காயல் பட்டினம் என்னும் சீரிய ஊர் பழைமையான காயலினின்றும் வேறுபட்டதாகும். இதனை இம்பீரியல் கெஜட்டீர் ஆப் இந்தியா தொகுதி 15 பக்கம் 195-இல் தெளி வாகக் காட்டுகின்றது. "தாமிரவர்ணிக்குத் தெற்கே தூத்துக்குடியிலிருந்து 18 மைல் தெற்காக அமைந் துள்ள இவ்வூரினை காயல் என்னும் ஊராகக் கருதி மயங்குதல் கூடாது என்பதாக அதில் கூறப் பட்டுள் ளது." இவ் அடிப்படையான உண்மைகளை விளங்கிக் கொள்ளாததன் காரணமாக வரலாற்று ஆசிரியர் களிடையே பலர் குழப்பத்திற் குள்ளாகி விட்டனர்.

முடிவுரை

இன்றைய "காயல்பட்டணம் [திருநெல்வேலி மாவட்டம்] மார்க்கோ போலோ குறிப்பிடும் 'காயில்' (KAEL)காயல் அல்ல. இன்றைய காயல்பட்டணம் பதி னாரும் நூற்றாண்டில் ஏற்பட்ட ஊரே ஆகும். சோனகர் பட்டணமாகிய கீழக்கரையிலிருந்து மக்கள் இன்றைய

[திருநெல்வேலி மாவட்ட] காயல்பட்டணத்திற்கு குடியேறிய பிற்காலப் பட்டணமே அது; அன்றி, பழமையான 'காயல்'என்பது அது அல்ல. மார்க்கோபோலோ குறிப்பிடும் 'காயல்' கீழக்கரை—இதுவே கொற்கைத் துறைமுகப்பட்டினம். இப்னுபதூதா "பத்தன்" என்று அழைத்த பௌத்திரமாணிக்கப்பட்டினமும் இதுவே. [கல்வெட்டுக் சான்று.]

கீழக்கரை காலங் காலமாக பலபெயர் பெற்ற பெரும்பதி. "காயல்" என்பதனுக்கு பலரும் அவரவர் கருத்துக்களை கூறியும் பேசியும் எழுதியும்வருகின்றனர். ஆனால் மார்க்கோபோலோ மாபர்கரையில் தலை மன்னாருக்கு பக்கத்திலுள்ள, அரிப்போவிலிருந்து அறுபது மைல் தொலைவிலுள்ள காயில் Kael(காயல்) எனக்கீழக் கரையினையே படம் பிடித்து காட்டுகிறார் என்பது மிகத் தெளிவு. இப்னுபதூதா குறிப்பிடும் மதுரா எனும் மதுரையிலிருந்து அறுபது மைல் தொலைவிலுள்ள பௌத் திரமாணிக்கப்பட்டினம் "பத்தன்" கீழக்கரை ஆகும். மார்க்கோபோலோ "மாபர்கரையில் மன்னார் வளை குடாவில் அதிகளவு சிப்பிகள் எடுக்கப்பெறும் இடம் பதுளா (BETALA) இது கீழக்கரையிலிருந்து 15 மைல் தொலைவிலுள்ள வேதாளை எனும் இடம். இது முஸ்லிம் களின் அதிகளவு குடியிருப்பு பகுதியாகும்" இப்னு பதூதா மரக்கலம் உடைந்து இறங்கிய ஊர் எனக் குறிப்பிடும் "ஹர்காட்" கீழக்கரையிலிருந்து மூன்றரை மைல் தொலை விலுள்ள ஆத்துக்காடு எனும் ஊர் ஆகும். இருவேறு பயணிகளின்குறிப்பும் அறுபது மைல் தூரத்திலுள்ள கீழக்கரையை குறிப்பிடுகிறது. இப்னு பதூதா பார்த்த கல்லால் கட்டப்பட்ட அழகிய பள்ளிவாசல் இன்றும் கீழக்கரையில் காணப் படுகிறது. இதுவே கல்வெட்டுக் கூறும் "சோனகச்

சாமந்தப்பள்ளி'' ஆகும். ''தென் காயல்''என்ற பெயருள்ள கீழக்கரைப்பட்டணமே பௌத்திர மாணிக்கப் பட்டினம். மாபர் கரையிலுள்ள முத்துச்சலாபத் துறைகளுள் தொன்மையான ஒன்ருக இருந்திருக்கிறது இயற்கைத் துறைமுகப்பட்டினமாக இருந்து பலதிசைகளிலிருந்தும், கப்பல்கள் இங்கு வந்து வியாபார நோக்குடன் போக்குவரத்துச் செய்து வந்தன. குதிரை வாணிபம் சிறந்து விளங்கியதும் இங்கேயே ஆகும். கீழக்கரை முத்துக்களுக்கு சிறந்த இடமாக விளங்கியது. இதனை ஒன்பதாம் நூற்ருண்டில், அறபு நாட்டுப் பயணிகளான அபூ ஜைது, சுலைமான் போன்ருேரும் குறிப்பிட்டுள்ளனர். பின் 13 ஆம் நூற்ருண்டில் மார்க்கோபோலோவும், 14 ஆம் நூற்ருண்டில் இபுனுபதூதாவும் இத்துறைமுகச்சிறப்புக்களை கூறியுள்ளனர். இதுவே பழந்துறைமுகமான கொற்கையுமாகும்.

பழம் பெரும் பதியான ''கீழக்கரையே'' (இன்று வழங்கி வரும்பெயர்) மார்க்கோபோலோ குறிப்பிடும் ''காயில்''.(Kael) காயல் இதுவே அன்று சிறந்து விளங்கிய பெரிய துறைமுகப்பட்டினம். மார்க்கோபோலோவின் பின்வந்துற்ற இபுனுபதூதா குறிப்பிடும் ''பத்தன்'' எனும் துறைமுகப்பட்டினமும் இதுவே ஆகும் என பயண நூல்கள், கல்வெட்டுக்கள், கெஜட்டியர்கள், இலக்கியங்கள், பட்டயங்கள் போன்ற இன்னோரன்ன சான்றுகளாலும் சந்தேகமற அறியலாம்.

காகிரி நாட்டுவளம்

கொச்சகக் கலிப்பா

ஆதி யாயஹ தாகியனைத்தும்
அமைத்து நல்லரசாளுமிறை திருச்
சோதிதன்னிற் பிரித்தே யமைத்தி
றஸூலென்றெங்கும் ப்ரசங்கமதாகிய
நீதிவேத மறையின் பொருளதை
நித்தமோதி நிசமறி வித்திட
வாதியான ஜமாலு முஹம்மதாம்
ஆலிம் வாழும் வகுதை நன்னுடே **(1)**

சுற்றுவாருதி சூழபுவிதன்னிற்
றுலக்கமாகவே நல்லறிவானதைக்
கற்றுணர்ந்திட வேண்டு மென்றுள்ளக்
களிப்புடன் வந்த பேர்களுக்கெல்லாஞ்
சற்றுமே குறையின்றிப் படித்துத்
தங்களுருக்கு வந்தவர் போகவு,
முத்தியான ஜமாலு முஹம்மது
மூமின் வாழும் வகுதை நன்னுடே. **(2)**

பிறந்துகீழக்கரையினில் வாழ்ந்து
    பேரின்பான் பதினாலு இல்மையுந்,
துறந்தறிந்த அறிவுகள் யாவர்க்குஞ்
    சொல்லித் தீனைத்தினம் வளரச்செய்தோர்
மறந்தும் பொய்ம்மை கனவினிலேனு
    நல்வாக்கிலே அணுகாத நல்வள்ளலாஞ்
சிறந்த பேர்கொள் ஜமாலு முஹம்மதெம்
    செம்மல் வாழும் வகுதை நன்னாடே. (3)

அறபு மக்க மதீனம் பகுதா
    தான ஷாமுடன் றூமிசு றூரும்
நறவுலாம் பொழிலச்சபை கோவை
    நல்ல சீனமுடன் தில்லி மற்றுமே
பிரபல்யவொலி என்றும் ஆலிமென்றும்
    பேர்விளங்கப் பிரசங்கமதாகிய
அறிவு சேர்ந்த ஜமாலுமுஹம்மது
    ஆலிம் வாழும் வகுதை நன்னாடே (4)

வானளாவிய மாமரச் சோலையின்
    மந்தி தாவி வருக்கையிற் பாய்ந்திடத்
தேன் கனியுதிர்ந் தோடு நறுவதிற்
    றினையுஞ்சாலி வளர்ந்திடுநாடு,
கான் புகுந்து நதிபரந்து ஓடிக்
    கரையெலாம் நவரத்னங்கொழிக்கும்
வானுலாமதியான ஜமாலு
    முஹம்மதாளும் வகுதை நன்னாடே (5)

பள்ளி தோறினு நம்மிறையோனைப்
பணிந்து மாந்தர் படித்த நல்வேதத்தைக்
கிள்ளை கேட்டுப் படித்திடுஞ் சொல்லைக்
கேட்டு நங்கணமே கிளர்ந்தோடிடுந்
தள்ளொணுச் சொல்லி தென்று முசீபத்துத்
தங்கிடாதகன் றேவிரைந்தோடிடும்,
வள்ளலான ஜமாலு முஹம்மது
வாழுங் காயல் வகுதை நன்னுடே (6)

அன்னமாடை யரிசிகறியுட
ஞணி முத்தொடதிக நல்ரத்தின
நன்னயந்தருந் தங்கம் பொன் வெள்ளியு
நாளிடை விடாதே கொடுவந்து தான்
இன்னல் சேர்ந்திடு மாதுலர் தேடி
யெடுத்ததுமே கொடுத்தே கலிபோக்கிடுஞ்
சொன்னமான ஜமாலு முஹம்மது
துய்யோர் வாழும் வகுதை நன்னுடே (7)

தங்குவானின் முகில் விரைந்தோடிச்
சமுத்திரத்தறல் தன்னையெடுத்துக்கொண்டு
எங்குமே நனி தேக்கவருத்தி
யெழுந்து வான்முக டெங்கும் பரந்துநல்
திங்கள் தோறும்மாரிகள் பெய்து
செழும் பயிர் வளர்ந்தோங்கிய நாடு
சங்கையான ஜமாலு முஹம்மது
தங்குங்காயல் நன்னுடெங்கள்நாடே (8)

வாசங்கஸ்தூரி வீசும் புயத்து
முஹம்மதுதால நபி மருகரலி
சீஷரான அசன் பஸரீ என்னும்
சிஸ்தியாகிய நன் முரீதின்வழி
நேசமுற்றதிலே வாசிலாகிடு
நிச்சயக் குருவாகிய நாதராந்
தேசமெய்க்கும் ஜமாலு முஹம்மதெம்
செம்மல் வாழ் காயலூரெங்களூரே. (9)

அண்ணல் எங்கள் நபிகிசுறத்து
ஆயிரத்திரு நூறுடன் முப்பதாம்
எண்நாலின் முஹற்றமோர் மூன்றி
னிலங்குந் திங்களிசாவொகுத்தானதில்
நண்ணியவெகு தானியாவற் பிசி
நாளும் பத்துடனென்பதுதன்னிலே
விண்ணிலான ஜமாலு முஹம்மது
வீற்றிருக்கும் வகுதை நன்னுடே (10)

வள்ளலாதி ஹறலறத்தி லாகவு
மக்கள்சீடரு மற்றுள பேர்களும்
மெள்ளவே குளுப்பாட்டிக் கபன்செய்து
வேதமோதித்தொழுவித்து நற்புது
பள்ளித்திண்ணைக் குறட்டிலடக்கவும்
பாக்கியப்பல னும்பெருத்தோங்கவும்
தெள்ளிதான ஜமாலு முஹம்மதாஞ்
செல்வர்வாழ் காயலூர் எங்களூரே (11)

கத்தன் புறுக்கான் பாடமிட்டிடும்
ஹாபிலாம் அப்துல் காதிர்லப்பை ஆலிம்
புத்ரரான முஹம்மதி லெப்பைநற்
பூபன் காதிறு சாமகுமுதொடும்
பத்திசேர் செய்னுல் லாபிதீனென்னுநற்
பார்த்திபர்துணை மேல்வெகு நேசமே
நித்தமுற்ற ஜமாலு முஹம்மது
நீதர்வாழ் காயலூரர் எங்களூரே (12)

மஞ்சவண்ணை மகுதுமீருன் லெப்பை
ஆலிம் உங்கள் மகவுமருமகன்
செஞ்சொலிப்பனுவல் செய்தகு மதுஞ்
சீயமன்ன முஹம்மதிலெப்பையுங்
கொஞ்சுமென்மொழி மாதருமக்கள் தான்
கூண்டசீடர்களாண் பெண்ணனை வரிக்குந்
தஞ்சமான ஜமாலு முஹம்மது
சாகிபாள் காயலூரர் எங்களூரே. (13)

ஆதிநல்லிறஸூல் கிளை வாழ்கவே
அண்ணல் தீன் சுலுத்தான்களும் வாழ்கவே
சோதிதீன் முசுலிம்களும் வாழ்கவே
துய்யநல் லுலமாக்களும் வாழ்கவே
நீதிப்பேரருஞ் சீடரும் வாழ்கவே
நிச்சயக் கவிசெய்தோனுக்குந் துஆ
ஓதும் எங்கள் ஜமாலு முஹம்மதுஎம்
ஒலி விளங்கும் வகுதைநன்னுடே (14)

காகிரி நாட்டுவளம்

குறிப்புரை :

கீழக்கரை புலவர் பனீ அகுமது மரைக்காயரின் மகன் புலவர் செய்யிது அஹ்மது மரைக்காயர் பாடிய "நூறுநாமா" நூலின் தனிப்பகுதியாக "காகிரி நாட்டு வளம்" எனுந் தலைப்பில் பதினான்கு பாடல்களில் கீழக்கரை ஜமால் முகம்மது (ஒலி) அவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். இதில் எவ்வித சந்தேகமும் இல்லாமல் ஜமால் முகம்மது (ஒலி) அவர்கள் கீழக்கரையில் பிறந்து, வாழ்ந்து, ஆலிமாகத் திகழ்ந்து, தீனைத் தினம் வளரச் செய்து வந்தவர்கள் என்பதனை பாடல் மூன்றில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்க.

கீழக்கரை ஜமால் முகம்மது (ஒலி) அவர்களுடைய புகழும் கீர்த்தியும் அறபு, மக்கா, மதீனா, பகுதாது, ஷாம், றூம், மிசுறு, சீனா, டில்லி போன்ற இடங்களில் எல்லாம் "ஆலிம்"; "ஒலி" என்னும் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள் எனப் பாடல் நான்கில் காணலாம்.

இம் மகான் கீழக்கரையில் ஹிஜ்ரி 1230 முஹற்றம் 3-ஆம் நாள் காலமாகி, புதுப்பள்ளித் திண்ணைக்குறட்டில் அடங்கியுள்ளார்கள் என்பதனை பாடல்கள் 10, 11-இல் காண்க.

இது இவ்வாறு இருக்க, காயல்பட்டணத்தில் நடைபெற்ற (1978) இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மூன்றுவது மாநாட்டுச் சிறப்பு மலரான இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவையில் "தமிழ்மணம் பரப்பிய காயல் செம்மல்கள்" எனுங் கட்டுரையில் பக்கம் 36-இல் மேற்குறிப்பிட்ட ஜமால் முகம்மது (ஒலி) அவர்கள் காயல்பட்டணத்து புதுப்பள்ளித் திண்ணையில் அடக்கமாகியுள்ளார்கள் எனக் கட்டுரை யாசிரியர் ஜனுப் எம்.கே. செய்யிது அஹமது அவர்கள் குறிப்பிட்டிருப்பது நகைப்பிற்கு உரியது ஆகும்.

கட்டுரை ஆசிரியர் ஹாபிஸ் M. K. செய்யிது அஹமது அவர்கள் (நூர்நாமா)"காகிரி நாட்டுவளம்" ஒவ்வொரு [பாடல்களிலும் பலவாருகப் புகழ்ந்து] அடியின் ஈற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஜமால் முகம் மது (ஒலி) அவர்கள் காயல்பட்டணத்தில் அடங்கப் பட்டுள்ளார் என எழுதியுள்ளார். "ஒவ்வொரு அடியின் ஈற்றிலும்" என்று கட்டுரையாசிரியர் குறிப் பிடுவதிலிருந்து, முழுமையாகவும் குறிப்பாக 3, 10 11 ஆகிய பாடல்களை நிச்சயமாக படித்திருக்க தவறி யிருக்கமாட்டார்? உண்மைக்கு புறம்பானதை எழுது வது ஏனோ? ஆய்வாளர்களுக்கு மத்தியில் ஜமால் முகம் மது (ஒலி) அவர்கள் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து, புதுப்பள்ளியில் அடங்கப்பட்டுள்ளனரா? அல்லது காயல்பட்டணத்தில் அடங்கப்பட்டுள்ளனரா? என் பது குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவரு கிறது. இங்ஙனமாக தமிழகப் புலவர்களையும் ஒலிமார்

களையும் வள்ளல்களையும் குறித்து உண்மை வரலாறு களுக்கு மாற்றமாக—தவறான எண்ணங்கொள்ளச் செய்வது ஆய்வாளர்களுக்கு அழகல்ல.

கீழக்கரையில் புதுப்பள்ளித் திண்ணைக்குறட்டில் அடங்கியுள்ள ஜமால் முகம்மது (ஒலி) அவர்களின் (கப்று) அடக்கஸ்தலத்தினைச் சேர்ந்தாற் போல இவர் களது மகனார் மீராலெப்பை ஆலிம் (ஒலி) அவர்களின் அடக்கஸ்தலமும் அமைந்துள்ளது இன்றும் காணலாம் (புகைப்படம் பக்கம் 38-இல் காண்க) இன்றும் ஜமால் முகம்மது (ஒலி) அவர்களின் சந்ததியினர் கீழக்கரை மேலத் தெருவில் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்.

இக்காகிரி நாட்டுவளம் பதினான்கு பாடல்களி லிருந்தும் கீழக்கரையே காயல், வகுதை என்பதும் தெள்ளத் தெளிவுறத் துலங்குகிறதைக் காணலாம்.

பல்சந்த மாலைப் பாடல்கள்

1. உயிரென வியத்தல்

கலைமதி வாய்மைக் கலுபா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தரங்கமும் பெற்ற
நந்தகைசால்
மலையன மாமதில் வச்சிர நாடன்ன வாணுதல்தன்
முலையிணை தோய்ந்த தெல்லாம்களவே என்று
முன்னுவனே

2. கண் புதைத்தாருக்குத் தலைமகன் கூறுவது

நாட்டம் புதைக்கின்ற தென்நீ மடந்தை நவகண்ட
மேல்
ஈட்டம் புகழ்வின்னன் மேவார் எனஇங்ஙன் யான்
வருந்த
வாட்டம் பயின்றுங் கிலின் குழம்பணிந் தாகமெங்கும்
வேட்டந் தெரிகின்ற கொங்கைகள் என்னைமிகை
செய்தவே.

3. தழைகொண்டு இரந்து நிற்றல்

நகுதா மரைமலர் சூழ்வாவிசூழ் வச்ர நாடர்தங்கள்
வகுதா புரியன்ன வாணுதலீர் மற்ற வார்தழையும்
மிகுநாண் மலர்களும் கொண்மின்கள் கொள்ளா
விடின்மதுவந்
தொகுகாமன் ஐங்கணை யாலெம தாவி துணுக்குறுமே

4. வேழம் வினுதல்

செம்முக மானதர் செங்குங்குமப் புயர் சீர்சிறந்த
மைம்மலி வாசப்பொழில்வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரிபொழியப் பொழிமுகில் போல்முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண் டோநும் கடிபுனத்தே

5. தினைமுதிர் வுரைத்தல்

இயவன ராசன் கலுபதி தாமுதல் என்னவந்தோர்
அயன்மிகு தானையர் அஞ்சுவன் னத்தவர் அஞ்ச வென்ருக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய் கொய்துபோம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே

6. ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத்தாற் பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையாகிய கலு பாமுத லானவர் யானைகளின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழமணிவரையே

7. இயற் பழித்தல்-புள்ளொடு, புலம்பல்

வானது நாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழும் செழும் பொழில் சூழ்அந்து பார்
அனையார்
தானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைக டாமழிந்தே

8. பதியளா வுரைத்தல்

வில்லார் நுதலியும் நீயுமின் றேசென்று மேவுதிர்சூது
எல்லாம் உணர்ந்தவர் ஏழ்பெருந் தரங்கத்
தியவனர்கள்
அல்லா வெனவந்து சாற்றியும் நாதரைக் கை
தொழுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே.

பல்சந்தமாலை

குறிப்புரை :

களவியல் காரிகை எனும் அகப்பொருள் இலக்கண நூலின் உரைமேற்கோளில் எட்டு (கட்டளைக் கலித்துறை) செய்யுட்கள் மட்டுமே இம்மாலையின் பாடல்களாகத் தரப்பட்டுள்ளன. இவ் எட்டுப்பாடல்களிலிருந்தும் பல அரிய செய்திகள் கிடைக்கின்றன.

பல்சந்தமாலை ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. முழு நூலும் கிடைக்கப்பெறவில்லை. அகப்பொருள் இலக்கண உரை மேற்கோளாகப் பயன்படுத்திக் கூறுதலாலும் இதன் பழமை அறியலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அறபு நாட்டுக் கலீபாக்களின் பிரதிநிதியாக, கீழக்கரையையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் (பல்சந்த மாலையில் வச்சிரநாடு, வகுதாபுரி, அந்துபார் எனும் பெயர்களால் குறிக்கப்பெறுகிறது.) கலீபாவாக முஸ்லிம் மன்னன் "கலுபதி வின்னன்" கி. பி. 10-ஆம் நூற்றுண்டில் இஸ்லாம் தமிழகத்தில் பரவிய காலக்கட்டத்தில்—(கலீபாக்கள் காலத்தில்) இவர்களின் பிரதிநிதியாக இங்கு ஆட்சி புரிந்திருக்கலாம் என அறியலாம்.

இவ் அரசனை, "சோனகன்" "யவனன்" "அல்லாவைத் துதிப்பவன்" என்றெல்லாம் பல்சந்தமாலை பகருகிறது.

இம்மன்னன் சிறந்த கொடை வள்ளல் என்பதனை, "வானது நாணக்கொடையால் உலகை வளர்த்தரு

ளும் சோனகர் வாழும் செழும்பொழில் சூழ் அந்து பார்'' எனுந்தொடர் சான்று பகரும்.

இவனது புகழை ''நவகண்ட மேல் ஈட்டம் புகழ் வின்னன்'' எனவும் குறிப்பிடுகிறது.

இங்குள்ள முஸ்லிம்களை ''செம்முகமானதர் செங் குங்குமப் புயர் சீர் சிறந்தவர்'' என நல்ல அழகு பொருந்திய சிவந்த மேனியும், புயவலிமையும் உடை யவர் என்கிறது.

இவ்வச்சிர நாட்டு மன்னனை ''கலைமதி வாய்மைக் கலுபா வழி வருங்கற்பமைந்த, தலைமையர் ஏழ்பெருந் தரங்கமும் பெற்ற நந்தகை சால் மலையன மாமதில் வச்சிரநாட்டான்' என்றும், ''வச்சிரநாட்டு இறையா கிய கலுபா'' என்றும் கூறுந்தொடர்கள், அறபு நாட்டி லிருந்து கடல் கடந்து இங்கு வந்து கலீபா வழி நின்று, புகழ் பெற ஆட்சி புரிந்திருக்கிறான் எனத் தெரிகிறது.

இங்கு ''அஞ்சு வன்னத்தார்'' எனுந்தொடர் முஸ் லிம்களோடு மிக நெருங்கியத் தொடர்புடையது என் பது அனைவரும் அறிந்ததே.

வச்சிரநாடு எனக் குறிப்பது 'வச்சிரம்' என்றால் புல் எனப்பொருள்படும். இது தருப்பசயனம் எனப் போற்றப்படும் திருப்புல்லால் புகழ் பெற்ற திருப்புல் லாணி, திருப்புல்லணையினைக் குறிப்பது இது, கீழக் கரைக்கு நான்கு மைல் தூரத்தில் மிக அண்மையில் உள்ள ஊர் ஆகவே இதனைச் சூழ்ந்துள்ள பகுதி வச்சிர நாடு எனக்கூறலாம்.

"அந்துபார்" என்பதற்கு பார் எனில் அறபியில் "கரை" எனப் பொருள் கொண்டும், இவ் அடிப்படையில் எழுந்த கடற்கரைப்பட்டினமாக எழுந்து இலங்கும் மாபர், மலபார், நிக்கோபர், ஜான்ஜிபார் என்பவற்றினை ஆதாரமாக வைத்து கடற்கரைத் துறை முகப்பட்டினமான கீழக்கரை என்பதனையே குறித்து நிற்கின்றது எனலாம்.

வகுதாபுரி என்பதனை புலவர் நாயகம் கடிதம், நூறு நாமா-காகிரி நாட்டு வளம், சீதக்காதி திருமண வாழ்த்து, நொண்டி நாடகம், பனீ அகுமது மரைக்காயர் பாயிரப்பாடல், நபியவதார அம்மானை ஆகிய சான்றுகளைக் கொண்டு கீழக்கரையே என்பது இந்நூலினுள் முன் கண்ட முடிபு.

பழமை நூலாகக் கருதப்படும் பல்சந்தமாலையின் பிறபாடல்களும் கிடைத்திருந்தால்இந்நாட்டு முஸ்லிம்கள் பற்றிய அரிய வரலாற்றுச் செய்திகள் மேலும் விரிவாக அறிந்திருக்க இயலுமே எனும் மனக்குறை பெருங்குறையாகவே உளது.

பட்டய எண் : 1

அறபி நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற் குடியேறிய அறபியர்களுக்கு அக்காலத்து அரசர்பிரானுல் கொடுக்கப்பட்ட தாமிரப் பட்டயத்திற்கு இது சரியான நகல்.

A. தெலுங்கில்; ஜெயவீர ராஜுகாரு புவிச்சக்கரவர்த்தி, யென்று கையொப்பம் வைத்திருக்கிறது.

செங்கோல், செலுத்தும் தெக்ஷுணு பூமிக்குத் தெற்கு, கன்னிக்கு வடக்கு, மன்ஞர் வடமேல் குதிரை மலைக்கு மேற்கு, கன்னி முதல், சேலமகரம் ஒழுகுமலைக்குக் கிழக்கு, பாண்டி மண்டலம் (56) தேசத்திற்குத் தேசாதிபதி, அபிராம ராம அதிராஜராஜ ஜெயவீர ராஜுகார் கர்த்தர்கள் (78) **பாளையத்தாருக்கும்** ஓர் குடைச் செங்கோல் செலுத்தித் திரையாதிக்கமுடைய மகா மண்டலேஸ்வரன், மூவராயகண்டன், பாண்டிமண்டல பரமேஸ்வரன், சோழமண்டலம் (24) காதமுடைய மன்னரை அரசு நிறுத்தித் திரை கொள்ளும் மஹாவிஷ்ணு, கிரேதாயுதர்மன், பொதிய மாமலைப் பாரரசுமுனி, மதுரைத் துரைத்தனம் அஷ்ட சம்பந்த ராஜாதிராஜன், திங்கள் சுத்த வம்மிசப் பிரம தெக்ஷுணுபூமி செங்கோல் செலுத்தும் நாயனி எழுந்தருளித் திருநகரி கொலுவீற்றிருக்குங் கர்த்தரை அறபி நாட்டு மிஸறு தேசாதிபதியின் கொடுங்கோலுக் கஞ்சி, மரக்கல, யாத்திரையாய்க் கர்த்தர்களின் தேசச் செம்பி நாட்டில் பாசறை வகுத்துக் கர்த்தர்களின் சமூகங்கொடுத்து, அந்நாட்டிற் குடியேறியிருக்கத் தாமிரப்பட்டயங் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டவர்களின் வம்மிசமும் எண்ணிக்கையும்.

B. ஆசீம் வம்சத்தார் (23) C. நாச்சியார் பெண்டு (9) அடிமை (4) D. பக்கிரி வம்சத்தார் (39) நாச்சியார்பெண்டு (16) அடிமை (7) E. பாறூக்கு வம்மிசத்தார் (43) நாச்சியார் பெண்டு (24) அடிமை (12) F. உமையா வம்மிசத்தார் (14) நாச்சியார்பெண்டு (5) அடிமை (2) G. ராணுவ யுத்தர் (16) பெண் (6) ஊழியவரகன் (3) பெண் (1) இவர்கள் ஒருமனப்பட்டு, முகம்மது கல்ஜிக்குத் தாமிரப்பட்டயங் கொடுக்கக் கேட்டுக்கொண்டபடியால், இந்தக் குடியானவர்கள் மிஸறு தேசத்துக் காயிறூன் ஊரில் வசித்தவர்களான படியால், தாமிரப்பட்டயங் கொடுக்குமுருக்கு H. காயிறூன் பட்டணமென்று நாமமும், மரக்கல, யாத்திரையாக வந்ததற்காக இவர்களுக்கு I. மரக்கலராயர், என்று நாமமும், நாம் சூட்டித் தாமிரப்பட்டயங் கொடுக்க உத்தரமருளி அரண்மனையார் கற்பித்தது.

J. தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்கு மேற்கு. சிவந்தார் குளம், முத்தையர்புரம், முள்ளக்காடு, கோபுரங்காடு, மஞ்சனக்காயல், கொற்கை, குலைநெல் கரிசை, முக்காணி K. கொலுவுத்துரை, ஆற்றூர், அதைச்சேர்ந்த மங்கலம், சொர்க்கப்பிள்ளை கரை, பின்னைக்காயல், ஆவரங்காடு, தண்ணீர்ப்பந்தல், கீறனூர், நல்லூர், அம்மன்புரம், பள்ளிப்பத்து. மணற்காடு ராஜமன்னிய புரம் வீரபாண்டியன் மங்களபாடி இவைகளடங்கிய குடிகளுக்கு முகம்மதுகல்ஜி மரக்கலராயன் கற்பனையும், அவனுக்கு இறைவரி செலுத்தக் கடமை யும் பளம், பள்ளிப்பத்து அம்மன் புரங்கண்டு முதல் லாபத்தில், ஜெப ஆலயங்கள் கட்டப் பாதியும்; தண்ணீர்ப்பந்தல், கண்டு முதலில் மரக்

கலராயனுக்குப் பாதியும்பளமும், கன்னிமுதல் மன்ஞர்மணல்மேடு, ராமேஸ்வரம்வரை, இந்தக் குடியான ஜனங்கள், சலாப முத்துக்குளிக்க அம்பள உம்பளமும் தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்குத் தோணி க-க்கு (200) முத்துச்சிப்பியும், மரக்கலராயனுக்கு தோணி க-க்கு (300) முத்துச்சிப்பியும், சித்தசன்லாசருக்கு (200) முத்துச்சிப்பியும், அம்பளவும்பள நிந்தமும்.

அந்தந்த வருஷம் மகர மாசத்தையில், அரண்மனேக்கு மரக்கலராயன் (1000) பொன்னும், உப்புலாபத்தில் (100) பொன்னுக்கு (25) பொன்னும் செலுத்திவிடக் கடமையும் ஒரு பொன் எடையும், அதற்கு மேற்பட்ட ஆணிமுத்தும், வலம்புரி சங்கும், அகப்பட்டால், அவ்வகளே, மரக்கலாயன், அரண்மனேக்குச் சகல மேளவாத்தியதுடன், செலுத்திவிட அரண்மனேக் கற்பனேயும்,

அரண்மனேயார் உத்தரவிற்கு நாஞ்சிநாட்டு அதிபன் கொடுத்த வண்ணன் (5) ரெட்டியாபட்டி பாளேய கிருஷ்ண நாயக்கன் கொடுத்த புதிய முத்தூர் மேள வாத்தியக்காரன் (5) க்கும், குடியானவர்கள் செலவு கொடுத்துக் கொள்ளவும். பக்கிரி வம்மிசத் தலேவன் முகம்மதுகல்ஜி மரக்கலராயன் தேசாதிபதி; பாறூக்கு வம்மிசத்தலேவன் உமறு மஸ்கூறு நியாயாதிபன் ஆசீம் வம்மிசத்தலேவன் கமாலுதீன் கடலதிபதி; உமையா வம்மிசத் தலேவன் சுபைறு அடையல் முடையல், ஊர் மணியம்: ராணுவ யுத்தர்கள், ஊர்க்காவல், நாட்டுக்காவல், கன்னி முதல் சேலமகரம் வரையுள்ள அரண்மனே குதிரைப் பாடிகளில் இந்தக் குடியானவர்கள் குதிரை விற்பனே செய்து கொள்வதை, அரண்

மனைக் காவலர் **பாளையக்காவலர்** தடை செய்யக் கூடாது, சந்திராதிக்கம் சந்திர சூரியப்பிரவேச முள்ள வரைக்கும், அம்பள வும்பள சுதந்தரராக.

முகம்மதுகல்ஜி மரக்கலராயன் வசதியான தலங் கண்டு குடியேறியிருக்கும்படி கர்த்தனுகிய ஜெயவீர ராஜுகாரு நாயனி இந்தத் தாமிரப் பட்டயங் கொடுத் தோம். திருவண்ணுமலை பழனிக்கார், மீனுஷி, பற் பநாபர், நெல்லையப்பர், சுப்பிரமணி, மாரியம்மன் மும்மூர்த்தி, அகஸ்தியர், இராமச்சந்திரர், இந்தச் சாமிகள் பேரில் சத்தியம் தப்பாது.

L. சகாப்தம் 798-ம் ஆண்டு கீலக வருஷம், மீன மாசம், சுக்கிரவாரம், உத்திரவேளையில், எலின வாருசாமியவர்கள் திருக்கை யொப்பமிட்டுக் கண்ட வாசகத்தை, மதுரை ஜகந்நாத பிள்ளை கவிச்சக்கர வர்த்தி கற்பகமடலில் வரிந்து, ஏலினவாருசாமி ஜெக வீர ராஜுகாரு நாயனி அவர்கள் வரந்தருசித்தத்தின் பஞ்சபூதமும் ஓம் என்று ஒருமொழிகொண்டு இருக் கும் வேளையில் தளவாய்ப் பழனி நாயக்கர் உத்தர வாகிக் காயிறூன் பட்டணஞ் சகலகுடியானவர்களுக் கும் ஒருமனதாக ஒருமொழிச் சொல்லுக்கு, இந்தத் தாமிரப்பட்டயம் வெட்டி வரைந்து எழுதினேன் வீரவநல்லூர் சகனமூர்த்தியாசாரி.

ஒப்பம்

ஜெகந்நாதபிள்ளை, கவிச்சக்கரவர்த்தி.

ஒப்பம்

(தெலுங்கில்) தளவாய்ப்பழனி நாயக்கர்.

பட்டய நகலை பிரசுரத்தவரின் விளக்கம்:-

A. "ஜெயவீரராஜுகாரு" 74-வது பாண்டிய அரசராக விருந்து மதுரையில் அரசாட்சி செய்த சோழன்.

B. "ஆசிம் வம்சத்தார்" இவர்கள் நபி நாயகம் சையிதிநு முகம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாகு அலைகி வஸல்லம் அவர்களது சந்ததியார்.

C. "நாச்சியார் பெண்டு" இவர்கள் மேற்குலத்துப் பிறந்தமையையும் தலைவி என்ற உயர் பதவியையுங் குறிக்கும்.

D. "பக்கிரி வம்மிசத்தார்" இவர்கள் அமீறுல் மூமினீன் சையிதிநு அபூபக்கர் ஸித்திக்கு றலியல்லாகு அன்கு அவர்கள் சந்ததியார்.

E. "பாறூக்கு வம்மிசத்தார்" இவர்கள் அமீறுல் மூமினீன் சையிதிநு உமறுல் பாறூக்குறலியல்லாகு அன்கு அவர்களது சந்ததியார்கள்.

F. "உமையா வம்மிசத்தார்" இவர்கள் அமீருல் மூமினீன் சையிதிநு உதுமான்றலியல்லாகு அன்கு அவர்கள் சந்ததியார்கள்.

G. "ராணுவ யுத்தர்" இவர்கள் தான் இக்காலத்தில் ராவுத்தர் என்று விளங்குகின்றனர்.

H. "காயிஞன் பட்டணம்" இக்காலத்தில் காயல்பட்டணம் என்று வழங்கிவருகிறது.

I. "மரக்கலராயர்" இவர்கள் தான் இக்காலத்தில் மரைக்காயர் என்று விளங்குகின்றனர்.

J. "தூதுகுடி" இக்காலத்தில் தூத்துக்குடி என்று வழங்கி வருகிறது.

K. "கொலுவுத்துரை" இக்காலத்தில் குருவித்துரை என்று வழங்கிவருகிறது.

L. "இந்தசாசனத்தின் காலம்" இச்சாசனம் இற்றைக்கு(1919)1043 வருடங்களுக்கு முன் கி.பி. 875-ம் ஸ்ரீ ஏப்பிரல் மாசத்தில் ஏற்பட்டதென்று தெரிகிறது.

—இப்பட்டயப் பிரதி "வான்புகழ் காயல்பட்டணம் சரித்திரம்" பக்கம் 18-21லும் அச்சிடப் பெற்றுள்ளது.

பட்டய எண் : 2

காயல்பட்டணம் கண்ணகுமது மகுதூம் புலவரின் பாடல் திரட்டில் உள்ள பட்டயம்

ஸ்ரீமது மகாராஜ ராஜேஸ்ரீ ஏலினவாரு சுவாமியவர்கள் செங்கோலசைக்கும்-தக்ஷணபூமிக்குத் தெற்குக் கன்னிக்கு வடக்கு-வெள்ளாறு மணமேற்கோடிக்கு மேற்குக் கருங்குளம், சேலமகரங்கயம் ஆனை மலைக்குக் கிழக்கு-ஒழுகு மலை. மலங்கரை-கன்னி வரைக்கும் கிழக்குப் பாண்டி மண்டலம் ஐம்பத்தாறு காதத்திற்கும், மாவுவிவாண மகாராஜா பாண்டி அபிராம ராம அதிராஜா ராயர், ஏலினவாரு கர்த்தர்கள் நற்பதிடப்பை யிரண்டுபாளையத் தலைவ மாருக்கும், ஓர் குடைச் செங்கோலோச்சை செலுத்தியருளும், திரையாதிக்கமுடைய, மஹாமண்டலேஸ்பரன்—பாஷைக்குத் தப்புவராதகண்டன்-மூவராயகண்டன்-கண்ட நாடுகொண்டு, கொண்ட நாடு கொடாதான்-பாண்டி மண்டலம் பரமேஸ்பரன்—சோழமண்டலம் இருபத்து நாற்காதமுடைய பாரரசு நிலைநிறுத்தித் திறைகொள்ளு மஹாவிஷ்ணு.

சோழமண்டலம் இருபத்து நாற்காதமுடைய மன்னரை-மடக்கி ஒடுக்கி-நாவசையாமல் நாடசையக் கொட்டமடக்கி அரசு கொடுத்துத் திறைகொள்ளும்-பற்பநாத முத்துச் சலாபமுடைய பெருமாள் பொதியமாமலை பாரா-சுரமுனி-மதுரைத் துரைத்தனம் அஷ்ட சம்பன்ன ராஜாதிராஜர் திங்கள் சுத்த வங்கிஷப் பிரம்ம தக்ஷணபூமி செங்கோல் செலுத்தும் சுவாமியவர்களான, சொக்கலிங்கத் திருமலைநாயக்கர் சுவாமியாரவர்கள்-திருக்கருணை பொருந்தும்-செம்பி

நாடு-பவுத்ரமாணிக்கச் சோனகர் பட்டணத்துப் பரி வாரணத்தரான முதலியாப் பிள்ளை மரைக்காயனை, ஜோனகர் பட்டணங் குடிபோய்க் காடு மேடு கொண்டு போயிருந்த படியால்—கர்த்தர்கள், சங்குமுகத் தீர்த் தத்திற் கெழுந்தருளிப் பட்டணங்குடியேற்றி நிற்கும் படிக்கு,முதலியாப் பிள்ளை மரைக்காயனைக் கற்பித்துப் பட்டணங் குடிநிரை தளங்கண்டு (ஏலினவாரு சுவாமி யவர்கள்) மரைக்காயனுக்குத் தாம்பூரப் பட்டயங் கொடுத்தபடி, அரமனையார்கள் கற்பித்த கட்டளை, ஜோனகர் பட்டணம்-மணக்காடு-கீழ்லூர்-வீர பாண்டி யன் பட்டணம்-புன்னைக் காயல்-சேர்ந்த மங்கலம்-குருவித் துறை-பழயகாயல்-முள்ளக் காட்டுக்குத் தெற்கு-மஞ்சணக்காயல்-வன்னி நாயக்கன்பட்டிக்குத் தெற்கு முக்காணி, ஆற்றங்கரைச் சந்தைக்குக் கிழக்கு -ஆவரங்காடு-வெள்ளைக் கோயில்-தண்ணீர்ப்பந்தல் நெடுங்கரை நெரிஞ்சித்திடல்—சினந்தோப்பு-அம்மன்-பேட்டை—பள்ளிப்பத்து—இவை முதலான குடி பொருந்தி யிருக்குங் குடிக்கு.

அமிஞ்சி - இறை-வரி-கடமை-சுவாம்பெரு-பாசி-வரி-சர்வமானீபமாகக் கட்டளையிட்டு - அரண்மனைக் குச்-சங்குலாபம்வரி-அளம்-ஆயம்-இன்புறவேர்-அடை யல்-முறியல்-நாடொப்பனையான குற்றத்திற்குப் பன் னிரண்டிற்குமேல்-தெண்டமும்-மன்னூர் தூத்துக்குடிப் பறங்கியரண்மனையார் கட்டளையும் - அரண்மனைத் தோணியும்—உடையார் தோணியும் இல்லாமற் சோதிக்கப்படாது. தொண்ணூற்றுறரைச் சலாபக் கல்லிற்கு ஏழு-ஓடமும்-சாகாக்கல்லும் - தொண்ணூற் றுறரைக் கல்லிற்குத் தினம் இரண்டு தோடையும்—ஆறு நாளைக்கு ஒருவலியம்-பரிவு தண்டமும் மேன் முத்து விலைகண்டு பத்துக்கு இரண்டும்—கன்னிமுதல்

வெள்ளாறு மணமேற்கோடி வரைக்குமுள்ளகுடியான கல்லுக்கு, இரண்டு வலைக்கு, இரண்டாயிரஞ் சிப்பியும் வலம்புரி விலைகண்டு, பத்துக்கு இரண்டும்-இவை முதலானவையெல்லாம்-திறையாதீனமுடைய கர்த்தனுக்குச் சலாப மணியத்துடனே-சேதுபதி ராணுவு (300) தொண்டமான்ராணுவு(200)துலையூருரெட்டி ராணுவு (200) மளவராயன் ராணுவு (250) குமார ரெட்டி நாயக்கன் ராணுவு(200)ஊத்தி மலைத்தேவன் ராணுவு (200) மற்ற அறுபத்தாறு பாளயக்காரரும் (670) ராணுவும்-சகல கோயில் மேளவாத்தியமும் நாட்டிலுள்ள பரியாரி ஐம்பது வண்ணான் கடுமை (பதினெட்டு) கல்குளத்து நாஞ்சி நாட்டு மந்திரவாதி (பத்து) வெட்டாள் (300) இவை முதலான ராணுவுக்கும்-அவரவரே பாளயக்காரர் செலவு கொடுத்துத் தை மாதம்-ராணுவு திருநகரி சேர்ந்து, அரண்மனை மணியமும் — தேசாதியுத்தியக்காரர் மணியமும்— நாட்டுக்கணக்கு—தலத்துக் கணக்குச் சேர்வையும்— சலாபத்தில் விடுதி, அரண்மனை பறங்கிவாடிக்குத் தெற்குத்-தூத்துக்குடியில் மாரியம்மன் கோயில் அடியரண்மனை விடுதியும் மரைக்காயனுக்கு, அம்பளவும் பளமாகும், அறுபது பொன்னும்-மன்னார் தூத்துக்குடிச் சலாபத்திற் (பத்துக்கல்நிந்தமும்) உப்பில், அரண்மனைக்குக் கணக்கு முதல் (ஈஇ-ரு) உம்பளமும்-சிந்தாத்திரையா பிள்ளையார் கோயில் இரத்தினவாதிகள் தெருவு-கடப்பைக்காரர் தெருவு ரெட்டிகுளம் கீழ்மேலோடிய பாதைக்கு வடக்கு-கொம்புத்துறைக்குத் தெற்கு-அரசடித் தெருவுக்கும் பன்னாட்டார் தெருவுக்கும்-உப்பாற்றங் கரைக்கும் கிழக்கு-இந்நான்கெல்கைக்குட் குடியிருக்கிற சர்வ நிலங்களையும்-முதலியாப்பிள்ளை மரைக்காயனுக்குத்-தண்ணீர்ப் பந்தல் வயலும்-மனையும்-குடியும்-மரியாதையும்-பள்

ளிப்பத்திற் கண்டு முதலில் (மகுதூம் பள்ளிக்குப் பாதியும்) சோனகர் கொண்ட காலி-ஹத்தீபு-பிரபுக்கள்-முதலியாப்பிள்ளை மரைக்காயன்சாலிப்பிள்ளை மரைக்காயன்-கஸ்ஸாலி அப்பு மரைக்காயன்-குறுந்துறை பிள்ளைசெட்டி-குமாரசாமி செட்டி-நாட்டுத் தாளுபதி தெல்லிமாமுநயினு கடற்றுளுபதி-ஜமாலுத்தீன் மரைக்காயன், நாட்டுக்கணக்கு ஊர்கணக்கு-செய்தாலித்தலையாரி-பிச்சைக்குயிவர்களுக்குப் பாதியுமாக முதலியாப் பிள்ளை மரைக்காயனுக்குப்-பட்டணத்தில்-அம்பலத்தில்-ஐந்திலொரு பங்கும்-மரைக்காயனுக்குத் தனது நல் ஐம்பதுக்கு-நாட்டு வரி-சிப்பிநிந்தமும்-இந்தக்குடியான பேர்களைக்-கிராமவழி மணியக்காரன்-பறங்கிப் பாளயக்காரர் தடைசெய்யப் போகாது (மரைக்காயன் முத்திரை யில்லாமல்) காவின் முடிக்க ஞாயங் கேட்கப்படாது அப்படிக் கேட்ட பேர்களை அரண்மனைக்கு (220) பொன் வாங்கிடவும்-சந்திராதித்தருள்ளவரைக்கும் உம்பளச் சுவந்தரீகமாகக்கட்டளையிட்டு இந்தத் தாம்பூரப் பட்டயங்கொடுத்தோம்.

கத்தர்கள் ஏலினவாரு சுவாமியாரவர்கள் திருமலை நாயக்கர் சுவாமியாரவர்கள்) ஊசிமலைப் பிள்ளையார்-மாரியம்மன் - பழனிகார் பொதிகைமாமலை அகஸ்தியர்-இராவண ராவண ராமச்சந்திரசுவாமியாரவர்கள் சீர்பாதத்திளுணை தப்பாது.

ஸஹாப்தம் 1475 ஸூத்துக்குச் செல்லா நின்ற மன்மதஸூ மகரமாதம் பூர்ண நட்சத்திரம்-சோமவாரம்-உத்திர வேளையில் அரண்மனையார்கள் கோம்பாடு ஒப்பமிட்டுத் தாம்பூரப்பட்டயம் வாசகமெழுதக் கட்டளையிட்டு, மதுரை நாட்டுக் கணக்கு-கோனேரியா பிள்ளை கற்பகமடலில் வரிந்து கண்டவாசகத்தைத்

தாம்பூரப்பட்டயத்தில் (ஏலினவாரு சுவாமியவர்களான திருமலே நாயக்கர் சுவாமியார்) வரந்திருச்சித்தத்தில் பஞ்சபூதமும், ஓமென்று ஒருமொழிகொண்டிருக்கும் வேளையில்-தளவாய் மீனுட்சி நாயக்கரவர்கள்-உத்தாரமாய்த் தேசாதியுத்தியம், திருவணுயக்கர் பிள்ளைக்குச் சோனகர் பட்டணம் சகல குடியான பேர்களும்-ஒருமனமாக ஓர்மொழிச் சொல்லுக்கு இந்தத் தாம்பூரப்பட்டயம், வெட்டிவரைந்து எழுதினேன் திருப்பதி கயிலாச நாத ஞசாரி.

தளவாய் மீனுட்சி நாயுடு,
திருவணு ஐயரவர்கள். கோனேரியா பிள்ளை
(கையெழுத்து தெலுங்கில்)

இந்தச் செப்புப்பட்டயம்-நகல்-நமக்கு-கீ-செய்யிது முகம்மது மரைக்காயரவர்கள்-குமாரர்-ஹபீபு முகம்மது மரைக்காயரவர்களாற்கிடைத்தது.

இங்ஙனம்.
சென்னை-புத்தக பரிபாலனத் தலைவர்
கஸ்ணகுமது-மகுதூமுகம்மதுப் புலவர்

திருப்புல்லாணிக் கோயில் கல்வெட்டு கூறும் பௌத்திர மாணிக்கபட்டினம் :-

No. 402. Tiruppullani.

(*A.R. No.* 116 *of* 1903).

ON A SLAB BUILT INTO THE FLOOR AT THE ENTRANCE OF THE FIRST GOPURA IN THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்திஸ்ரீ [||*] பூமலர் திருவும் பொருள்பட . . .
2 . . ம் தாமரைக் குவி[மு]லைச் செயப்புயத் திருப்-
3 [ப ெ]வதநாவில் வெ[ள்ளி]யதன் தாமரை [க]ாதல்-
4 மாது கவின்பெறத் தளைப்ப வெண்டிரை உ-
5 டுத்த மண்[டி]ணிகிடக்கை திருமிலமடக்கை . .
6 . . ஈமையில் களிப்பச் சமையமிநியும் கருமமு[க்]
7 தழைப்ப இமையவர் விழாக்கொடி இடங்-
8 தாறும் எடுப்ப கருங்கலி களல்கெட கடவுள்
9 வெதியர் அருந்தொழில் வெ[ழ்]வி செங்கொல
10 [வ]ளர சுருதியும் தமிழும் தொல்வளங் குலவ வெ-
11 [பா]ருதிறல்வாழி பூதலஞ் சூழ ஒருகை இருசெவி
12 மும்மத நாட்கொட்ட(அ)யிரா[வ]த முதல் செய்தர
13 கொற்ற[த்*]தெண்டிசை ஆனை எருத்து மெறி கண்-
14 டநா டெமதென கயல் களிகூர கொசளக் து-
15 ஹுலம் குச்சரம் பொசள ம்கதம் பொப்பளம் புண்-
16 டாம் ஈழங் கடாரம் தெவுடம் தெலிங்கம்ச் [செ*]சா-
17 ணகம் சின முதவாய் விதிமுறை [தழை] வெவ்வெ-
18 று வகுத்த முதுநிலக் கிழமையில் முடிபுனை [வெ]-
19 வந்தர்[க்*] கொருதனிநாயக[ன்] கின்று உலகேத்த [தி]-
20 ருமுடி சூடி செங்கொல் ஓச்சி கொற்றத்தரள குளி-
21 [ர்]வெண்குடை கிழ் கற்றைகவரி காவலர் வீச வி-
22 டைகதிர் நவமணி விரலிங்உமாசனத்து உடன்-
23 முடிசூடி உயர்குலத் திருப்ப மங்கைய[ர்*] மலர்கரங்-
24 [குவி]த்து பார்த்துஇவர் மங்கையர் திரண்டு வ-
25 ணங்கும் சென்னி சுடர் இளமவுலி சுடர் மணிமுடி

26 [சூ]டச் சி[வந்த] வீணை சிறடிகமல மதுகரம் கமல[ம்*]என அ-
27 ணுகும் உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளி
28 மாமுதல் மதிக்குலம் விளக்கிய கொமாற (கோமாற)பன்ம-
29 ரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதெவற்க்கு
30 யாண்டு எட்டாவது நாள் தொளாயிரத்து தொண்ணூற்-
31 [று]நாலிநும் மதுரொதையவளநாட்டு மாடக்கு[ள]க்கீழ் மது-
32 ரைக்கொ[யி]ல் பள்ளியறைக்[கூ]டத்துப் பள்ளிப்பீட மழவ-
33 [ரா]யனில் எழுந்தருளியிருக்க கீட்செம்பிநாட்டுப் பவித்தி[ர]-
34 மாணிக்க[பட்டின]கிழ்பால் சொனகச்சாமந்தபள்ளி-
35 யான பிழாரப்பள்ளி . . ழ்வார்க்கும் இவர் செய்ய[தி]-
36 ருவாய் மொழிந்தருளினபடிக்கு . . . மூள்ளிட்டு வெ-
37 வண்டுவெனவுக்கு பவித்திரமாணி[க்க]பட்டநு எந்தல்தெம-
38 ம்பக்கசொ[க்கந்] காராண்மை காணியாகவந்த . . . .
39 . . . படஇநான்கெல்லைக்குட்பட்ட நிர்[நிலமும்] நன்-
40 செய் புன்செய் . . . .
41 ப்பு உட்பட்ட நத்த . . . . . .
42 கிக்கி கிக்கிஉள்ள . . . . யொகமும்
43 வதானஅச்சும் [கொயில்] . . . . ள்ளிட்ட
44 பிவி சந்திவிக்கிரகப்பெறு மற்று மெப்பெர்பட்டனவு[ம்]
45 உட்பட எட்டாவதி னெதிரா மாண்டின் எதிராமாண்டுமு-
46 தல் சொனகப்பள்ளிச் ச[ந்தி] இறையிலிஆக இறுப்பதாக
47 இடப்பெறவெணு மென்று ஐயன் மழவராயர் நம-
48 க்கு சொன்னமையில் இங்கள்திருப்பணி உள்ளிட்டு வெண்-
49 டுவெனவுக்கு பக . . செக்குக்கும் நா[ம்] காராண்மை
50 குடுத்த ஆம்புத்தூர் நான்கெல்லைக் குட்பட்ட நிலம் காணியாட்சி
51 நஞ்செய் புன்செய்யும் நத்தமும் தொட்டமும் குளமும் [குளப்]-
52 பரப்பும் உட்பட்ட நில[த்தில்] பழந்தெவதானம் பள்ளி[ச்]-
53 சந்தம் நிக்கி நிககிஉள்ள நிலம் அந்தராயம் வினிஒகம் தரு-
54 வுதானஅச்சும் கா[ரியஆராட்சி] வெட்டிபாட்டம் பஞ்சபி-
55 லி சந்துவிக்கிரகப்பெறும் தறிஇறை செக்கிறை தட்டாரபா-
56 ட்டம் மற்றும் எப்பெர்பட்டனவும் இவ்வாண்டுமுதல் சொ-
57 னகப்பளளிச்சந்தி இறைபிலியாக இறுப்பதாக இ[ட்]-

58 டு வரியிலார் எழுத்திட்ட உள்(ள்)வரியும் நம் ஓலையும தர[ச்*]-
59 சொன்னொம் கைககொண்டு இப்படி சநதிராதிததவற
60 செல்வதாக கல்லிலும் செம்பிலும வெட்டிவித்து[க்*]கொ-
61 ள்க வென்று திருவாய்மொழிந்தருளி[னோ]ர்[|*] இவை [திரு]-
62 மல்லிநாட்டு . . . . டையான உயய[கின்]-
63 [ற]வொன் வீரசொழதெவனான குருகுலத[த]ரைய னெ-
64 ழுதத[|*] இவை செவ்விருக்கைநாட்டுசககரபாணிநலலூா-
65 ரரையன் விரதமுடிததானான பல்லவராயன் எழுததது[|*]
66 [திரிபுவ]னசசக்காவ[த்திகள்] கொனெரின்மைகொணடான்
67 [கீட்]செமபிநாட்டுப் பவித்திரமாணிக்கபட்டினத்து கி[ழ்]-
68 பால் சொனக . . . .

69 லம் வுரத்துக்கும் பொத்தங்க...........

70 வெண்டுவனவுக்கு இப்பவித்திரமாணிக்கப்பட்டினத்து

71 இருக்கும் மக்க......

72. மாக குடுத்தப(டி) மருதூர் நாங்கெல்லைக்குட்பட்ட

73 நிலமும் கருஞ்செய் புன்செய்யும் நத்த(மும்) (தொட்ட)-

74. குளமும் குளப்பருப்பும் உட்பட்ட நிலத்திலு

75. (ள்ள)தெவதானம் பள்ளிச்சந்தம் நிக்கி நிக்கி உள்ள

76. ...அந்தராயமும் வினியொகமும் தருவத [ானஅச்]-

77. (சும் காரிய)ஆராட்சி வெட்டி பாட்டமும் பஞ்சு பிலி சந்

78. திவிக்கிரகப்பெறும் தறியிறை செக்கிறை தட்ட(ார்)ப்பா-

79. ட்டம் மற்றும் எப்பெயர்பட்டனவும் உட்பட எட்-

80. டாவதின் எதிராமாண்டின் எதிராமாண்டு முதல் சொ-

81. ணகப்பள்ளிசந்(தி)இறையிலியாயிறுப்பதாகப் பெ

82. றவெணு மென்று ஐயன் மழவராயர் நமக்கு

83. சொன்னமையில் (த)ங்களுக்கு சிவனம் உள்ள-

84. வெண்டுவனவுக்கு இப்ப...கைக்கு (நாங்கள்)

85. நாட்டிற் காணியாக குடுத்த (இம்மருதூர் நான்கெ)-

86. லைக் குட்பட்ட நிர்நிலமும் கருஞ்செய் புன்
செய்-
87. யும் நத்தமும் தொட்டமும் குளமும் குளப்ப
(ரு)ப்பு
88. ம் உட்பட்ட நிலத்தில் பழந்தெவதானம்
பள்ளிசந்த-
89. ம் நிக்கி நிக்கிஉள்ள நிலம் அந்தராயமும்
(வினியெ)-
90. ாகமும் தருவதான அச்சும் காரியவாராட்சியும்
(வெட்)-
91. டிபாட்டமும் பஞ்சு...
92. பள்ளிச்சந்த இறையிலியா யிறுப்பதாக...
93. லார் எழித்திட்ட உள்வரியும் நம் ஓலை...
94. ண்ணெம் கைக்கொண்டு இப்படி(டி சந்திரா
தித்த)-
95. ர்வரைக் கல்லிலும் செம்பிலும்...
96. க்கொள்க(*) இவை அரும்பொ...
97. ...குளத்து . ஆழ்வான் ஆண்ட....
98. ......யபாண்டிய விழுப்பரைய நெழுத்து
(*) (இ)-
99. ...ண்டநாட்டு பெருமணலூர் அரையன் அ-
100. .. ரும்பெருமாளான விக்கிரமபாண்டிய தெவ-
101. (ந்) எழுத்து (*) இவை செவவிருக்கை நாட்டு...
102. நல்லூர் அரையன் விரதமுடித்தானை...
103. ...ன் எழுத்து ட......
104. ...த்தால் வாட்டரிக்கடமை(யி*)லெ செல்ல

—கல்வெட்டு எண் 402 A. R. No. 116 of 1903

Archaeological Survey of India. New Imperial Series Vol: LIV.

—South Indian Inscriptions (Texts) Vol: VIII. Ed. by: K. V. Subramanya Aiyer, B.A. 1937

சின்னச் சீறு-பாயிரப் பாடல்:-

கீழக்கரை பனீ அகுமது மரைக்காயர் :பாடிய சின்னச் சீறுவிற்கு கொடைவள்ளல் கீழக்கரை லெப்பை நயினு மரைக்காயர் இன்னூர் என்பதனைக் குறித்து பாடும் பயிரப் பாடல்கள் :

ஆதி நூல் உபநிடதம் தேர்கலையுமான் இலப்பை
ஆலீம் சேய் சொல்
போதம் உறு மெய்ஞ்ஞானச் சதக்கத்துல்லா ஆலீம்
புதல்வி பாலன்
சாதி நாயகன் வகுதை இலப்பை நயினுன் இதயத்
தடத்திற் பூத்த
பாத தாமரை இறசூல் புகழ்பாடக் கனகமழை
பரிவில் பெய்தான் (11)

நிவவுமணிப் பரிட்சை அறிபவர்கள்
சிரோமணி மாமுநயினுன் ஈன்ற
குவவுநெடும் தடம்புயமால் அபூபக்கர் இலப்பைதரு
கோமான் சீத
உவவுமதி நிகர்வதனன் இலப்பை நயினுன்மகிபன்
உவரி சூழும்
நவஉலகு தொழும்இறசூல் கதைபாட அளவறுசீர்
நல்கினனே. (12)

ஆரணத்து உள்பொருள் தேரும்
அப்துல் காதிர் நயினு ஆலீமுக்கும்

தாரணிக்கன் அறிவுசெறி செய்யிது
முகம்மது என்போன் தனக்கு முன்னேன்

பூரணத்தண் மதிமுகத்தான் இலப்பை நயினுன் மகிபன்
பொருவில் வெள்ளை

வாரணத்தின் நபிஇறசூல் காதை சொல
வேட்டதெல்லாம் வழங்கினனே (13)

கல்வத்து மாலை

மேலப்பாளையம், கானே, ஹஸன் அலிப்புலவர்

ஆம் ஹிஜிரி ஆயிரத்தோடு
இருநூற்றறுபத்திரு
லாம் வருடத்தில் றஜபி
லம்மதிமு தற்புதனில் (37)

கல்வத்தொலி கீழக்கரைக்
கல்வி நகரிற் பிறவிச்
செல்வத்துடன் சுந்தரமாய்ச்
சேமமாய்ப் பிறந்தனர் காண் (38)

பௌத்திரமாணிக்க பதி
பாக்கிய கீழக்கரையிற்
கௌத்துவ மணிநிகராய்க்
கல்வத்தொலி தாம் பிறந்தார். (39)

கிற்கருப் பட்டணமாங்
கீழக்கரை யானதிலே
நற்கருணையார் கல்வத்து
நாயகம் பிறந்தனர்காண் (40)

கேலிக்கரை என்றுரைக்குங்
கீழக்கரை நன்னகரிற்
சாலிக்கரை உட்பொருளைச்
சாற்றுமொலி தாம்பிறந்தார் (41)

அணுத்துகை மங்கலமாம்
அன்புறுங் கீழக்கரையிற்
றுணுக்கம் வெளியிற் சிறக்குந்
துய்யவொலி தாம் பிறந்தார் (42)

செம்பிநா டென்றுரைக்குஞ்
சீர்நகர் கீழக்கரையில்
தம்பிநாமஞ் சிறக்குஞ்
சாஹிபொலி தாம்பிறந்தார் (43)

பதிநினைத்தது முடித்தான்
பட்டணங் கீழக்கரையிற்
துதிநிலைத்த நெஞ்சமுள்ள
துங்கவொலி தாம்பிறந்தார். (44)

கீழக்கரையின் மறுபெயர்கள் சான்றுகளுடன்

அ) கொற்கை : 1. Gazetteers—Tinnevelly Volume I 1917.
2. Indische Alter Thomskunde. Volume II 1852 Von Lassen Christian
3. இம்பீரியல் கெஜட்டீயர் ஆப் இந்தியா இரண்டாம்பதிப்பு தொகுதி 8; பக்கம் 216.

ஆ) அனுத்தொகை மங்கலம். 1. கல்வத்து மாலை பாடல் 42.

இ) நினைத்தது முடித்தான் பட்டணம்:- 1. கல்வத்து மாலை. பாடல் 44.
2. கல்வெட்டு, கீழக்கரை சொக்கநாத சுவாமி கோயில் (அரசு கல்வெட்டு தொகுப்பு A. R 396-1907)

ஈ) பௌத்திரமாணிக்கப் பட்டினம் :— 1. கல்வத்து மாலை. பாடல் 39.
2. திருப்புல்லாணி கோயில் கல்வெட்டு No. 402; A.R. No: 116 of 1903.

உ) வச்சிர நாடு :— 1. பல்சந்தமாலை 2, 5, 8
2. சீதக்காதி திருமண வாழ்த்து 66, 214, 156.
3. படிக்காசுப்புலவர் கையறு நிலைப்பாடல் 8.

ஊ) வகுதை (வகுதாபுரி) :-

1. புலவர் நாயகம் நிருபச் செய்யுள் பாடல் 3.

2. நூறு நாமா-காகிரி நாட்டு வளம்

3. சீதக்காதி திருமண வாழ்த்து 15, 158, 255, 280, 406

4. சீதக்காதி நொண்டி நாடகம் 8, 156

5. பனீ அகுமது மரைக்காயர் பாயிரப்பாடல் 11

6. பல்சந்தமாலை. 2

7. நபி அவதார அம்மானை. (கண்ணி 7)

8. ஆயிரமச அலா 32.

எ) செம்பி நாடு :— 1. கல்வத்து மாலை. பாடல் 43

2. சீதக்காதி திருமணவாழ்த்து 63.

ஏ) கேலிக்கரை :— 1. கல்வத்து மாலை பாடல் 41.

ஐ) கிற்கிராப் பட்டணம் கல்வத்துமாலை. பாடல்-40

ஓ) கிர்க்கிரீ	அறபுத்தமிழ் நூல்கள்.
ஓ) காயல், காயல் நகர், காயல் துறை,	1. நொண்டி நாடகம் 6, 9, 65, 157, 175, 195, 221.
தென்காயல் :-	
	2. சீதக்காதி திருமணவாழ்த்து 222.
	3. காயல்பட்டணம் புலவர் நாயகம் நிருபச் செய்யுள் 4.

மேற்கோள் - பார்வை நூற்பட்டியல்

தமிழ்

1. தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டினர் குறிப்புக்கள்.
   கே. எ. நீலகண்ட சாஸ்திரி: தமிழில் மு. ரா. பெருமாள் முதலியார்.

2. ஆலிம் புலவர் ஆன்ற ஒழுக்கம்
   மதுரை ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்.

3. சீதக்காதி நொண்டி நாடகம்

4. சீதக்காதி திருமண வாழ்த்து—எட்டயபுரம் உமறு கத்தாப் புலவர்

5. நூறு நாமா—கீழக்கரை செய்யதகுமதுப் புலவர்

6. கல்வத்துமாலை—காளை அசனலிப் புலவர்

7. நாயக்கர் வரலாறு—அ. கி. பரந்தாமனார்

8. பாண்டியர் வரலாறு—டி. வி. சதாசிவப் பண்டாரத்தார்.

9. சீதக்காதி வள்ளல் — டாக்டர் S. முஹம்மது ஹுஸைன் நயினார்

10. சின்னச்சீறு—கீழக்கரை பனீ அகுமது மரைக்காயர்

11. சித்திரக்கவி முதலான பல பாடற்றிரட்டு. காயல்பட்டணம் புலவர் நாயகம் எனும் செய் கப்துல்காதிர் நயினூர் லெப்பை ஆலிம்

12. மஜ்மூ முஃஜிஜாத்து—செய்யிது முகம்மது ஆலிம் புலவர்.

13. வான்புகழ் காயல்பட்டண சரித்திரம். ஹாபிஸ் M. K. செய்யது அகமது

14. திருவாசகம் —மாணிக்கவாசகர்

15. இஸ்லாமியக் கலைக்களஞ்சியம்—II எம். ஆர். எம். அப்துற்றஹீம்.

16. சீறுப்புராணம்—கீழக்கரை உமறுப் புலவர். புலவர் நாயகம் பதிப்பு (கி. பி. 1842)

17. நபியவதார அம்மானை—கீழக்கரை கவிக்களஞ்சியப் புலவர் (உமறுப் புலவரின் குமாரர்)

ஆங்கிலம்

1. South India and Her Muhammadan Invaders.
S. Krishnaswami Aiyangar, M.A.

2. Imperial Gazetteer of India.

3. Ramanathapuram District
Gazetteer.

4. Arab Geographers' Knowledge
of South India.
Dr. S. Muhammad Husyn Nainar

5. Madras District Gazetters
Tinnevelly. Vol. I. 1917.

6. Political and General History of the District of Tinne velly in the Presidency of Madras. Rev. R. Caldwell 1881.

7. The Delhi Sultanate. R. C Majumdar, 1960.

8. The Travels of Marco Polo. Everyman's Library 1975

9. Ibn Battuta Travels in Asia and Africa 1325-1354
Tr. and Selected by H.A.R Gibb 1957

10. Rise and Fall of the Poligars of Tamilnadu
Dr. K. Rajayyan 1974

11. History of India As told by its own Historians
Vol. iii. Elliot and Dowson

12. Archaeological Survey of India. New Imperial Series Vol. LIV South Indian Inscriptions (Texts) Vol: VII, Ed. by K. V. Subrahmanya Aiyar, B.A., 1937

13. A Topographical List of the Inscriptions of the Madras Presidency. Collected till 1915, by N. Rangacharya, Vol II : 1919

அரபி :

1. Tuhfathun Nuzzaar fi Gharaibil Amsar wa Ajabiil Asfar (Arabic)—Ibn Battuta.

அறபுத்தமிழ்

1. காயல் பட்டணம் காரண சரித்திரம் காயல் பட்டணம் பாளையத்து லெப்பை ஆலிம்.

2. ஸில்ஸிலத்துல் காஹிரத்துல் மிஸ்ரிய்யா—சுல்தானுல்ஜமாலுத்தீன் வரலாறு. காயல்பட்டணம் பிரபு செய்யிது முஹம்மது நைனு.

பிற்சேர்க்கை.

வண்ணப் பரிமளப் புலவரின்

ஆயிர மசலா

குறிப்புரை : இன்று கிடைக்கப்பெறும் இஸ்லாமிய தமிழிலக்கியங்களில் இந்நூல் காலத்தால் பழமையானது. ஹிஜ்ரி 998-இல் ஆலிப்புலவர் பாடிய மிஃராஜ் மாலைக்கு பதினெட்டு ஆண்டுகளுக்கு முற்பட்டது இந்நூல். ஆயிர மசலா பாடியவர் கீழக்கரை செய்கு இசுகாக்கு புலவர் என்பதனை, ''செய்கு இசுகாக் எனும் வகுதை நாடன்'' என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் பாடிய ஆண்டு ஹிஜ்ரி 980 (கி. பி. 1565) இந்நூல் பாட கொடைநாயகராக இருந்தவர் ''கறுப்பாறு காவலர்'' (கடலாதிக்க அதிபதி) என வழங்கப்பெற்று வந்த கீழக்கரை ''சீதக்காதி வள்ளலின் பாட்டனா மகுமூது நைனு மரைக்காயர் ஆவர். ''கறுப்பாறு காவலர்'' என்பது ''சீதக்காதி திருமண வாழ்த்தில் அவரின்—சீதக்காதியின் மூதாதையர்களின் சிறப்பினைக் குறிப்பிடும் பொழுது.

''நிரைகொழிக்கும் முத்தும் நிதியும்
திரைக்கரத்தால்
கரைகொழிக்கும் செல்வக் கறுப்பாறு
காவலவன்'' (20)

எனக் கூறுவதனையும் காணலாம்.

இப்பாயிரப் பாடல்களிலிருந்து செய்கு
இசுகாக்கு புலவர் வகுதை நாடான
கீழக்கரையினைச் சேர்ந்தவர் என்பது
சந்தேகமற விளங்குகிறது.

'ஆயிர மசலா' என்னும் காவியத்தின் பாயிரப் பகுதியிலிருந்து மூன்று பாடல்கள் :-

இயற்றியவர்

புயலாய்ந்த மதுரை கீழ்பாற் பொருந்திய
சுலையுமானிற்
செயலாய்ந்த முல்லா மிய்யா செயிதுரை
செய்ய விந்நூல்
இயலாய்ந்த முதலி செய்கு இசுகாக்கெனும்
வகுதைநாடன்
பயகாம்ப ரருட்சேர் வண்ணப் பரிமளம்
பகர லுற்றான் (32)

இயற்றிய காலம்

இயலிறசூல் திருவடி சாய்ந்த தொளாயிரத்தி
னுடனெண்ப தாண்டின்
முயலும்ப்ர மாதூத வருடத்தில் முழங்குபுளி
யங்குளத்து முல்லாமிய்யா செயிதுமகுதூம்
வயதுமுப்பத் தொன்பான் தன்னிலிந்நூ
லுரைத்திட முத்தமிழாற் போற்றிப்
பயினுமையே மெனும்வாலப் பிராயந்தன்னிற்
பரித்துவண்ணப் பரிமளஞ் சொற்பகர்ந்தவாறே
(33)

நூலின் கொடை நாயகர்

அடற்பாரி லாலநபி புகழ்க்கூறு காவியமதனைப்
பேரொ டோதுமெனவே
மடற்பாளை வீசுமது ரையிற் கோல வீதிதொறு
மகத்தாயுள் ளோர்மகிழவே
யுடற்பாரின் மேவுமணி யணித்தூசு மாகனக
முகட்டாழி போலருளினோர்
கடற்பாரி னேகனருள் புறுக்கானி னீதியுள
கறுப்பாறு காவலவரே (34)